சங்கச் செவ்வியல் அறிமுகம்

# குறுந்தொகை அரும்புகள்

பன்முகப்பார்வையில் இலக்கிய விளக்கம்



தமிழண்ணல்

சங்கச் செவ்வியல் அறிமுகம்

# குறுந்தொகை அரும்புகள்

## பன்முகப் பார்வையில் இலக்கிய விளக்கம்

தமிழண்ணல்

**தமிழ்ப் பயிற்சிக் களம்**
புதிய தமிழியக்கம்
'ஏரகம்', 4/585 (732) சதாசிவ நகர்,
முதன்மைச் சாலை, மதுரை - 625 020.
பேசி : 0452-2533792 செல்-பேசி : 94430-64749

இந்நூல் கோவை, 'கற்பகம் பல்கலைக் கழகம்'
அறக்கட்டளை வழங்கிய பொருளுதவியுடன்
வெளியிடப்படுகிறது

முதற்பதிப்பு : தி.வ.ஆண்டு 2040, ஆடி (ஆகஸ்டு 2009)

உரிமை : ஆசிரியருக்கு

விலை உரூவா **50/-**

**நூல் விவரம்**

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | குறுந்தொகை அரும்புகள் |
| உரையாசிரியர் பெயர் | : | தமிழண்ணல் |
| நூலின் தன்மை | : | இலக்கிய அறிமுகம் |
| முதற்பதிப்பு | : | ஆகஸ்டு, 2009 |
| தாளின் தன்மை | : | வெள்ளைத்தாள் |
| நூலின் அளவு | : | கிரவுன் |
| அச்சு எழுத்து அளவு | : | 10 புள்ளி |
| பக்கங்கள் | : | 144 |
| விலை | : | உரூவா 50/- |
| அச்சிட்டோர் | : | மோனார்க் கிராபிக்ஸ், சென்னை |
| ஒளி அச்சுக் கோர்வை | : | ஐ கேட்சர், மதுரை |
| வெளியீடு | : | தமிழ்ப் பயிற்சிக்களம் |

---

SELLING RIGHTS

**MEENAKSHI PUTHAKA NILAYAM**
Mayura Complex 48, Dhanappa Mudali Street, Madurai-625 001.
Tel: Off: 2345971 Resi: 2560517
Email:meenakshiputhakam@hotmail.com

# நமது கடமை

தமிழர்களில் மிகப்பலருக்குத் தமது மொழியின் அருமையும் தமிழ் இலக்கியப் பெருமையும் பற்றித் தெரியாது.

வண்டி ஓட்டுபவன், சுமை தூக்குபவன் முதல் உழவர், தொழிலாளர், பல்வேறு துறை வல்லுநர், அறிவியலாளர், தொழிலதிபர், வணிகர் எல்லோருக்கும் தமிழ் பற்றிய தெளிவான அறிமுகமும் இல்லை; ஆர்வமும் இல்லை. அவர்கள் தமிழ் பற்றிய எதனையும் தம்மின் வேறாகக் கருதுகின்றனர். தமிழ் தங்கள் அடையாளம் என்ற நினைவே இல்லை. இவர்களில் குறிப்பிடத் தக்க சிலரே, நூற்றுக்குப் பத்து விழுக்காட்டினரே தமிழ் மொழி, இலக்கியம், சமயம், பண்பாடு, நாகரிகம் பற்றி ஆர்வம் காட்டி அறிந்துள்ளனர்.

புராண இதிகாச அதியற்புதக் கதைகள் பற்றி அறிந்துள்ள அளவு, சங்கச் செவ்வியல் இலக்கியங்கள் பற்றி அறிந்திலர்.

தமிழராகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் தமிழின் வேரனைய சங்கச் செவ்வியல் டற்றிய அறிமுகம் வேண்டும். தமிழ் மாணவர்கள், ஆசிரியர்கள், ஆய்வாளர்களிடம் இச் செவ்விலக்கியம் பற்றிய அறிவு முழுமையாய்ப் பதிந்தால், அது தமிழ் மக்கள் அனைவருக்கும் சென்றுசேர வாய்ப்பாகும்.

இந் நன்முயற்சிக்கு, கோவை, கற்பகம் பல்கலைக் கழகத்தின் மாண்பமை வேந்தர் **இராச வசந்தகுமார்** அவர்கள் உதவ முன்வந்திருப்பது தமிழ் செய்த தவப்பேறாகும். இந்நன் முயற்சி வெற்றிபெற அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

**தமிழண்ணல்**
*12.8.2009*

'ஏரகம்'
சதாசிவநகர்
மதுரை-*625020.*

# உள்ளுறை

*பன்முகப் பார்வை*

| | | பக்கம் |
|---|---|---|
| 1. | வாழ்க்கை விழுமியம் வாழ்விக்கும் தமிழியம் | 9 |
| 2. | உள்ளங்கள் ஒன்றிடும் அன்றிற் பறவைகள் | 55 |
| 3. | உச்சத்தைத் தொடும் உணர்ச்சி ஓவியங்கள் | 84 |
| 4. | மனத்தைக் கவரும் மாணிக்கப் பரல்கள் | 114 |

# செவ்வியல் இலக்கியம்

**‘செவ்வியல்’** என்பது உயர்ந்தது, சிறந்தது, கண்கவர் வனப்புடையது என, இப் பண்புகளையுடைய ஆடைமுதல் அணிகலன் வரை இன்று குறிக்கின்றது. செவ்வியல் நடனம், செவ்வியலிசை, செவ்வியற் சிற்பம் என அழைக்கின்றனர்.

**செவ்வியல் இலக்கியம் - Classical Literature** என்ற தொடர், மேலை நாட்டில், கி.பி.15ஆம் நூற்றாண்டிற்குப் பிறகே, உருவாகி, நடைமுறைக்கு வந்தது. கி.பி.15ஆம் நூற்றாண்டு முதல் பதினெட்டாம் நூற்றாண்டு வரை இத்தாலி, பிரெஞ்சு, செருமன், ஆங்கிலம் முதலான ஐரோப்பிய மொழிகள் மறுமலர்ச்சி பெற்று வளரத் தொடங்கின. இதனை மறுமலர்ச்சிக் காலம் என்பர். இக்கால இலக்கியங்கள் பழைய கிரேக்க, உரோமானிய இலத்தின் இலக்கியங்களைப் பின்பற்றிச் செவ்வியல் தன்மை பெற்று வளர்ந்தபோது, ஆங்கிலேயர் அவற்றைப் **புதிய செவ்வியல்** என அழைத்துக் கொண்டனர்.

இவர்களின் வளர்ச்சிக்கு கிரேக்க இலக்கியமே ஊற்றுக்கண் எனவும் இலத்தின் மூலமாக அது தன் செல்வாக்கைப் பரப்பியதெனவும் உணர்ந்து, முதலில் ‘கிரேக்க இலக்கியம்’ ஒன்றையே செவ்வியல் இலக்கியம் எனப் போற்றினர்.

உரோம நாட்டில் வளர்ந்த இலத்தின் இலக்கியம் இரண்டு நிலைகளில் வளர்ச்சிகண்டது. அதன் முற்பட்ட கால இலக்கியம் அனைத்தும் கிரேக்க இலக்கியத்தைப் பின்பற்றியே உருவாக்கப்பட்டன. அலெக்சாண்டருக்குப் பிறகே அவர்கள் தங்களுடைய இலக்கியம் எனக் கூறத் தக்கனவற்றை வளர்த்தனர். இலத்தின் ‘சமயமொழி’ ஆனபோது, அதன் பெருமை ஓங்கியது. எனினும் இலத்தினின் வாயிலாகக் கிரேக்க இலக்கியமே தன் செல்வாக்கை ஊடுருவவிட்டது.

இவை ஒருபுறம் இருக்கக் காலப்போக்கில், தொன்மை யுடைய உலக மொழிகள் பலவும் செவ்வியல் மொழிகள் எனப் போற்றப்படலாயின.

சீனம், ஹீப்ரு, அரேபியம் என்பனவும் வடமொழி, பாரசீகம், பாலி, பிராகிருதம் என்பனவும் தொன்மை காரணமாகச் செவ்வியல் மொழி என அழைக்கப்படுகின்றன. இந்தியப் பேரரசும் ஹீப்ரு, சீனம் நீங்கலாக, ஏனைய ஐந்து மொழிகளைச் (அரேபியம், வடமொழி, பாரசீகம், பாலி, பிராகிருதம்) செவ்வியல் மொழிகள் எனப்பட்டியலிட்டு, அவற்றுக்கெனத் தனியே நிதி ஒதுக்கி ஒரு நூற்றாண்டுக்கு மேலாகப் போற்றி வளர்த்து வருகின்றது. அவை சடங்கு, சமய மொழியாக மட்டும் இருந்தாலும் இன்றைய இலக்கிய வளர்ச்சியின்றிப் புனிதமொழிகள் என்ற போர்வையில் மட்டும் பேருக்கு விளங்கினாலும் ஏராளமான நிதி அவற்றுக்குத் தரப்படுகின்றன. சமஸ்கிருத மொழிக்கு மட்டும் ஐந்து பல்கலைக் கழகங்களுக்கு மேற்பட்டவற்றுடன், பல்வேறு மையங்கள், துறைகள் வழியாகப் பலகோடி நிதி ஒதுக்கப்பட்டு, ஓசையின்றி வழங்கப்படுகின்றன.

தமிழ்மொழி தோன்றிய காலந்தொட்டு வடமொழிக்கு நிகரானதும் அதைவிட மேம்பட்டதுமான தகுதிகள் பல பெற்றதாகும். பிற நாட்டவர்களாலும் 'செவ்வியல் மொழி' எனக் கடந்த சில நூற்றாண்டுகளாகவே அது காரண காரியத்துடனும் சான்றுகளுடனும் விளக்கப்பெற்று வந்துளது. இருப்பினும் நடுவணரசு 'அதிகார பூர்வமாக' 12.10.2004 இல்தான் தமிழையும் செவ்வியல் மொழி என அறிவித்தது.

உடனே தமிழிலும் வடமொழியிலும் கடன்பெற்று உருவான மொழிகள், 'புதிய செவ்வியல்' என அறிவிக்கத் தக்கனவாயினும் வடமொழியுடன் போட்டியிட நினைக்காத அவைகள் தமிழுடன் போட்டியிட்டு, தமிழைவிடக் கூடுதலான வாய்ப்பு வசதிபெற முயன்று வெற்றிபெற முந்துகின்றன.

இந்நிலையில் தமிழக அரசும் நடுவணரசும் தமிழுக்கு ஒரு மறுமலர்ச்சி தரும், இடைக்காலச் சோழராட்சியில் ஏற்பட்டது போன்ற பேரெழுச்சி முடுக்கிவிடப்படும் என எதிர்பார்க்கின்றோம். ஆயினும் வான்மழை நோக்கி வாடி நிற்கும் பயிர்போன்ற நிலையே தொடர்கிறது. இந்நிலையில் தமிழின் சிறப்பை உலகெலாம் பரப்புகிற பணியை, அரசுடன் சேர்ந்து தமிழமைப்புக்களும் ஆர்வலர்களும் வள்ளல்களும் அறிஞர்களும் கைக்கொண்டு முயன்று, உழைக்க முன்வரவேண்டுமென்பதே எம் வேணவா.

வெறும் அறிவிப்பே வளர்ச்சி என முடிவுகட்டிவிட்டால், மீண்டும் முன்னைய தளர்ந்த நிலையே நீடிக்கும். சென்னைப் பல்கலைக்கழகம் முதலில் சமஸ்கிருதத்தில் சிரோமணி படித்து முடித்தவரே, தமிழ் வித்துவான் படிக்கலாம் என விதி வகுத்தது. பிறகு சமஸ்கிருதத்தில் ஓரிரு தாளேனும், நுழைவுத் தேர்வு போலப் படிக்கவேண்டும் என்றது. தமிழ் முதுகலையை ஆங்கிலத்திலேயே - ஆங்கில வழி மூலமாகவே படிக்கவேண்டிய சூழல் பல காலம் இருந்தது.

தமிழை வட்டாரமொழி, நாட்டுமக்கள் பேசும் அடிமை மொழி, (Vernacular language), தற்காலமொழி (Modern Indian Language) என முத்திரை குத்தி, அதற்கேற்ற பாடத் திட்டம், பட்டம் முதலான ஒதுக்கீடு செய்து கீழ்மைப்படுத்தியது.

அதுபோழ்து பரிதிமாற் கலைஞர் (எ) வி.கோ.சூரிய நாராயண சாத்திரியார், சென்னை கிறித்தவக் கல்லூரியில் தமிழாசிரியராக இருந்தார். அவருக்கு இவ்விழிநிலை கண்டு மனம் பொறுக்கவில்லை. வடமொழிக்கு நிகராகத் தமிழுக்கு இடம் தரவேண்டுமென்று போராடினார். தாம் எழுதிய தமிழ் இலக்கிய வரலாற்றில், இதுபற்றிக் கண்டித்து எழுதினார். சென்னைப் பல்கலைக் கழகத்திற்குட்பட்ட கல்லூரியில் வேலை பார்த்தாலும் தன்மானத்துடன் செயற்பட்டார்.

"தமிழ் செம்மொழி என்பது திண்ணம். இதுபற்றியன்றே தொன்றுதொட்டுத் தமிழ்மொழி, 'செந்தமிழ்' என நல்லிசைப்

புலவரால் நவின்றோதப் பெறுவதாயிற்று. ஆகவே தென்னாட்டின்கட் சிறந்தொளிரா நின்ற அமிழ்தினுமினிய தமிழ்மொழி எவ்வாற்றான் ஆராய்ந்த வழியும் 'உயர்தனிச் செம்மொழி'யேயாம் என்பது நிச்சயம். இவ்வளவுயர்வும் சிறப்பும் வாய்ந்த அருமைத் தமிழ் மொழியை உண்ணாட்டுப் புன்மொழிகளோடு ஒருங்கு வைத்தெண்ணுதல் தவிர்ந்து, வடநாட்டுயர் தனிச்செம்மொழி சமஸ்கிருதமெனக் கொண்டாற் போலத் தென்னாட்டுயர்தனிச் செம்மொழி தமிழெனக் கொண்டு புகுதலே ஏற்புடைத்தாம்.''

இவ்வாறு தொடங்கிய போராட்டம் வெற்றியாக முடிந்துளது. எனினும் இன்னமும் தொடர் முயற்சிகள் பல தொடங்கப்படவில்லை. சங்கச் செவ்வியல் பற்றிய ஆய்வுகள் ஒருபுறம் வளரவேண்டும். மறுபுறம் இதனைப் பொதுமக்களிடம் கொண்டு போவதற்கான முயற்சிகளில் ஈடுபடவேண்டும்.

கீதையைப் பரப்புவதற்கென்றே 'கீதா பிரஸ்' தொடங்கி, எத்தனையோ நிறுவனங்கள் அல்லும் பகலும் பாடுபடுகின்றன.

இராமகிருஷ்ணபரம ஹம்சரின் போதனைகளை உலகெங்கும் பரப்ப எடுக்கும் முயற்சிகளை, நாமும் ஏன் பின்பற்றலாகாது. உயர்ந்த தாளில் அச்சிட்டு, குறைந்த விலைக்கு விற்கின்றனர்.

நாமும் ஒரு குழுவாக அமைந்து, பலவகைத் திட்டங்கள் வகுக்கவேண்டும்.

செம்மொழி மையத்திற்குத் தமிழகத்திலும் இந்திய நாட்டிலும் உலகம் முழுவதிலும் கிளைகள் தோற்றுவிக்க வேண்டும்.

செம்மொழி பற்றித் தமிழில் பல்வேறு நூல்களும் உலக மொழிகளில் அவற்றின் மொழியாக்கங்களும் நாள் நடைமுறையாக வெளிவந்த வண்ணம் இருக்கவேண்டும். குழந்தைகளுக்கென்று ஒரு வகையின; பொதுமக்களுக்கென்று ஒரு வகையின; இளையோர்க்கென்று ஒரு வகையின; ஆய்வாளர்க்கென்று பார்வை நூல்கள் வெளியிடல் வேண்டும்.

# 1

# வாழ்க்கை விழுமியம் வாழ்விக்கும் தமிழியம்

ஒப்பிலக்கியத்தில் ''எதனையும் சிறந்தது சிறந்தது என்று கூறாதே, ஒரு சிறப்பையேனும் எடுத்துக் கூறு'' என்பார்கள். குறுந்தொகை உலக மரபுவழிக் குறும்பாடல்களின் கருவூலம். தமிழ்ச் செவ்வியல் இலக்கியம் உலகச் செவ்வியல் இலக்கியங்களினின்றும் வேறுபடும் ஒரு தனித்தன்மையை உடையது. அது என்ன?

## தனித்தன்மை

1) கிரேக்கம், இலத்தின், சமஸ்கிருதம் போல்வனவற்றின் தொன்மையுடையனவற்றில் கடவுளர்கள், தேவதைகள், மனிதனுமல்லாத தேவ உலகினருமல்லாத கலப்பட மாந்தர்கள் இடம் பெறுவர்.

   தமிழ்ப் பழம்பாடல்களில் இவ்வுலக மானிடர்கள் மட்டும் இடம்பெறுவர். அன்றாடம் நேரில்காணும் ஆணும் பெண்ணும் இயற்கையும் இவ்வுலகமுமே இடம்பெறக் காணலாம். பழங்கால நிலத்தை, இயற்கையை, விலங்கினம், பறவையினம் போன்ற வற்றைக் கண்ணெதிரே, அதன் பருவநிலை வேறுபாடுகளுடன் பார்க்கலாம். அச்சூழல்களுக்கேற்ப வாழ்ந்த மனிதர்களைக் காணலாம். இன்று கிடைத்துள்ள 2381 பாடல்களும் தனித்தனிக் குறும் படங்களாகும்.

இங்கு முருகன், கடவுளர், புத்தேளிர் உலகம், கொல்லிப் பாவை, தாக்கணங்கு, சூரர மகளிர், அணங்கு என வருவன, அவற்றைப் பற்றியல்லாமல், மாந்தர் வாழ்வைப் பாட, ஆங்காங்கு துணையாக இடம்பெறுதல் மட்டுமே உண்டு.

2) ஏனைய உலக இலக்கியங்களில் நம்ப முடியாத அதியற்புத நிகழ்வுகள், இயற்கை இறந்த புனைவுகள் கூடுதலாக வரும். தமிழ்ச் செவ்விலக்கியத்தில் உயர்வு நவிற்சி, மிகமிகக் குறைவாக வருவதுடன், அது ஓரளவு நம்பக் கூடிய தன்மையுடன் அமையும்.

3) ஏனையவற்றில் பரலோகம், மேலுலக நிகழ்வுகள், மனித நிலைக்கு அப்பாற்பட்ட அனுபவங்கள், உலக வெறுப்புடன் கூடியதும் மேலுலகக் கற்பனை வாழ்வில் திளைப்பதும் போல்பவை கூடுதல். தமிழிலோ மேலுலகம் என்ற குறிப்புண்டு; மறு பிறவி பற்றிய குறிப்புண்டு. ஆனால் அவையும் இவ்வுலக வாழ்வைச் சிறப்பிக்கவே துணையாக அமையும். அவைபற்றிய வருணனைகள், விளக்கங்கள் எவையும் இல. வீடுபேறு என்பது விடுபடுவது. விடு-வீடு; முதனிலை திரிந்த தொழிற்பெயர். இவ்வுலக இன்பங்களை நெறிமுறைப்படி நுகர்ந்தபின், சிறிது சிறிதாகத் தொடங்கி ஆசை, பற்று, துன்பங்களினின்றும் முற்றிலும் விடுபட முயல்வதே வீடுபேறு. அதன்பின் நடப்பதை யாரறிவார்? அதனால் ‘வீடுபேறு’ என்பதுடன் நிறுத்திக் கொண்ட தமிழனின் சமயமே, உலகச் சமயமாகும்.

இக் குறிப்புக்கள் தமிழ்ச் செவ்வியல் அனைத்திற்கும் பொருந்தும். காப்பியமாதலால், சிலப்பதிகாரம், மணிமேகலையில் இயற்கை இகந்த நிகழ்வுகள், நம்ப முடியாதவை சிற்சில இடம்பெறினும் மானுட வாழ்க்கை பற்றிய அழுத்தமான கருத்துக்களும் கற்பனைகளுமே கூடுதலாகத் தலைமையிடம் பெறும்.

## காம இன்ப உணர்வு

காம இன்ப உணர்வு என்பது சிற்றுயிர்களுக்கும் இயல்புணர்ச்சியாகக் காணப்படுகிறது. செடி கொடி மரம் அனைய ஓரறிவுயிர்களும் மலர்களிலுள்ள மணத்தாலும் நிறத்தாலும் வண்டுகளை ஈர்த்து, அதன்வழி 'மகரந்தச் சேர்க்கை'யுற்று, இனவிருத்தி செய்கின்றன.

மாந்தர் உளவியலை ஆழ்ந்தாராய்ந்த சிக்மண்ட் பிராய்டு என்பார், சிறு குழந்தைகளிடம்கூடப் 'பாலுந்தல்' தோன்றி விடுவதாக விளக்கியுள்ளார். அவர்வழி வந்தவர்கள் உயிரினத்திற்குப் பாலுந்தலேயன்றி, 'உயர்வுந்தலும்' உண்டென்றனர். தான்வாழ, இன்புற, முன்னேற, வளர நினைப்பது அது.

ஏறத்தாழ மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, உயிரினங்களை ஓரறிவுயிர் முதலாக, ஆறறிவுயிர் ஈறாகப் பகுத்ததை, தொல்காப்பியம் பதிவு செய்கிறது (மரபியல்). மரம் செடி கொடியனைய பயிரினங்கள் தொடுதல் (உறுதல்) உணர்வுடைய ஓரறிவுயிர்கள். மனிதன் மெய், வாய், மூக்கு, கண், செவி எனும் ஐயறிவுடன் ஆறாவதான பகுத்தறியும் - சிந்திக்கும் மனம் என்பதும் சேர்த்து, ஆறறிவுடையவன் எனப்பட்டான். இடைநின்ற விலங்கினம், பறவையினம் போல்வனவற்றுக்கும் 'மனம்' உண்டென்று ஒரு சாராரும் இல்லை என ஒருசாராரும் விவாதித்து வந்துள்ளனர்.

இவ்வுயிர்களுக்கு **வயிற்றுப்பசி** போல, பாலுந்தலாம் காமப்பசி (**உடற்பசி**) இயல்பாகவுண்டு. உடல்சார்ந்த இப் பாலுந்தலே 'காமம்'. இதனை இழிவுடையது எனக் கருதுதல் தகாது. இவை இரண்டும் தவிர தான் மேனிலைபெற, வளர, முன்னேற, பாராட்டப்பட வேண்டுமெனும் **'உயிர்ப்பசி'**யும் ஒன்றுண்டு. இவையாவும் இயல்பானவை; பிறவியில் ஒட்டியவை.

இதனால் தமிழர்கள் மனித வாழ்வை அகம், புறம் எனக் கொண்டு, அகம் என்பதை மேலே சுட்டிய, காமஇன்ப உணர்வு

வழி, அகமனத்தினுள் நுகர்வதெனக் கண்டறிந்தனர். இந்த அகவாழ்வு செம்மைப்பட்டால், புற வாழ்வு நிலைகளும் செம்மைப்படும்.

தொடக்கத்தில் 'அகம்' எனும் பாலுணர்வு வாழ்வு விலங்கின வாழ்வாக இருந்தது. அதனை நெறிப்படுத்த, கட்டுப்படுத்த, ஒரு கட்டிற்குள் கொண்டுவர முயன்றதன் பயன் அகத்திணைப் படைப்பு. எனவே காதற்பாட்டு வேறு; அகத்திணைப் பாட்டு வேறு. அகத்திணைப் பாட்டு, ஆண்பெண் மன ஈடுபாடு, உறவு பற்றியது; குடும்பம், குடிவழி, ஊர் உலகச் சமுதாயத் தொடர்புடையது.

காதலன் காதலி, அல்லது கணவன் மனைவி, இவர்களின் பெற்றோர்கள், உற்ற தோழி தோழன் நண்பர்கள், இவர்களைக் காணும் அல்லது பேணும் உலகம். இவற்றை மட்டுமே கொண்டு, ஒரு சிறந்த, மரபுக்கட்டமைந்த இலக்கியத்தைப் படைத்தனர். இதில் ஆணது உடற்கட்டு, பருவநிலை, உலகத் தொடர்பு, இயற்கையிலமைந்த கூறுகள் ஒருபுறம்; பெண்ணது உடற்கட்டு, பருவநிலை, இன விருத்திக்கான வாழ்வுநிலை, உலகத் தொடர்பு, இயற்கையிலமைந்த கூறுகள் மறுபுறம்.

இதனால் மானுட வாழ்வு என்பது ஒரு கயிறு இழுப்புப் போட்டியானது. ஒரு சமயம் அவன் பக்கம் இழுப்பு அதிகம், கூடுதல் குறைகள், நிறைகள்; பிறிதொரு சமயம் அவள் பக்கம் ஈர்ப்பும் ஆற்றலும் மேலாண்மையும் கூடுதலாதல், நிறை குறைகள்.

இதனால் பெண்ணைக் கொண்டு, ஆணைத் திருத்தலாமே யன்றி, ஆணைக் கொண்டு திருத்தமமைவது மிக அரிதே என உணர்ந்தனர். இதனால் அகப் பாடல்களில், பெண்ணின் மனஉணர்வுகள் பற்றிய கருத்துக்களும் கற்பனைகளுமே மிகுதியாக உள்ளன. ஆயினும் அப்பெண்ணின் மன உணர்வு நிலைகள் அனைத்தும் ஆணைப் பற்றியனவே. பத்தில் இரண்டு மூன்று விழுக்காடு வரும் ஆணின் மனஉணர்வுகள், பெண்ணைப்

பற்றியன. சுருக்கமாக அகப்பாடல்களாக இன்று கிடைக்கும் பாடல்கள் அனைத்திலும் இம் மனவுணர்வுப் படப்பிடிப்பைத் தவிர, பிற பல புற உலகப் புனைவுகள் மிகமிகக் குறைவு.

இதிலிருந்து ஓர் உண்மை புலனாகிறது. பலரும் இன்று வாதிடுவதுபோல, பழங்காலம் ஓர் 'ஆணாதிக்க' சமுதாயமாகவே காணப்படுகிறது. இதற்குப் பாடியவர்கள் குற்றவாளிகள் அல்லர். அவர்கள் கண்கண்ட உலகவழக்கைக் கருவாகக் கொண்டு, கவிதை படைத்தவர்கள். மென்மைமிகு உடலும் உணர்வுமுடைய பெண்ணுடன் சமுதாயம் விளையாடியது. இதற்கு ஆண்களே யன்றிப் பெண்களும் காரணமாகின்றனர். இன்றும் திரைப்படம், தொலைக்காட்சிகளைப் பார்த்தால், வெட்கத்தை விட்டுத் தங்களைத் தாங்களே விளம்பரப்படுத்தி, விலைபேசி விற்கும் பெண்களே, பிற பெண்களையும் கேவலப்படுத்துகின்றனர்.

ஆயினும் ஒரு பெண்ணாகப் பிறந்தவள் தன்னைக் காத்துக் கொள்ளவேண்டும்; பொறுமை காக்கவேண்டும்; ஆடவரை முடிந்தமட்டில் திருத்த முயலவேண்டும்; குடிவழி - குடும்பநல வாழ்வு நிலைகளை ஒரு கட்டமைப்புக்குள் கொண்டுவர ஈக உணர்வுடன் செயற்பட வேண்டும் என்பனவே தொடர்ந்து, திரும்பத் திரும்ப வலியுறுத்தப்படுகின்றன. சங்க அகப்பாடல்கள் பெண்களின் அகஉணர்வுகளுக்கு ஒரு வெளிப்பாடு தருவதன் மூலம் அவளைப் பக்குவப்படுத்த முயல்வது போலவும் அவளின் நற்குண, நற்செயல்களின் மூலம் ஆணையும் திருத்த முடியுமா என்பது போலவுமே பாடப் பெற்றுள்ளன.

ஆடவர்கள் இந்த வரம்புவேலிக்குக் கட்டுப்பட வேண்டும் என்ற, நடைமுறை வாழ்வை நிலைநாட்டுவது போன்ற மனப்போக்கு உருவாக்கி வளர்க்கப்பட்டுள்ளது. தீமை தீமையை வளர்க்கும்; நன்மை நன்மையைத் தரும்; பெருந்தன்மை பெருந்தன்மையைத் தூண்டும் என்பன உண்மையானால், சங்கப் பாவலர்களின் உள்ளக் கிடக்கையை ஓரளவு உணரலாம்.

இதற்கு அடிப்படைச் சான்றாக மனைவி, இல்லாள் என்ற சொற்களையும் அவற்றுக்கு எதிர்ச்சொற்கள் இன்மையையும் குறிப்பிடலாம்; ஒரு சமுதாயம் வளர்க்க விரும்பிய பண்பாட்டின் விளைவு எனக் கருதலாம். 'மனைக்கு விளக்காகிய மடந்தை' என்றனர்; அவளைக் 'குலவிளக்கு' என அழைத்தனர். பாவேந்தர் 'குடும்ப விளக்கு' எனக் குறுங் காப்பியங்கள் எழுதியது அதன் தொடர்ச்சியே. 'அஞ்சவந்த மனைவியின் உரிமை' (1092) என்ற தொல்காப்பிய வழிப்பட்ட பல சான்றுகளும் இதை மெய்ப்பிக்கின்றன.

இவற்றாலெல்லாம் 'பெண்ணடிமை' தீர்ந்ததா எனத் தெரியவில்லை. பெண் தன்னை எண்ணி வருந்தவும் கண்ணீர் விடவும் அடிமை நிலை தீரவும் முயன்றமை மட்டுமே தெரிகிறது.

இனிக் குறுந்தொகையின் முதற்பாடலைக் காண்போம்:

**செங்களம்படக் கொன்று அவுணர்த் தேய்த்த**
**செங்கோலம்பின் செங்கோட்டு யானை**
**கழல்தொடிச் சேஎய் குன்றம்**
**குருதிப் பூவின் குலைக்காந் தட்டே**

இதன் பொருள் : போர்க்களம் இரத்தத்தால் சிவக்கும்படி, பகைவரைக் கொன்று, அவுணர்களை அழித்தவனும் இரத்தம் படிந்து சிவந்த அம்பினையுடையவனும் இரத்தத்தால் சிவந்த தந்தங்களையுடைய யானைமீது வருபவனும் கழலயிட்ட தோள் வளையத்தை அணிந்தவனுமான செந்நிற முருகனின் குன்றம், இரத்தம் போல் சிவந்த குலையாகப் பூக்கும் செங்காந்தள் பூக்களை உடையது.

(அவுணர் - சூரபன்மா முதலிய அசுரர். தொடி-தோள் வளையம். சேய் - செந்நிறத்தன், முருகன். குருதி - இரத்தம். காந்தட்டு - காந்தளை உடையது.)

ஏதோ முருகனுறையும் மலையைப் பற்றிய பாடல்போல் உளது. முருகனின் குன்றம் செங்காந்தட் பூக்களையுடையது. அம்

முருகன் யார் என்பது முதல் மூன்றடிகளில் உளது. அகப் பாடல்கள் பற்றிய முழுமையான அனுபவ அறிவுடையவர்களுக்கே, இப்பாடற் கருத்து விளங்கும். இதற்கு அடிக்குறிப்பு எழுதியவர் ‘தோழி கையுறை மறுத்தது’ என்று குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் தழையையே உடையாகவும் மரப்பட்டைகளை மரவுரியாகவும் அணிந்துகொண்டு வாழ்ந்த காலம் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது. நூலாடை, பட்டாடை பற்றிய குறிப்புள்ள சங்க காலத்திலும் தழையுடை அணிவது, ஒரு சடங்காகத் தொடர்ந்துளது.

இந்தியா முழுவதும் - குமரிக் கண்டம் உட்பட ஐவகை நிலங்களாகப் பரந்து, விரிந்து விளங்கின. வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறும் நல்லுலகிலும் ஓரளவு இவ் ஐவகை நிலத் தனித்தனி வாழ்வுமுறை தொடர்ந்துளது.

ஐவகை நிலம் என்னும்போது, குமரிக்கண்டம் உட்பட்ட பழங்காலத் தமிழகத்தின் தொன்மை நன்குணரப்படுகிறது. ஒவ்வொரு நிலத்தில் வாழ்ந்தவர்களும் தத்தமக்கு எனத் தெய்வ வழிபாடு, தனிஉணவு வகை, தனிப்பட்ட தொழில்கள், இசைக் கருவிகள், யாழ் வகைகள், வட்டார வழக்கு முதலியன பெற்று, தனிமக்கட் தொகையினராக, குடிவழி, குலவழி, குடும்பவழி உட்பட வேறுபடத் திகழ்ந்துள்ளனர். மரம்செடி கொடி - மலர்கள் அனையவும் அவ்வப் பருவநிலையுடன் கூடிய நில இயல்புக்கு ஏற்ப வெவ்வேறாகத் திகழ்ந்துள்ளன.

இந்திய நாட்டை முழுமைப் பார்வையில் பாடிய, குறுங் கோழியூர்கிழார்,

**தென்குமரி வடபெருங்கல்**
**குணகுட கடலா எல்லை**
**குன்று, மலை, காடு,நாடு**
**ஒன்றுபட்டு வழிமொழிய...** ***(புறம்.17)***

பாண்டியரின் முன்னோர் ஆண்டதாகக் கூறுகிறார். அதில் நெய்தல், குறிஞ்சி, முல்லை, மருதம் என்னும் நான்கு நிலங்களைக் குறிப்பிடுவதைக் காண்கிறோம்.

தழையுடை என்பது அத் தொல்பழங் காலத்தே, அவரவர் நிலத்தில் மிகுதியாகக் காணப்பட்ட தழை, பூக்களால் தைக்கப் பெற்றிருக்கும். ஒரு கன்னிப்பெண் தன் நிலப்பகுதிக்குரிய வற்றைக் கொண்ட தழையுடையையே அணிந்திருப்பாள். சிலபோது தலைவன் வேற்றுநிலத்தவனாயின் (குறிஞ்சி முல்லை அண்மை நிலங்கள், மருதம் நெய்தல் அண்மை நிலங்கள்), அவனது நிலத்திற்குரிய தழை பூக்களாலான தழை உடையைக் கொண்டு வந்திருப்பான்.

அக் காலத் தாயர், தம் மகள் தம் நிலத்திற்குரியதல்லாத பூக்களாலான கண்ணி, மாலைகளை அணிந்திருப்பதைக் கண்டால் ஐயப்பட்டு, அவளை வீட்டினுள் வைத்துக் காக்க முற்படுவர். இவ்வாறே தழையுடை வேறுபாடு காணினும், தலைவிபால் ஐயம் கொள்ள நேரும்.

ஒரு சமயம் இரவில், களவுக் காலத்தில் காதலனைச் சந்தித்துத் திரும்பும் காதலி, தலைவன் தந்த பூங்கண்ணி முதலியவற்றை, மறுநாட்காலை திரும்பும்போது அவற்றை உதிர்த்துவிட்டு வந்தாள் எனக் குறிக்கப்படுகிறது. (குறு.312)

இவ்வாறு பழங்கால இயற்கைச் சூழல், மக்கள் வாழ்வுநிலை, நாட்டுப்புறப் பாடல்கள், அவற்றால் உருவான அகத்திணைப் பாட்டு இலக்கிய மரபுகள் எல்லாம் தெரிந்தவராலேதான், அகப்பாட்டின் பொருள் முழுமையாகத் தெளிவுபடும். இதனை உலகப்பொது இலக்கியத்திற்குள் தமிழ் தந்த தனிப்பண்புள்ள இலக்கியம் எனலாம். எனினும் இத் தனித்தன்மை உடைய இவை, உலகப்பொது மாந்தரனைவருக்கும் கால, இடவேறுபாடின்றிப் பாடப் பெற்றிருப்பதுதான் வியப்பினுள் வியப்பாக இருக்கிறது.

மேலே குறித்த குறுந்தொகை அகப்பாட்டில், 'தோழி கையுறை மறுத்தது' என்பதை, அடிக் குறிப்பாளர் எங்ஙனம் கண்டு கொண்டார்?

அங்கு வந்த தலைவன் வேட்டையாடும் குறிஞ்சி நிலத்தவன்; அவளும் அந் நிலத்தவளே. எனினும் வெவ்வேறு குன்றுகளைச் சார்ந்த ஊரினர். அன்று ஆடவர் வேட்டையாடப் போவர், மனைவியர் குடும்பக் கடமைகளை ஆற்றுவர். அதனால் தினைப் புனத்தில், பறவைகள் கதிர்களைக் கொத்திப் போகாதவாறு, கன்னிப் பெண்களைக் காவலுக்கு அனுப்புவர். அக் கன்னிப் பெண்கள் குளிர் தட்டை முதலான கிளிகடி கருவிகளை வைத்துப் பறவைகளை விரட்டுவர். சிலபோது மழை பெய்தால், அனைவரும் கூடி, அருவியில் ஆடி, பாடி மகிழ்வர். இதனால் வேட்டையாடி வரும் காளை ஒருவனுக்கும் தினைப்புனம் காக்கும் கன்னி ஒருத்திக்கும் காதல் ஏற்படுவது ஒரு வழக்காறாயிற்று. இதனால் களவுமணம் என்பது, குறிஞ்சி நிலத்தில் கூடுதலாக நிகழவும் அதுபற்றிய பாடல்கள் அங்கு மிகுதியாகப் பாடப்படவும் நேர்ந்தன.

தலைவன் இப் பாடலில் ஒரு தழையுடையுடன் நிற்கின்றான். அவன் பகுதியில் செங்காந்தட்பூக்கள் மிகுதி. அதனால் அப் பூக்களாலான தழையுடை அவன் கையிலிருக்கிறது.

அவன் அப்பக்கம் வரும்போதெல்லாம் தலைவியைப் பார்த்துக் காதல் கொண்டான். தன் காதலை அவள் ஏற்பாளா என அறியவே, அவன் தழையுடையுடன் வந்துள்ளான். அக் கால மரபுப்படி அத் தழையுடையை தோழியும் தலைவியுமாகிய அவர்கள் ஏற்றால், உடன்படுவதாகப் பொருள்; மறுத்தால் காதலை ஏற்கவில்லை என்பதாகும். இப்போது தோழி தழையுடையை ஏற்க மறுக்கின்றாள். எவ்வாறு மறுக்கின்றாள்?

எங்களுடைய முருகனுறையும் மலையிலும் செங் காந்தட் பூக்கள் நிரம்ப உள்ளன என்று கூறுகிறாள். அப்படி

யானால், எங்களிடமே இருப்பதால், நீ தருவது வேண்டாம் என்பது குறிப்பு.

பொதுவாகச் சங்கப் பாடல்களை உற்றுநோக்கிப் படித்தால், நம் இன்றைய பேச்சு நடைபோல இருக்கும். சொற்கள் மட்டுமே சிறிது கடினமாகப்படும். அதுவும் அகராதி வைத்துப் படிக்கும்போது மிகுதியும் விளங்கிவிடும்.

இன்று ஒருவர், 'உங்களுக்கு ஆவின் நெய் வாங்கி வந்துள்ளேன்' என்றால், 'ஐயோ, நான் இப்பொழுதுதானே வாங்கி வந்தேன். எங்களிடம் இருக்கிறதே' என்றால், மற்றவர் தருவது 'வேண்டாம்' என்பது பொருள்.

இப் பாடலிலும் குருதிபோல் - இரத்தம்போல் பூக்கின்ற செங்காந்தட் பூக்கள் எங்கள் மலையிலும் இருக்கின்றன என்று தோழி சொன்னது, தலைவன் தருவதை 'வேண்டாம்' எனச் சொல்லாமற் சொன்னதாகும்.

இதனைக் கூற்றெச்சம் (கூற்று - சொல். ஒரு சொல் எஞ்சி நிற்கின்ற சொல்லெச்சம்) என்பர். அது பாட்டுக்குள் இல்லை.

இது தோழி சொன்னது; தலைவனிடம் சொன்னது; அவன் காதலை ஏற்க மறுத்துச் சொன்னது என்பன எல்லாம் பாடலில் இல்லாமலே, உய்த்துணரப்படுகின்றன. இதனைத் தொல்காப்பியர் ***'முன்னம்'*** என்ற இலக்கியக் கொள்கையாகக் குறிப்பார்.

முன்னம் - முகக்குறிப்பு. ஒரு பாடலில் இவ்வாறு அக்கூற்று யாரால், யாருக்கு, எச் சூழலில் கூறப்பட்டது என்பதைக் கேட்பவர் அல்லது படிப்பவர் உணருமாறு குறிப்பாக வைத்துப் பாடுவதும் முன்னமேயாகும். அப்பாடலே, தன்னைப் பற்றிய இவை அனைத்தையும் உணர்த்த வேண்டுமாம். சங்க அகப்பாடல்கள் அனைத்திலும், ஒருசில புறப்பாடல்களிலும் இவ் உத்தித் திறனைக் காணலாம்.

இன்று நாடகம் எழுதுபவர், திரைக் கதைகளுக்கு 'உரையாடல்' எழுதுபவர், யார் கூற்றாக எழுதுகிறாரோ, அவருக்கேற்ப அவ்வுரையாடலை எழுத வேண்டுமல்லவா? சங்கப் பாடல்கள் இவ் உரையாடல் நாடக உத்திகளை இன்றும் கற்பிக்கவல்லன.

இன்று நாடகமாந்தரைக் குறிப்பிட்டுவிட்டு, அவர் பேசும் உரையாடலை எழுதுகிறார்கள். சங்ககாலத்தில் பாடலைப் படித்துவிட்டு, அது யார், யாரிடம் பேசியதென உய்த்துணர வைத்தனர். இதுவே கவிதையிற் சிறந்த கவிதையின் அடையாளமாகும்.

## நல்ல குடும்பம்

சங்க அகப் பாடல்கள் ஒவ்வொன்றும் ஒரு தனி நாடகம். ஒரு பாடலுக்கும் அடுத்ததற்கும் அல்லது பிறிதொன்றற்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. 1863 அகத்திணைப் பாடல்கள் கிடைத்துள.

இவை ஒவ்வொன்றும் ஒருகூற்று நாடகங்கள். ஒருவர் கூறுவதாக வரும் இதில், அதைக் கேட்பவர் யார், எச்சூழலில் எதற்காகக் கூறப்பட்டது என்பன போலும் பிற யாவும் உய்த்துணரப் படுமாறு அஃது அமையும். பெரும்பாலான அகத்திணைப் பாடல்கள் 'பிரிவு' பற்றியன அல்லது பிரிவு நிமித்தம் பற்றியன. தலைவன் களவு, கற்பு இருநிலையிலும் பிரிவது, பிரிவால் தலைவி வருந்துவது, தோழி பிரிவால் வாடும் தலைவியை ஏதேனும் ஒருவகையில் தேற்றுவது, தலைவி ஆற்றியிருக்க முயல்வது, பிரிய நினைப்பவன் சிறிது காலந் தாழ்த்தித் தலைவியைத் தேற்றிப் பின்பு பிரிவது, தோழி பிரிவை விலக்கமுயல்வது; பிரிவுக்கு உடன்படுவது, உடன்போக்கில் பெற்றோரைப் பிரிவது, மகளைப் பிரிய நேர்ந்த தாய் வருந்துவது, பிரிந்தவன் திரும்புவது என இவ்வாறு பிரிவு அவலம் பற்றியவையே, பல்வேறு கற்பனை நயம்பட முக்காற் பங்கிற்கு மேல் பாடப்பட்டுள்ளன. உண்மை அன்பின் வெளிப்பாட்டுக்கும் மனத்தைப் பக்குவப் படுத்தவும் இவை உதவுவன.

பரத்தையர்ப் பிரிவு மட்டுமே கொடுமையானது. அது அன்றைய சமுதாயங்களில் காணப்பட்டதொரு குறையேயாகும். இன்றும் பழைய மரபுகளைப் போற்றத் துடிக்கும் பிரிட்டனில் எண்ணாயிரம் உரிமம் பெற்ற பரத்தையர்கள் உள்ளனர். பிற ஐரோப்பிய, அமெரிக்க நாடுகள் பற்றிக் கேட்கவேண்டாம். தொல்காப்பியர் இதனைக் குறிப்பிடும் பொழுதெல்லாம், கற்பியலில் 'கொடுமை ஒழுக்கம்', 'அடங்கா ஒழுக்கம்', 'பேணா ஒழுக்கம்' என்றே கூறுகின்றார். சமுதாயக் குற்றத்தைப் புலவர்மீதும் இலக்கியத்தின்மீதும் சுமத்துவது 'அவசரப் புத்தி'யின் விளைவு. புலவர்கள் 'நாணத்தில் பிரியா நல்வழிப் படுத்து', தம்மாலியன்றவரை, சமுதாயத்தைத் திருத்தும் நோக்குடன் இவ்வகைப் பாடல்களைப் புனைந்திருப்பது, கல்விவல்லார் காணத்தகும் உண்மையாகும்.

முதற்கண் சிறு அளவிலான நல்ல குடும்பம் பற்றியும் பெண்களின் கற்புடை வாழ்வு பற்றியும் அவர்தம் இல்லறக் கடமைகள் பற்றியும் வரும் பாடல்களைக் காண்போம்.

பின்னர் 'காமம்' பற்றி விளக்கும் பாடல்களையும் உண்மைக் காதல் பற்றிய புனைவுகள் சிலவற்றையும் காண்போம். மனித வாழ்வில் இக் காதல், காமம், குடும்பம் பற்றியவையே தலைமை வாய்ந்த, என்றுமுள மானுட விழுமியங்களாகும்.

**முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்**
**கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇ**
**குவளை உண்கண் குய்ப்புகை கழுமத்**
**தான்துழந்து அட்ட தீம்புளிப் பாகர்**
**'இனிது'எனக் கணவன் உண்டலின்**
**நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே (167)**

திருமணமான புதிது; அவளோ தாய்வீட்டில் செல்லமாக வளர்ந்தவள். அடுப்படிப் பக்கம் எட்டிப் பார்த்ததும் இல்லை. இப்போது தன் கணவனுக்குத் தான் சமைத்து, அவனை உண்ண வைத்து அழகுபார்க்க ஆசைப்பட்டாள். இப்பாடலில்

ஒவ்வொரு சொல்லும் அவ்வவ் இடத்திற்கு மிகப் பொருத்தமானதாக இருப்பதைப் பலமுறை படித்து இலக்கிய இன்பம் நுகரலாம்.

முளிதயிர் - கட்டித் தயிர். செங்காந்தட் பூ வேலியோரம் பூப்பது. அதன் இதழ்கள் கைவிரல்கள் போல் நீண்டிருக்கும். அப் பூப் போன்ற மெல்லிய விரலால், கட்டித் தயிரைப் பிசைந்தாளாம். அவ்வாறு பிசைந்த கையைக் கழுவிய கையோடு, கலிங்கமாகிய உயரிய பட்டாடையில் துடைத்துக் கொண்டாள். அழுக்காகி விட்டதென்று அதை மாற்றாமல், அப்படியே சரிசெய்து உடுத்திக் கொண்டு தாளிதம் செய்யும்போது குவளை மலர்கள் போலும் கண்களில், ‘குய்’யென எழும் புகைபடிந்து, நீர் அரும்புகிறது. அங்ஙனம் விரைந்து, தானாக மிக முயன்று சமைத்த புளிச்சோறு எப்படியிருக்குமோ என அவளுக்கே ஒரு தயக்கம், அச்சம். அது எப்படி இருந்ததென்று யாருக்கும் தெரியாது. அவனோ அவளிடம் அன்பைப் பொழியும் கணவன். அதனால் ‘நன்றாக இருக்கிறது; இனிதாக இருக்கிறது’ என்று சொல்லிக் கொண்டே உண்டானாம். அதனைப் பார்த்த அவளுக்கு உள்ளுள் சிரிப்பு. சுமாராக இருந்தாலும், தன்னை மகிழ்விப்பதற்காக, அவ்வாறு சொல்லிக் கொண்டு உண்ணுகிறான் என அவள் மனத்துக்குத் தெரிகிறது. அந்த மனத்தின் அன்பு, இந்த மனத்தினுள் மகிழ்ச்சியை விளைவிப்பதால், அவள் முகம் மிக நுட்பமாக மலர்ந்து மகிழ்ச்சியை வெளிப்படுத்துகிறது.

புதிய மணமக்கள் எப்படியுள்ளார்கள் என்று பார்க்க வந்த செவிலித்தாய், மறைந்துநின்று இக் காட்சியைக் கண்டாள். தான் கண்டதை அப்படியே நற்றாயாம் பெற்ற தாயிடம் சொல்வதாக இப் பாடலின் பின்புலம் குறிக்கப்பட்டுள்ளது.

‘கடிநகர்க்குச் சென்ற செவிலித்தாய் நற்றாய்க்கு உரைத்தது’ - என்பது இதன் அடிக்குறிப்பு. கடிநகர் - திருமணம் முடித்தபின் வாழும் வளமனை. (நகர் - வளமனை என்றும் பொருள்படும்.) கடி - பல பொருள் ஒரு சொல்; உரிச்சொல் அடைமொழி.

கட்டிய பட்டாடையோடு சமையலில் ஈடுபட்டது, அவளது முன் அனுபவமின்மையைக் காட்டும். அதிலேயே துடைத்துக் கொள்வது, அழுக்குப் படிவதையும் மறந்து சமையலில் ஈடுபடுவதை உணர்த்துகிறது. 'தான் துழன்று அட்ட' - சமையல் செய்வதற்குள் அவள் பட்டபாடு பெரிதென்பதை உணர்த்துகிறது. அப்படிச் சமைத்தால், அது எப்படி இருக்கும் என்று கூறவா வேண்டும்? 'இனிது என' என்பதில் 'என' என்பது முக்கியமானது. 'நன்றாயிருக்கிறது' என்று வாய்பேசாமலே, விரைந்து 'தின்றுவிட்டுப்' போவாரும் உலகிலுளர். இவனோ அவளை மகிழ்விக்க வேண்டுமென்றே, 'இனிது' எனப் பாராட்டிச் சொல்லிக் கொண்டே உண்டானாம். இதில் கணவன்மார்க்கு ஒரு பாடம் உளது. மனைவியைச் சிறிதளவாவது பாராட்டத் தெரிய வேண்டும். அவளுக்கோ அனைத்தும் உள்ளுள் புலனாவதால், 'நுண்ணிதின்' முகமலர்ச்சியைக் காட்டுகிறாள். சீனர்கள் சுவையான இலக்கியக் காட்சிகளை, அழகிய ஓவியமாக எழுதி, அதன் எதிரே பாடலையும் எழுதி, நல்ல வண்ணமிகு சுவரொட்டிகளை, கண்ணில் படுமாறு வீடுகளிலும் அலுவலகங்களிலும் பள்ளிகளிலும் பொது இடங்களிலும் ஒட்டி வைப்பார்களாம். அதனால் அங்கு இலக்கியம் பொதுமக்களால் நன்கு உணர்ந்து போற்றப்படுகிறது. தமிழிலும் வீடுகள்தோறும் ஒட்டிவைக்கக் கூடிய, அழகிய ஓவியக் காட்சி இது.

## திருமகள் வந்தாள்
## மருமகளாக, செல்வம்
## குவிந்தது பெருமனையாக!

பொதுவாகத் தமிழர்களுக்கு ஒரு நம்பிக்கை உண்டு. ஒரு பெண் வாழ்க்கைப்பட்டு வந்ததிலிருந்து, வறுமை மனையாக இருந்தது வளமனையாயிற்று என்பர். அவள் காலடி எடுத்துவைத்த நேரம் என்பர். அவள் வந்தபிறகு, அக் குடும்பத்தை வழிநடத்திய பெருமையால், திறமையால் அது படிப்படியாகச் செல்வமனை ஆகியிருக்கும்.

செல்வம் பெருகப் பெருக அக் குடும்பத் தலைவன் - அவள் கணவன் தடுமாறிப் போவதுண்டு. அவள் சிக்கனத்தால் சேர்த்ததை, அவன் சிதறடித்துத் தீர்த்துப் பழைய வறியநிலைக்குக் கொண்டு போவதுண்டு. இன்றைய நடைமுறையிலும் இதைக் காணலாம்.

தமிழர்கள் அன்று வாழ்ந்தமை மலர்களால் ஆனதுபோல் முழுமையும் சூழ்ந்திருந்துளது. உடையும் அணிகளும் தழைகளும் மலர்களுமே. தழை, மலர்களைக் கொய்வது, தைப்பது, உடுப்பது, அணிவது, அவ்வாறு புத்தம் புது தழையுடைகளுடன் நீராடுவது, ஆடிப் பாடுவது, விழாக் கொண்டாடுவது அவர்களின் இன்பப் பொழுதுபோக்காக இருந்துளது.

தலைவன் இவ்வாறு பரத்தையருடன் ஆடிப்பாடி, அந்த அடையாளம் குலையாமலும் மாறாமலும் தன் வீட்டிற்கு வந்துள்ளான். இதைப் பார்த்த ஊரார் அவனைப் பழிக்கின்றனர். 'வறுமை வாய்ப்பட்டு, வாடிக் கிடந்த குடும்பத்தில், இவள் வந்ததுமுதல் செல்வம் செழித்துக் குடும்பம் தழைத்தது. இவனோ இப்படிப் பரத்தையருடன் ஆடித் திரிந்து அலங்கோலமாய் வருகின்றானே எனப் பழிக்கின்றனர்.

இதனைத் தோழியும் சிலபோது அறிவரும் அவனிடம் கூறி, இடித்துரைத்துத் திருத்த முயல்கின்றனர். சங்க அகப் பாடல்கள், அவன் பரத்தையருடன் ஆடித் திரிந்ததைப் படம் பிடித்துக் காட்டுவதில்லை; அப்படித் திரிந்தவன் நாணும்படியாக இடித்துரைப்பன போன்ற காட்சிகளையே பாடியுள்ளனர். சமுதாயம் இருந்தநிலை வேறு; அதைத் திருத்தமுயன்ற இலக்கிய நிலை வேறு.

**உடுத்தும் தொடுத்தும் பூண்டும் செரீஇயும்**
**தழையணிப் பொலிந்த ஆயமொடு துவன்றி**
**விழவொடு வருதி நீயே; இஃதோ**
**ஓரான் வல்சிச் சீரில் வாழ்க்கை**

பெருநலக் குறுமகள் வந்தென
இனிவிழவாயிற்று என்னும்இவ் வூரே (295)

(ஆயம் - மகளிர் கூட்டம், பரத்தையர். துவன்றி - சேர்ந்து ஆடுதல். ஓர் ஆன் வல்சி - ஒரு பசுவினால் வரும் வருவாயைக் கொண்டு உணவுண்டு வாழ்தல். வல்சி-உணவு. குறுமகள் - இளைய மனைவி. விழவு என்பது ஒரு மரபுத் தொடராய்ச் செல்வச் செழிப்பு, கொண்டாட்டம் எல்லாவற்றையும் குறித்தது.)

தலைவன் பரத்தையருடன் ஒன்றுகூடி, தழை பூக்களைக் கொய்து ஆடையாக உடுத்தும் மாலையாகத் தொடுத்தும் அணிகலனாக அணிந்தும் தலையிற் செருகியும் இவ்வாறு தழையணிகளால் அழகுபடுத்திக் கொண்டு விளையாடினான். ''அவ்வாறு கொண்டாடிய அடையாளத்துடன் வீட்டிற்கு நீ வருகின்றாயே, உன் பழைய நிலையை எண்ணிப் பார்த்தாயா'', என்று கேட்பது இது.

''முன்பு ஒரு பசுவைக் கொண்டு, அதனால் வரும் வருமானத்தை மட்டும் கொண்டு, சாப்பிட்டு வயிறுகழுவி வாழ்ந்தவன் நீ. அப்படிப்பட்ட சிறப்பற்ற வாழ்க்கை வாழ்ந்த உன் வீட்டிற்கு, பெருமைமிகு நலம் பலவும் பெற்ற இவ் இளைய பெண், மனைவியாக வந்த காலந் தொடங்கி, உன் குடும்பம் செல்வத்தில் செழிக்கத் தொடங்கியது. இவ்வூரார் இதனைச் சுட்டிக்காட்டி உன்னைப் பழிப்பதை நீ அறியவில்லையா,'' என இடித்துக் கூறுகின்றனர்.

இதன் அடிக்குறிப்பு, 'வாயில் வேண்டிச் சென்ற கிழவற்குத் தோழி உரைத்தது' என்று உளது. தலைவன் இவ்வாறு வந்து, வீட்டினுள் நுழையுமுன் தோழியிடம், தன் மனைவியைச் சமாதானம் செய்து வைக்கும்படி வாயில் வேண்டுகின்றான் (வாயில் - தூதாகச் சென்று சமரசம் பேச வேண்டுதல்). கிழவன் - உரிமையுடைய கணவன். அப்போது தோழி, ஊரார் பழிப்பதை அவனுக்குக் கூறி இடித்துரைத்தது என்று அடிக்குறிப்பாளர் எழுதியுள்ளார். இளம்பூரணரும் நச்சினார்க்கினியருமாகிய

தொல்காப்பிய உரையாசிரியர்கள்இது அறிவர் தலைவனைக் கடிந்துரைத்துத் திருத்த முயன்றதாக எழுதியுள்ளனர்.

புத்தர் இன்று வந்தால், 'சில புறச்சூழல்கள், மாற்றங்கள் தவிர, பிற அகச் சூழல்கள் பலவும் தம் காலத்தது போலவே இருக்கக் காண்பார்' எனச்சில வரலாற்றாசிரியர்கள் எழுதியுள்ளனர். சங்கப் பாடல்கள் பலவும், இதையே காட்டுகின்றன.

கணவன் தவறுபட நடந்தானாயினும், அதைப் பொறுத்து, தன் இல்லறக் கடமைகளை ஆற்றியிருப்பதே அறநெறி என்கிறாள் ஒரு மனைவி. ''திருமனைப் பலகடம் பூண்ட பெருமுது பெண்டிரேம் ஆகிய நமக்கே'' *(181)*. ''வயது முதிர்ந்த பெண்டிராகிய நமக்கு, திருநிறைந்த மனைக்குரிய பல கடமைகளை ஆற்றியிருப்பதே நல்லதன்றி, அவரைப் பழித்துப் பேசுதலால் பயனென்ன'' என்று தோழியிடம் கூறுகிறாள். அவ்வாறு புறத்தொழுக்கம் போய்த் திரும்பிய கணவனை இன்முகம் திரியாது வரவேற்கின்றாள் ஒரு மனைவி. இது கடவுட் கற்பு' (தெய்வத் தன்மையுடைய கற்பு) எனப்படுகிறது. இது முறையல்லவே என்று கூறிய தோழியிடம், ''அவன் சான்றோன் என்பதுடன், அவனைக் கடிதல் கூடாதென்றும் அக் கற்புடை மனைவி வாதிடுகிறாள். ''சான்றோர், புகழும் முன்னர் நாணுப, பழியாங்கு ஒல்பவோ காணுங் காலே'' *(252)* என்று பொதுப் படக் கூறினும், தன் கணவன் மீதுள்ள அன்பினால் கூறியதே இது.

இலக்கியத்தில் பிரிவையும் அவல உணர்வுகளையும் படைப்பதையே, உலகெங்குமுள்ள இலக்கியங்களிற் காண்கின்றோம்.

சங்ககாலச் சமுதாயம் வீரநிலைக் காலத் தொடர்ச்சி யாகும். ஆடவரின் உடற்கட்டும் மனைவியரின் மகப்பேற்றுக் காலமும் அவனை, அன்று பரத்தையரை நாடவைத்துள்ளன. இதற்காக அன்றையச் சமுதாயம் முழுவதும் இக்குறை ஒன்றே நிரம்பி இருந்ததாகக் கருதிவிடுதல் கூடாது.

காதலர்களின் உண்மை அன்பைப் பற்றிய பாடல்கள் மிகப்பலவுள. வினைமேற் சென்ற தலைவன், நீண்ட தூரத்திலிருந்து திரும்பி வரும்பொழுது, தன் தேர்ப்பாகனிடம் கூறுவதாக வரும் பாடலகள் அவன் கொண்டிருந்த அன்டை வெளிப்படுத்துவன.

காதல் உறவில் அன்றும் இன்றும் ஓர் அச்சம் மீக்கூர்ந்து உளது. இருவரும் மனம் ஒன்றி இணைந்தனராயினும், அங்ஙனம் பழகி, மெய்யுறு புணர்ச்சி நிகழும்வரை சமமான மனநிலை இருக்கும். முதன்முறை கூடியபின் அவன் தன்னை மறந்துவிடக் கூடாதே என்றும் அவனைவிடத் தன்னுடலில், புணர்ச்சியினா லேற்படும் வேறுபாடுகள் மிகுதியாகத் தென்படத் தொடங்குவதனாலும் ஒரு பெண்ணுக்கே அச்சமும் நாணமும் மிகுகிறது. இந்தத் தவிப்பைப் போக்க, அவன் முதற்கூட்டத்தின் பின் சூளுரைத்துப் பிரிவதாகவும், 'பிரியேன் பிரியின் உயிர் தரியேன்' என்று கூறுவதாகவும் பாடியுள்ளனர்.

**வினையே ஆடவர்க்கு உயிரே; வாள்நுதல்**
**மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர்என**
**நமக்குரைத் தோரும் தாமே**
**அழாஅல் தோழி அழுங்குவர் செலவே** *(135)*

'பிரிவாரோ' என அச்சப்பட்ட தலைவிக்கு, அக்காலத்தில் தோழி சொன்ன ஆறுதல் இது. இன்று 'மனையுறை' மகளிராக குடும்பக் கடமைகளை ஆற்றும் நிலை மாறிவிட்டது. இருவரும் 'வினையே (வேலையே, தொழிலே) நம் இருவர்க்கும் உயிர்' என்று, இருவரும் வெவ்வேறிடங்களுக்குப் பிரிந்துபோய் வேலை பார்க்கின்றனர். இந் நிலையிலும் காதலில் பிரிவோ, தொய்வோ மாறுதலோ ஏற்படக் கூடும் என்ற அச்சமும் தயக்கமும் பெண்ணையே பெரிதும் பாதிக்கின்றன.

முதலிற் காட்டிய 'செங்களம்பட' எனத் தொடங்கும் பாடலை, மீண்டும் எண்ணிப் பார்ப்போம்.

செங்காம்படக் கொன்று அவுணர்த் தேய்த்த
செங்கோல் அம்பின் செங்கோட்டி யானை
கழல்தொடிச் சேஎய் குன்றம்
குருதிப் பூவின் குலைக்காந் தட்டே.

தோழி கையுறை (பரிசுப் பொருளாகிய தழையுடையை) மறுத்தது ஏன்? பெண்கள் எளிதில் காதல் வயப்பட்டுவிடக் கூடாது. தங்களை எளிதில் பெற, இடம்தரவே கூடாது. தங்களின் அருமை உணர்ந்து ஓர் ஆடவனின் நடத்தை, பண்பு, திறமை, நம்பிக்கையுடைமை போன்றவற்றைத் தீர ஆராய்ந்த பின்பே, தன்னைத் தொட அனுமதிக்கலாம்.

இத் தற்காப்புணர்ச்சியை ஊட்டுவதாகக் குறுந்தொகைப் பாட்டு உளது. அதிலும் முருகன் சேஎய் - செந்நிறத்தன். இப்பாடலில் எத்தனை செந்நிறம் வருகிறது? செங்களம், செங்கோல், செங்கோடு, குருதிச் செந்நிறப்பூ. இவை யாவும் ‘அச்சம்’ என்ற ‘உரு’வை (Image) விளைவிப்பன. அதாவது தலைவனது இக் காதல் அத்துணை எளிதன்று; நிலையான அன்புடையார்க்கே இது உரியது என்பன போன்ற மன உணர்வுகளை, எதிரே நிற்பவனிடம் விளைவிப்பன இவை. இப் பாடலை மேனாட்டுத் திறனாய்வாளர் படிக்க நேர்ந்தால், இதிலுள்ள உருக்காட்சியை எடுத்துக் காட்டி வியந்திருப்பர்.

## உலகக் காதலர்களுக்கு ஒப்பற்ற வழிகாட்டி

*யாயும் ஞாயும் யார்ஆகியரோ?*
*எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்?*
*யானும் நீயும் எவ்வழி அறிதும்?*
*செம்புலப் பெயல்நீர் போல*
*அன்புடை நெஞ்சம்தாம்கலந் தனவே* *(40)*

சங்க அகப் பாடல்களில் ஒருவரது இயற்பெயர் இடம் பெறாது. அதுவே அதன் உலகப் பொதுமையைக் காட்டும்.

எங்கோ பிறந்து, எங்கோ வளர்ந்தஇருவர் காதல்கொண்டு, ஈருடல் ஒருயிர்போல் ஒன்றுபடும் காதல் புனிதமானது. 'இக் காதலால் உயிர் தளிர்க்கும்' (1106) என்பார் திருவள்ளுவர்.

''என்தாயும் உன்தாயும் யார்யாரோ? என் தந்தைக்கும் உன் தந்தைக்கும் என்ன உறவு? யானும் நீயும் இதுநாள் வரை ஒருவரை ஒருவர் எவ்வழியில் அறிந்திருந்தோம்? எதுவுமில்லை. இருந்தும் செம்மண் நிலத்தில் பெய்த வானத்து மழைநீர் அதனுடன் கலந்து ஒன்றாகிவிடுவதுபோல, நமது அன்புள்ள நெஞ்சங்களும் ஒன்று கலந்தன!'' - இவ்வாறு காதலன் முதன் முதற்கூடியதும், காதலி அஞ்சுவது கண்டு, அவளிடம் தன் காதலின் சிறப்பைக் கூறுவது இது.

இதன் புலவர் பெயர் தெரியவில்லை. ஏடு கிடைத்துள்ளது; ஆனால் அதில் பாடிய புலவர் பெயரில்லை. அதனால் 'செம்புலப் பெயல்நீர்போல' என்ற உவமையின் பெருமையை உணர்ந்து, அப்புலவர்க்கு அத்தொடரையே பெயராக்கி, 'செம்புலப் பெயனீரார்' எனத் தொகுத்தவர் குறித்துள்ளனர். இவ்வாறு பாடலில் பெயர் குறிக்கப்பட்ட பாவலர்கள் பலராவர். இது பாட்டு வேறு, பாடியவர் வேறு என்று பிரிக்காமல், இரண்டையும் ஒன்றாக்கிப் பெயர் சூட்டிய, தொகுப்பாளர்களின் இலக்கியத் திறனாய்வு உணர்வை வெளிப்படுத்துகிறது.

இலண்டன் நகரில் சுரங்கத் தொடர்வண்டியில், பயணிகள் படித்தின்புறுமாறு, உலகிற் சிறந்த குறுங்கவிதைகளை அச்சிட்டு, அவற்றின் ஆங்கில மொழிபெயர்ப்புடன் ஒட்டி வைக்கின்றனர். அவ்வகையில் இப்பாடல் 2001-இல், அத்தொடர் வண்டியில் தேர்வு செய்யப்பட்டு, அச்சிட்டு ஒட்டிவைக்கப் பெற்றிருக்கிறது என்பதொன்றே, இதன் பெருமையைப் பறைசாற்றும்.

நம் சங்கப் பாடல்கள் அனைத்தையும் ஆங்கிலத்திலும் உலகப் பெருமொழிகளிலும் மொழிபெயர்த்துப் பரப்பினால், நம் இலக்கியச் சிறப்பை அறிந்து உலகம் போற்றும். இப் பணியை உடனடியாக நிறைவேற்றும் பொறுப்பு, இன்று நம்மிடம் உளது.

## காமம் காமம் என்பர் காமம் என்பதுதான் என்ன?

தமிழில் காதல், காமம் என இரண்டு சொற்கள் உள்ளன. இவற்றுக்கு ஈடான சொற்களைப் பிற மொழிகளில் தேட வேண்டும். காதல் உள்ளம் சார்ந்து பின்னர் உடலையும் சார்ந்தது. காமம் உடல்சார்ந்த உணர்வு; அது உள்ளம் சார்ந்த ஒன்றுதலுக்கு இட்டுச்செல்ல வேண்டும்.

காமம் என்ற சொல் இழிவுடையதன்று. உலகில் பிறந்த உயிர்களுக்கு இயல்பாயமைந்த தன்மை இது. இவ் ஐம்புல இன்பத்தை மனிதர்கள் தவிர்த்தல் இயலாது, உடற்குறை, மனக்குறை இருந்தாலன்றி. உலகிற் பல நாடுகளில் உரிமம் பெற்ற பரத்தையர்கள் வாழ்கின்றனர். பல நட்சத்திர விடுதிகள் இதை ஒரு தொழிலாக நடத்துகின்றன. மகளிரே தம் உடலை விற்கும், விற்று வருமானம் தேடும் வாழ்வும் பெருகி வருகிறது.

இவற்றினூடே உண்மையான உள்ளன்புடைய காதலும் அளவானமைந்த காமம் துய்த்தலும் உலகில் நிலைபெற இருக்கின்றன என்பதை மறத்தலாகாது.

இதனை ஒரு 'பாலியற்கல்வி' போல, தமிழில் தொன்மை யுடைய தொல்காப்பியம், சங்கப்பாடல்கள், திருக்குறள் எல்லாம் கற்பிக்கின்றன என்றே கூறலாம். நேரே பாடநூல்கள், அல்லது ஆய்வு நூல்கள் போலாது, இலக்கிய வழி, மாந்தரின் மனத்தை அவை அழுத்தமாகப் பக்குவப்படுத்த முயல்கின்றன.

**மிளைக் கந்தன்** என்ற சங்கப் புலவர், காமம் பற்றிய பொருள் விளக்கம் (Definition) ஒன்றை, இரண்டு பாடல்களில் தந்துள்ளார். ஒன்று காதலன் தன்தோழனுக்குக் கூறுவதாகவும் மற்றொன்று தோழன் (பாங்கன்) தன் தலைவனுக்குக் கூறுவதாகவும் பாடப்பெற்றுள்ளன.

பசி எடுத்து உண்பது போன்றதுதான் காமமும். ஆனால் உணவுக் கட்டுப்பாட்டில் எத்தனை வகைகள் உள்ளன; உணவே மருந்தென்பது பற்றிய ஆய்வுகள் எத்தனை?

காம இன்ப உணர்வாகிய உடற்பசி தீர்ப்பதில், இதை விடக் கூடுதலான நெறிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும். அதுவோ திடீரெனத் தோன்றி மறைவது. திருவள்ளுவர் அதைத் 'தும்மல்' போல், திடீரெனத் தோன்றி மறையும் என்பார் (1253). எனவே அதற்கு நாம் அடிமையாகாமல், அதை நம் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க வேண்டும்.

**காமம் காமம் என்ப, காமம்**
**அணங்கும் பிணியும் அன்றே, நுணங்கிக்**
**கடுத்தலும் தணிதலும் இன்றே, யானை**
**குளகுமென்று ஆள்மதம் போலப்**
**பாணியும் உடைத்துஅது காணுநர்ப் பெறினே** (136)

காமம் காமம் என்று எல்லாம் காமமயம் என்பதுபோல் பலர் அதனையே பெரிதாகப் பேசி, அதனை ஒரு குறைபோலவும் பழிக்கின்றனர். அது ஒன்றும் அத்துணைப் பெரிதன்று; சிறிது பொழுது தோன்றி உடனே மறையும் போதை போன்றது.

சிலர் அதைப் பிறர்நம்மை வருத்துவதால் வந்தது என்பர்; மற்றும் சிலர் அதை நோய் என்பர். இரண்டும் உண்மையன்று.

காமம் எப்பொழுதும் ஒருவரிடம் நுண்ணிதாய்த் தொற்றி, வெப்பத்தைப் பெருக்கிப் பிறகு அதைத் தணித்து நிலைபெறுவதுமன்று.

யானை 'குளகு' எனப்படும் ஒரு தழையைத் தின்றால் அதற்கு மதம் தோன்றிவிடும்; உடனே சிறிதுநேரத்தில் அது மறைந்துவிடும். அதைப்போல ஒருவர் தம் மனத்திற்கு உகந்த ஒருவரைக் காணப்பெற்றால், உடனே அது அச்சமயத்தில் வெளிப்படும்; சிறிது காலம் நீட்டித்தால் அவ் உணர்வு மாறிவிடும்.

காமம் காமம் என்ப காமம்
அணங்கும் பிணியும் அன்றே; நினைப்பின்
முதைச்சுவல் கலித்த முற்றாஇளம்புல்
மூதா தைவந்தாங்கு
விருந்தே காமம் பெருந்தோ ளோயே (204)

முதல் இரண்டு அடிகளும் ஒன்றுபோலவே இருக்கக் காணலாம். மிளைக் கந்தன் 'காமம்' என்பதை விளக்குவதற்கே இப் பாடல்களைப் பாடினார் என்பது தேற்றம். தெய்வம் அணங்கியதால் அல்லது பிறர் வருத்தியதால் காமம் வருவதில்லை. சிலர் 'காம நோய்' என்று சொல்வதுபோல் இது ஒரு நோயுமன்று.

பொருளியலில் 'பயன்பாட்டு எல்லை' பற்றிய ஒரு 'தேற்றம்' உண்டு. ஒருவரிடம் நான்கு மகிழுந்து இருக்கலாம். நான்கிலும் ஒரே சமயத்தில், தான் ஒரு பெருஞ்செல்வர் என்பதைக் காட்டுவதற்காகப் பயணம் செய்ய இயலாது.

ஒருவன் எவ்வளவு பசித்தாலும் அல்லது முயன்றாலும் ஐந்தாறு ஆப்பிள் பழங்களைச் சாப்பிடலாம். இன்னும் ஒன்று, இன்னும் ஒன்று என்று தின்றுகொண்டே போக முடியாது. ஓர் எல்லைக்கு அப்பால் வெறுப்பு ஏற்படும். முன்னர் இனித்த அதுவே தீராத் துன்பமாய்த் தோற்றும். கட்டாயப்படுத்தி, அடித்துத் தின்னச் சொல்லுங்கள், பார்க்கலாம்.

காம இன்பம் நுகர்வார்க்கும் மீண்டும் மீண்டும் அதிலேயே நாட்டம் ஏற்படும். சிலர் அதுவே வாழ்வாக மூழ்குவாரும் உளர். காமத்தை முற்ற முடிய அனுபவித்துத் தீர்தல் என்பது இயலாது; கூடாது. அஃதோர் உளவியலும் உடலியலும் சார்ந்தது. கள்ளுக்கும் (மதுவுக்கும்) காமத்திற்கும் ஒரு தொடர்புண்டு. இரண்டிலும் மேன்மேலும் வேண்டும் என்றே தோன்றும். முற்ற முடியாது என்பதே அதன் உட்கிடை.

மிளைக்கந்தன் சொல்கிற உவமைதான், உலகக் காதலர்களுக்கு ஒரு பாடமாக அமைகிறது.

நினைப்பின் - சிந்தித்தால். முதைச் சுவல் கலித்த - பழைய தரிசாகக் கிடந்த மேட்டுநிலத்தில் தழைத்த, முற்றா இளம்புல் - வளராத இளம்புல்லை. மூதா தைவந்தாங்கு - முதிய பசு, கறித்துத் தின்ன முடியாமல்,நாவால் தடவி இன்புற்றாற் போல. காமம் விருந்தே - காமம் ஒவ்வொரு முறையும் புதிய புதிய இன்பம் போலத் தோன்றும்; அதாவது நுகர்ந்து தீராது. பெரிய வலிய தோளையுடைய தலைவனுக்கு, அவன் தோழன் சொன்ன இவ் அறிவுரை அனைவருக்கும் பொருந்தும்.

## ஊழ்வினை சேர்த்துவைத்த உறவுத் திருமணம்

தமிழ் மன்பதை மரபில் அத்தை மகளை, மாமன் மகன் 'கட்டிக் கொள்வது', ஒரோ வழி உரிமை பற்றியதாகக் கருதப்பட்டது. ஆயினும் சில குடும்பங்களில் சச்சரவு, ஒற்றுமை இன்மை காரணமாக இதை இருவீட்டாரும் எதிர்ப்பதுண்டு.

சிறு வயதில் குடும்பங்கள் ஒற்றுமையாக இருந்தபோது, சிறுவனாக இருந்த காதலன் சிறுமியாக இருந்த அவளுடைய கூந்தலைப் பிடித்து இழுக்கவே, அவள் இவனுடைய சிறிய தலைமுடியைப் பிடித்திழுத்துக் கொண்டு ஓடுவாளாம். இவர்களின் குடுமிப்பிடி சண்டையைச் செவிலித்தாயர் தடுக்க எவ்வளவு முயன்றும் முடியாதபடி, எவ்விதக் காரணமுமில்லாமலே, சிறுசிறு சண்டைகள் ஓயாது நடக்குமாம்.

இவ்வாறு சண்டையிட்டுக் கொண்டவர்கள், வளர்ந்து மணப் பருவம் எய்தியபோது, ஒருவர்மீது ஒருவர் காதல் கொண்டார்கள். ஆனால் குடும்பமோ, இடையிலேற்பட்ட சண்டையினால் பிளவுபட்டுக் கிடந்தது. இந்நிலையில் அவர்கள் பெற்றோருக்குத் தெரியாமல் 'உடன்போக்கு' மேற்கொண்டனர். இவர்களைச் சிறுவயது முதல் அறிந்த சிலர் எதிரே வழியில் வந்தனர். அவர்களுக்கு ஒரே வியப்பு. அவ்வாறு அன்று, சண்டையிட்டுக் கொண்டவர்களா, இரண்டிரண்டாகச் சேர்த்துக் கட்டிய

மாலைபோன்று, ஒருவருடன் ஒருவர் இணைந்து, மணமக்களாக எதிரே செல்கிறார்கள்? கண்டோர் தம் வியப்பை வெளிப் படுத்தும் பாட்டு இது. முன்பு 'யானும் நீயும் எவ்வழிஅறிதும்' என்ற, முன்பின் தொடர்போ, உறவோ இல்லாதவர்கள் கொண்ட காதலைப் பார்த்த நாம், இப்போது உறவுடையார் காதலைப் பார்க்கின்றோம்.

**இவன்இவள் ஐம்பால் பற்றவும், இவள்இவன்**
**புன்தலை ஓரி வாங்குநள் பரியவும்**
**காதற் செவிலியர் தவிர்ப்பவும் தவிராது**
**ஏதில் சிறுசெரு உறுப மன்னோ!**
**நல்லமன்றம்ம பாலே மெல்லியல்**
**துணைமலர்ப் பிணையல் அன்னஇவர்**
**மணமகிழ் இயற்கை காட்டியோயே** ***(229)***

*(ஐம்பால் - பெண்ணின் கூந்தல். ஓரி - ஆணின் தலைமுடி. பரிதல் - ஓடுதல். ஏதில் - காரணமில்லாத சண்டை. பால் - ஊழ்வினை. ஒருவரை ஒருவர் காதல் கொள்ள நேர்வது முன்னைய ஊழால் என நம்பினர். பிணையல்-மாலை. துணைமலர்-ஒன்றற்கொன்று பொருத்தமான இரண்டுமலர்களைச் சேர்த்துக் கட்டுதல். மண மகிழ் - மணந்துகொண்டு மகிழ்தல்.)*

## சிறிய மானிடர் விளைக்கும் அளப்பரிய காதலன்பு

காதலன் திருமணம் செய்யாது காலங்கடத்துவதைப் பழித்துப் பேசினாள் தோழி; தலைவிக்கு அது பொறுக்கவில்லை. தங்கள் காதல் எல்லையற்ற, அளப்பரிய சிறப்புடையது. அதற்கு ஈடு இணை இல்லை என்றாள் அவள். தலைவன் தன்னை உறுதியாக விரைவில் திருமணம் செய்து கொள்வான் என்ற நம்பிக்கையில், தோழியிடம் தலைவி பேசுவது இது. *(இயற்பழித்தல் - தோழிதலைவன் இயல்பைப் பழித்துப் பேசுதல். இயற்பட மொழிதல் - தலைவி தலைவன் இயல்பைப் போற்றிப் பேசுதல்.)*

நிலத்தினும் பெரிதே, வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரளவு இன்றே, சாரல்
கருங்கோல் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடுநட்பே (3)

காதலன் மலைநாடன். அம்மலைச் சாரலில், கரிய அடித் தண்டினை உடைய குறிஞ்சிப் பூக்கள், மலைமுகடெல்லாம் மூடும்படி அத்துணை அழகாகச் சில்லென்று பூத்திருக்கும். சிறிய பூக்கள் கொத்துக் கொத்தாகப் படர்ந்திருக்கும். மலைத் தேனடை, சூரிய வட்டம்போல், மிகப் பெரிதாக இருக்கும். சின்னஞ்சிறிய பூக்களைக் கொண்டு, மிகப் பெரிய தேனடையைக் கட்டும் மலைநாடனொடு நான் கொண்ட நட்பும் அத்தகையதே. அது நிலவுலகைவிடப் பெரியது; வானைவிட உயர்ந்தது; கடல்நீரை விட அளத்தற்கரிய ஆழமுடையது. (எங்கள் காதல் பிறர் கருதுவதுபோல் எளிதானதன்று; அழிவற்றது, அளப்பரியது.)

பெண்களுக்கு ஓர் இயல்புண்டு; தாங்கள் தங்களுக்குரியவரைப் பற்றிக் குறை கூறுவார்கள்; ஆனால் பிறர் குறைசொல்லப் பொறுக்கமாட்டார்கள். இங்கு தோழி தன் காதலன்மீது குறைப்பட்டது, தலைவிக்குப் பொறுக்கவில்லை. அதை மறுத்து உணர்ச்சிப் பெருக்கில் இவ்வாறு பேசுகிறாள்.

## ஒருமனப் பட்டவர்க்குத் திருமணமாம் உள்ளத்தில் மகிழ்ச்சி வெள்ளமாய்ப் பாய்கிறது

களவுக் காதலென்பது ஓரிரு மாதங்களில் திருமணத்தில் முடிந்துவிட வேண்டுமென்பதே தமிழர் பண்பாடு. சங்க இலக்கியத்தில் களவுப் பாடல்கள் எல்லாம், ஏதேனும் ஒருவகையில் கற்பை நோக்கியனவாக இருக்கும். தோழியின் கூற்றுக்கள் பெரும்பாலும் தலைவனைத் திருமணத்திற்குத் தூண்டும் நோக்கிலேயே அமைந்திருக்கும். நச்சினார்க்கினியர், வடமொழிக் காந்தர்வ மணத்துடன், இக் களவுக் காதலை ஒப்பிடும்பொழுது, ''கந்தருவர்க்குக் கற்பின்றி அமையவும் பெறும். ஈண்டுக் கற்பின்றிக் களவே அமையாதென்றற்குத்

'துறையமை' என்றார்'' என எழுதியுள்ளார். (களவியல் - நூ.1). கந்தருவ மணம் என்பது, திருமணம் செய்து கொள்ளாமலே, அப்படியே வாழலாம். தமிழர் சமுதாயத்தில், உடன்போக்கில் இருவரும் தனித்துப் போனாலும் அது, 'நாடறி நன்மணத்தில்' முடிதல் வேண்டும்.

தலைவன் தலைவியின் பெற்றோரிடம் பெண்கேட்டு வந்து, அவர்களும் ஒப்புதல் கூறிவிட்டனர். இந் நற்செய்தியைச் செவிலித்தாய் கூறக்கேட்ட தோழி அளவற்ற மகிழ்ச்சி யடைந்தாள். அந்த உணர்ச்சிப் பெருக்கை வெளிப்படுத்தும் பாடல் இது.

**அரும்பெறல் அமிழ்தம் ஆர்பத மாக**
**பெரும்பெயர் உலகம் பெறீஇயரோ, அன்னை**
**தம்மில் தமதுஉண் டன்ன சினைதொறும்**
**தீம்பழம் தூங்கும் பலவின்**
**ஓங்குமலை நாடனை வரும்என் றோளே (83)**

அவன் உயரமான குறிஞ்சி மலைநாடன். அங்கு பலாமரக் கிளைதொறும் இனிய பலாப்பழம் தொங்கும். அது தரும் இனிய சுவை, தான் கட்டிய தங்களது சொந்த வீட்டிலிருந்து, தன் முயற்சியால் தான் தேடிய செல்வத்தைக் கொண்டு தங்கள் குடும்பம் உண்டு சிறந்து வாழும்போது பெறும் இன்பம் போன்றது. அத்தகையவன் திருமணத்திற்கான ஆயத்தங்களோடு வருகின்றான் என்ற நற்செய்தியைச் செவிலித்தாய் கூறினாள். அவள் பெறுதற்கரிய அமிழ்தத்தை உண்ணும் உணவாகப் பெறக் கூடிய மிக்கபுகழுடைய துறக்கவுலக இன்பத்தையும் அடைவாளாக! (ஆர்பதம் - உண்ணும் உணவு. பெரும் பெயர் உலகம் - எல்லோரும்பெரிதாகப் புகழும் மேல் உலகம். இங்கு அவையும் இவ்வுலக வாழ்வைச் சிறப்பாகப் போற்றத் துணைக் கூறாக வருதல் காண்க. தமது - தாம் தேடிய செல்வம். தூங்கும் - தொங்கும்.)

தம்மில்இருந்து தமதுபாத்து உண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு (1107)

என்ற குறளை ஒப்புநோக்குக. வெண்பூதனார் இக்குறளை எடுத்தாள்வது, தொடரொப்புமையால் புலனாகிறது. ஓங்குமலை நாடனின் பலாப்பழம் போலவே, திருமணமானதும் தலைவிக்குக் காதலின்பம் வாய்க்குமாதலின், அவன் நாட்டின் மேல் ஏற்றி இவ்வுவமை கூறப்படுகிறது. தடையின்றித் தாய் ஒப்புக் கொண்டாலே, அது எல்லோரும் ஒப்புக் கொண்டதாகும். பலாப் பழத்தின் இன்சுவையைத் தரும் நாடனைத் திருமணம் செய்ய வருவனென்ற தாய், அமிழ்தத்தை உண்டு, மேலுலக இன்பத்தையே பெறட்டும் என்றது உணர்ச்சிப் பெருக்கின் வெளிப்பாடு.

காதலர்கள் திருமணம் செய்துகொண்டு, தனிக்குடும்பமாகித் தங்கள் முயற்சியில் பொருளீட்டி, அவ்வாறு தாம் தேடியதைப் பிறர்க்கும் கொடுத்துத் தாமும் நுகர்ந்து வாழும் இல்லற வாழ்வில் பெறும் இன்பம் துறக்கவுலக அமிழ்தம் உண்டு வாழ்தற்கு நிகரானது என்ற தொனிப் பொருள்படப் பாடியுள்ளமை, தமிழ்ப் பண்பாடாகும்.

## அகவாழ்வு கற்பிக்கும் அரிய விழுமியங்கள்

களவு என்பது, பெற்றோர் அறியாது காதல் கொள்வது. பெற்றோர் பார்த்துச் செய்துவைத்த திருமணங்களும் மிகுதியாக நடந்துள. ஆனால் அவை பாடுபொருளாவதில் ஒரு சுவையில்லை. அதனால் இக் களவுக் காதல் பற்றியே புலவர்கள் விரும்பிப் புனைந்துள்ளனர். ஆனால் களவொழுக்கம் இரண்டு திங்களுக்குள் முடிய வேண்டும்; திருமணம் ஆக வேண்டும் என்ற சமுதாய நிலை அன்று இருந்தது. சிலபோது இக்கால எல்லை நீட்டிக்க நேர்தல் உண்டு. ஒரு பெண்ணை மணப்பவன், 'பரிசம்' போட்டு, பெண்ணுக்கு வேண்டியன கொடுத்து மணக்கவேண்டும். அதற்கான செல்வத்தைத் தேடிவர, அவன் பிரிவான். பொருள்தேடி வந்து, பரிசம்போட்டு, அவளை மணப்பான். பொருள் தேடிவரப்

போவதை, ''வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதல்' என்பர் (வரைவு - திருமணம். இது சிறு பிரிவாகவே அமையும்.)

ஒரு தலைவன் இவ்வாறு வரைவை (திருமணத்தை) இடைவைத்துப் பிரிந்தவன், திரும்பக் காலத் தாழ்வானது. இதனால் தலைவி வருந்தினாள்; அவள் உடல் வாடி நிறம் மாறிக் கறுத்துச் சிறுத்துப் போனது. இதனைப் 'பசலைநோய்' என்பர். இந்நிறம் மாறும் பசலை நோய் விரைவில் நீங்கிவிடும்; தலைவன் விரைவில் வந்து மணப்பான் என்று தோழி ஆறுதல் கூறுவது பாடற்பொருள். இதனைப் பாடிய 'மதுரைக் கணக்காயன் மகன் நக்கீரன்', அரிய கருத்துக்களைப் பொதிந்து வைத்துள்ளார்.

**அழியல் ஆயிழை அன்புபெரிது உடையன்**
**பழியும் அஞ்சும் பயமலை நாடன்**
**நில்லாமையே நிலையிற் றாகலின்**
**நல்லிசை வேட்ட நயனுடை நெஞ்சின்**
**கடப்பாட் டாள னுடைப்பொருள் போலத்**
**தங்குதற் குரியதன்று நின்**
**அங்கலுழ் மேனிப் பாஅய பசப்பே** ***(143)***

அழியல் ஆயிழை - தலைவியே வருந்தாதே. தலைவன் மிகுந்த அன்புடையவன்; மேலும் பழிக்கு அஞ்சுபவன். அப் பயன்மிகுந்த வளமான மலைநாடன் விரைவில் வருவான். உன் மேனியில் படர்ந்த பசலைநோய் உடனே நீங்கும்! இதுதான் பாடலின் கருத்து.

கணக்காயன் என்றால் நூல்களைக் கற்பிக்கும் ஆசிரியன். மதுரையிலிருந்த அத்தகைய கணக்காயரின் மகன் நக்கீரன். அகத்திணையில், 'காமத்துக் காழில் கனி' என்பது போலப் பாடல்களும் சிறப்புடையன. அவை வெறுமனே காதல் என்று கூறி, காமத்தை எல்லை கடக்கவைத்து, மனித குலத்தை நஞ்சூட்டி மாய்க்கும் பாடல்கள் அல்ல.

உலகில் **'நில்லாமையே நிலையிற்று'** என்று கூறுகின்றார், நக்கீரர். 'உலகில் நிலையாக இருப்பது நிலையாமையே'

என்பதை, ஒவ்வொருவரும் உணர்ந்தால் நல்லது. தீயவழியில் பொருள் சேர்ப்போர் இதை உணர மறுக்கின்றனர். நல்ல பெயரெடுக்க வேண்டும் என்ற ஆசையுடைய, அன்புகனிந்த நெஞ்சினையுடைய, உலகிற்கு கைம்மாறு வேண்டாது உதவுவதையே கடமையாக எண்ணுகின்ற ஒருவனைக் 'கடப்பாட்டாளன்' என்று குறிப்பிடுகிறார் அவர். 'கைம்மாறு வேண்டா கடப்பாடு' என்ற ஒப்புரவாளனைப் பற்றிய திருக்குறளை, இது நினைப்பூட்டுகிறது. அத்தகையவனிடம் சேர்கின்ற செல்வம் அவனிடம் நிலையாகத் தங்காது, யாருக்காவது உதவப் போய்விடுமாம்! அதுபோல உன் பசலை நோய் - பிரிவுத் துன்பம் போய்விடும் என்று சொல்கிறாள் தோழி! ஆனாலும் இதிலடங்கியுள்ள மனித நேய - மானுட விழுமியம் அனைவரது சிந்தனைக்கும் உரியது.

காரைக்குடியில் அழகப்ப வள்ளல் தம் செல்வம் முழுவதையும் கல்வி வளர்ச்சிக்குக் கொடுத்துவிட்டார்; தம் மாளிகையையும் பெண்கள் கல்லூரிக்குத் தந்துவிட்டார். அவருக்குப் பிறகு ஒருகாலத்தில் அங்கு பேசவந்த தந்தை பெரியார், ''அழகப்பர் சேர்த்த செல்வம் அவருக்கே உரிய செல்வம் ஆனது'' என்றார். அவர் அச் செல்வத்தைத் தமக்கென்றும் தம் குடும்பத்திற்கென்றும் முடக்கியிருக்கலாம். காலப்போக்கில் அது கைமாறிப் போயிருக்கும். பின்னாளில் அவர் வழி வந்தவர்கள் பெயரைச் சொல்வதாக, ஆகியிருக்குமே தவிர, அவர் பெயரைச் சொல்லாது. 'நில்லாமையே நிலையிற்று' அல்லவா? கடப்பாட்டாளனுடைய செல்வம் அவனிடம் நில்லாது; பிறர்க்குப் பயன்படுமாறு உடனே அவன் கையைவிட்டுப்போய் விடும். 'ஈத்துவக்கும் இன்பம்' அறிந்தவனிடம், கைப்பொருள் தங்காது. இன்றும் அழகப்பர் பல்கலைக் கழகமும் கல்லூரிகளும் பல நூறாயிரம் மாணவர்களும் அழகப்பர் பெயரையே சொல்வதால், அவர் சேர்த்த செல்வம் இன்றும் அவர்தம் செல்வமாகவே விளங்குகிறது என்ற தந்தை பெரியாரின் கூற்று எத்துணைப் பொருத்தமென எண்ணிப் பாருங்கள்!

## உலகம் எங்கே போகிறது?

குடும்பம் என்பது ஒரு தனி உலகம். அதனை உலகில் சிறு முழுமைபெற்ற கூறு எனலாம். குடும்பம் பற்றியும் உறவுடைய பல குடும்பங்கள் இணைந்த 'குடி'கள் பற்றியும் திருவள்ளுவர் மிக அழுத்தமாகப் பாடியிருப்பன, அவருக்கு இவற்றிலிருந்த அசைக்க முடியாத நல்லெண்ணத்தைக் காட்டுகின்றன. ஒரு மனிதனின் முதற்கடமை தன் குடும்பத்தைத் தாங்குதல்; அடுத்தது குடியின் பெருமையை நிலைநிறுத்துதல்; அதற்கப்பால் ஒப்புரவு எனும் பொதுநலம்; அதற்கும் மேலே ஈகை எனும் எளியோரைக் காத்தல். சிலர் தம் குடும்பத்தோடு நின்றுவிடுகின்றனர்; அதற்காகத் தன் குடும்பத்தை விட்டு விடுதலும் தீது. படிநிலை வளர்ச்சி வேண்டும்.

அதனால்தான் 'குடும்பக் கட்டமைப்பை' வற்புறுத்த வேண்டியுளது. தாய் தந்தை, கணவன் மனைவி, அண்ணன் தம்பி, தமக்கை தங்கை, மாமன் மாமி, உற்றார் உறவினர், பேரன் பேர்த்தியர் என வாழும் முறை ஒன்று; இங்கு கூறிய எவ்வுறவுமின்றி உதிரிகளாய் வாழ்வது ஒன்று. இன்று ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளில் மேற்சுட்டிய எவ்வுறவுமின்றி, உதிரிகளாக வாழ்வோர் தொகை பெருகி வருகிறது.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூறுகளில் அமெரிக்காவில் இருந்த நிலைமையை நேரில் காண நேர்ந்தது. வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பின் பேரில் நானும் ஈரோடு தமிழன்பனும் சென்றிருந்தோம். ஏறத்தாழ ஐம்பது மாநிலங்களின் குறுக்கே பறந்து, இருபத்தைந்து மாநிலங்களில் உரையாற்றினோம்.

நானும் என் மனைவியும் நான்கு மாதங்கள் தங்கினோம். எங்கள் மகன்கள் வீட்டில் நான்காம் மாதம் முழுவதும் ஓய்வாக இருந்தபோது, அங்கு நிகழும் உதிரி வாழ்க்கை, பாலியல் சீரழிவு, 'கலாச்சார' அழிவு எனப் பலவற்றைப் பற்றித் தாள்கள் வாயிலாக அறிய நேர்ந்தது.

அன்று அங்கே அப்போது, ஓரினச் சேர்க்கை பற்றி நடந்த அதே கருத்துப்போர்தான், இன்று இங்கே நடைபெறுகிறது.

கணவனும் மனைவியும் வேலைக்குப் போவதால் குடும்பம் சீரழிகிறது; ஒருவர் போனால் போதும்; மற்றவர் குடும்பத்தைக் கவனிக்க வேண்டுமெனப் பாதிரிமார்கள் சிலர் இயக்கமே நடத்தினர். அவர்கள் முயற்சியெல்லாம் காட்டாற்று வெள்ளத்தில் கரையும் மணல்மேடு போலானது.

இருபாலரும் படிக்கும் பள்ளிகளில், பள்ளி இறுதியை ஒட்டிய வகுப்புக்களில், பையன்கள் பெண்குழந்தைகளைச் சீண்டிச் செய்த குற்றங்கள் பல தாள்களில் வெளிவந்தவண்ணம் இருந்தன. அவற்றைக் கருதுவாரில்லை.

ஆண் பெண் பாலர்க்குத் தனித்தனிப் பள்ளிகள் வேண்டுமென்ற இயக்கமும் கலிபோர்னியா மாநிலத்தில் நடந்தது. அது வெற்றிபெற்றதாகத் தெரியவில்லை.

குடும்பச் சிதைவு, பாலியல் சீரழிவு நோக்கி நம் நாடும் ‘முன்னேறி’ வருகிறது. பழங்காலத் தமிழகத்திலும் நிறைகுறைகள் இருந்தன

குற்றங்குறைகள் நிறைந்திருந்த ஒரு மாந்தரினத்தை, நாகரிகப் பண்பாடு நோக்கி, வளர்க்க - திருத்த - கண்டிக்கத் தோன்றியது போலவே சங்கச் செவ்வியற் பாடல்கள் அனைத்தும் காணப்படுகின்றன. கைவிரல்விட்டு எண்ணக்கூடிய சில பாக்களே ஐயத்திற்குரியனவாயுள்ளன. இது மேலும் ஆராயவும் ஊன்றி நோக்கவும் வேண்டியதாகும்.

குடும்ப உறவு சிதைந்து, உதிரிகளாய் வாழ்வது சுதந்திர வாழ்வென்று இன்று கருதுகின்றனர். ஒருவர்மீது ஒருவர் நம்பிக்கையின்றியே வாழும் சூழல்கள் பலவாகும்.

இத்தகைய நிலையற்ற அவல வாழ்க்கையில் அல்லற்படும் ‘மேனாட்டார்’ எனப்படுவோரில், சான்றாண்மை மிக்கவர்கள்

நம்மைப் பார்த்துத் திருந்த வேண்டும் என்ற கருத்தைப் பரப்பி வருகின்றனர். நம் ஊடகங்கள் அவர்களின் பாலுறவுச் சீரழிவுகளை நோக்கியும் குடும்பச் சிதைவுகளை நோக்கியும் நம் இளையோரை அழைத்துச் செல்கின்றன. இங்கு இல்லாத அல்லது மிக அரிதில் காணப்படுகின்ற குற்றங் குறைகளைப் புனைந்து, பெரிதுபடுத்தி மக்கள் மனத்தை மரத்துப்போகச் செய்கின்றன. இவற்றைத் தடுப்பதற்கெனத் தனிச் சட்டம் வகுத்து, இத்தகைய கலாச்சாரச் சீரழிப்பார்களுக்கு இரட்டை ஆயுள் தண்டனை தரும் காலமே, மீண்டும் நல்ல திசைநோக்கிச் சமுதாயம் நடைபயிலும் காலமாகும்.

மிகவும் நாகரிக வயப்படாத அத் தொன்மைமிக்க காலத்திலேயே தொல்காப்பியரும் சங்கப் புலவர்களும், இலக்கியத்தை எவ்வாறு படைக்கவேண்டும்; எவ்வாறு படைத்தால் மானுடம் உய்யும் என்று காட்டியுள்ள நெறிமுறைகளை மேன் மேலும் ஆராய்ந்து, மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டும்.

## குன்றம் நோக்கியதும் குறைதீர்ந்தது

மனவுணர்வுகள் மிக நுட்பமானவை. ஒருவரின் உள்மன உணர்வைக் கண்டுகொள்வது எளிதன்று. சிலர் வெளியில் மகிழ்ச்சியுடன் காணப்படினும் ஆழ்மனத்தில், ஒரு துன்ப நெருடல் இருக்கக் கூடும். மிகச் சிறந்த சான்றாண்மை மிக்க ஆணும் பெண்ணும் எளிதில் உணர்வுகளை வெளிப்படுத்த மாட்டார்கள். குறை குடம்தான் தளும்பிக் கொண்டே இருக்கும்.

கண்ணாடியில் வாயால் ஊதியதும் அதில் புகைபோல் படரும். ஆவிபோன்று சிலரது கண்ணும் முகமும் இன்ப துன்ப உணர்வுகளின் இரேகை படர்ந்து காணப்படும்.

ஒரு தலைவியைத் தலைவன் காதலித்தான். திருமணம் செய்யப் பொருள் தேடிவரப் பிரிந்தான். அவன் வரக் காலத் தாழ்வாயிற்று. தோழி அவன் வரும்வரை உன்னால் ஆற்றியிருக்க முடியுமா என்று தலைவியிடம் கேட்டாள். உண்மையில்

தலைவிக்கு வருத்தம்தான். ஆயினும் அதை மறைத்துக் கொண்டு, அவள் பேசினாள்.

'மயில்கள் கூட்டமாக இருந்து அகவும் மரமடர்ந்த காட்டிடத்தே, முகம் மட்டும் வெளுத்திருக்கும் கருங்குரங்கு தன் குட்டிகளுடன் குளிரால் நடுங்க, மிக்க மழை பொழிந்த மலைச் சாரலையுடைய **அவரது** நாட்டுக் குன்றத்தை நோக்கினேன். என் நெற்றி பழைய பொலிவை அடைந்துவிட்டதா? தோழி! சற்றே என் நெற்றியைப் பார்!'

ஒருவரில்லாத பொழுது, அவர் பயன்படுத்திய பொருள்களையோ, அவர் இருந்த இடத்தையோ பார்த்தால், துன்பம் குறையக்கூடும். இஃதோர் உளவியல். நினைவற்றிருந்தவருக்கு நினைவு வந்து துன்பம் மிகலாம்; நினைப்போடிருந்தவர்க்குத் துன்பம் குறையலாம்.

இது மிக மென்மையான உணர்வு. உடம்பிலும் மிக நுட்பமாகவே இது வெளிப்படும். மனநிலைகளை, உள்ளுணர்வுகளை, நிலைமாறும் மன உணர்வலைகளைப் படம்பிடிப்பதில், அவையப் புலவர்கள் மிகுந்த கருத்துச் செலுத்தியுள்ளனர். அவற்றின் முடிமணியாக, கபிலர் பாடிய இப்பாடலைப் போன்ற பல பாடல்கள் திகழ்கின்றன.

**இனமயில் அகவும் மரம்பயில் கானத்து**
**நரைமுக ஊகம் பார்ப்பொடு பனிப்ப**
**படுமழை பொழிந்த சாரல் அவர்நாட்டுக்**
**குன்றம் நோக்கினென் தோழி**
**பண்டை யற்றோ, கண்டிசின் நுதலே** ***(249)***

இனமயில் - மயில் கூட்டம். பயில் - கூடுதலாகவுள்ள. நரைமுகம் - முகம் மட்டும் வெள்ளைநிறம். ஊகம் - கருங்குரங்கு. பார்ப்பு - சிறுகுட்டி. படுமழை - இன்றும் உலகியலில் படுசுட்டி, படுவெய்யில், படுமழை என மிகுதியானதைச் சுட்டுவர்.

## நலம்பெற, குன்றம் பாடுவதே போதும்

தலைவிக்கு ஏற்பட்ட காதல்நோயை வேறாக நினைத்துத் தாயர் கட்டுவிச்சியை அழைத்துக் குறிகேட்டனர். கட்டுவிச்சி முறத்தில் நெல்லைப் போட்டு, குறிபார்ப்பாள். நற்றாயும் செவிலித் தாயும் தோழியரும் தலைவியுடன் சூழ இருக்கக் குறிகேட்கும் நிகழ்ச்சி நடக்கிறது. இதில் தலைவிக்கும் அவளுடைய உயிர்த் தோழிக்கும் மட்டும், இது காதலால் வந்த நோயென்று தெரியும்.

அதனால் இதை மறைமுகமாகக் குறிப்பாகத் தெரிவித்து விட வேண்டும் என்று தோழி நினைக்கின்றாள். இல்லை யென்றால் இது முருகனால் வந்த நோய் என்று கட்டுவிச்சி கூற, அந் நோயைத் தீர்க்க முருகனுக்கு வெறியாட்டு நடத்த என்று இது நீண்டு கொண்டே போகும்.

இக் கூற்றுக்கு அறத்தொடு நிலை என்று பெயர். அதாவது காதலித்தவனையே கைப்பிடிப்பதே அறமாதலின், அக் களவுக் காதலைப் பெற்றோருக்கு வெளிப்படுத்துவதை 'அறத்தொடு நிலை' என்றனர். அறநெறியில் பிறழாது நிற்பது அது.

கட்டுவிச்சி உடனே குறிகூற மாட்டாள். அவள் முதலில் தன் மலைவளம் பற்றி, நீண்ட பாடல் பாடுவாள். அது அவளுடைய குன்றம் பற்றியது. அதே குன்றத்திற்குரியவன்தான் தலைவனும். எனவே அக் குன்றம் பற்றிய பாடலைக் கேட்டாலே, தலைவியின் நோய் தணியக் கூடும். தக்க சமயம் பார்த்துத் தோழி, கட்டுவிச்சியிடம் 'நீ பாடிய 'அவரது' குன்றம் பற்றிய பாடலையே பாடு, அதுபோதும், அதைக் கேட்டாலே தலைவி ஆறுதலடைவாள்' என்று கூறுகிறாள். 'அவர் குன்றம்' என்றால், 'எவர் குன்றம்' என்று தாயர் தடுமாறுவர். பிறகு உண்மை வெளிப்பட்டுவிடும்.

நம் நாட்டில் 'அவர்' என்றால், அன்றும் இன்றும் அது 'அவர்' ஒருவரையே குறிக்கும். 'அவர் வீட்டிலில்லை', 'அவர் வந்துவிடுவார்' என்று கணவரை – காதலரை – பெரியவர்களைக்

குறிக்கும் வழக்கம் இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட ஆண்டுகளாக நிலைபெற்றுளது.

சங்க இலக்கியம் பேச்சுநடையைப் பின்பற்றியது என்பது பற்றியும், 'அவர்' எனும் சொல் வழக்காறு பற்றியும் தொல்காப்பியரின் இலக்கியக் கோட்பாடுகள் பற்றியும் தொல்காப்பியர் இலக்கணி மட்டுமல்லர், அவர் ஒரு இலக்கியக் கோட்பாட்டாளரும் ஆவார் (Theorist) என்றும் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எண்பதுகளுக்கு முன்பிருந்தே முதன்முதலாக எழுதி, விளக்கிச் சான்றுகளுடன் நூல்களை வெளியிட நேர்ந்தது. இவற்றை இன்று அப்படியப்படியே பின்பற்றிக் கட்டுரைகளும் நூல்களும் எழுதப்படுகின்றன. அவர்கள் முதன்முதலாகச் சுட்டிக்காட்டி விளக்கியவர் இவரென, மேனாட்டார் போல, 'எழுத்தறம்' பேணுவதில்லை.

தொல்காப்பியத்திற்கு உரையெழுதி, மாணவர்க்கான பதிப்பு வெளியிடப் பெற்றது. அதில் யான் பிழைபடத் தவறி எழுதியதையும் அப்படியே பின்பற்றி எழுதினர். எழுத்துலகில் இவ்வாறு அறம் பிறழும் இயல்பு என்றும் நடைபெறுவதேயாகும். இதில் எனக்கு வருத்தமில்லை. ஆயினும் உலக நடைமுறையைச் சொல்லாது விடுவது, தீமை வளர வழிவகுத்துவிடும்.

தோழி சாதுரியமாக, 'அவர்' குன்றம்பாடிய பாட்டைத் திரும்பவும் பாடச்சொல்லி, களவுக் காதலை வெளிப்படுத்திய பாங்கு, பாடலில் நிலைபேறு பெற்றுவிட்டது.

**அகவன் மகளே! அகவன் மகளே!**
**மனவுக்கோப் பன்ன நன்னெடுங் கூந்தல்**
**அகவன் மகளே! பாடுக பாட்டே!**
**இன்னும் பாடுக பாட்டே! அவர்**
**நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டே** ***(23)***

*'அகவிப்பாடும் கட்டுவிச்சியே! மனவுக் கோப்பு என்னும் சங்கு மணிமாலை போலவே நரைத்த நல்ல கூந்தலையுடைய கட்டுவிச்சியே!*

நீ குறிசொல்லுமுன் இப்பொழுது பாடிய உன் குன்றம் பற்றிய பாடலையே மீண்டும் பாடு! திரும்பவும் பாடு! ஏனெனில் இது அவரது குன்றம் பற்றிய பாட்டாகும்! எனவே அப் பாடலையே திரும்பத் திரும்பப் பாடு! (அதுவே இவளுக்கு நோய் தணிக்கும்). தாயருக்கு 'அவர்' என்ற சொல் ஐயத்தை ஏற்படுத்தி, காதலனாகிய 'அவர்' ஒருவர் உள்ளார் போலும் என்று எண்ண வைத்து, பிறகு உண்மையைக் கேட்டறிய வைத்துவிடுகிறது.

குன்றம் நோக்கினும் நோய் தணிகிறது; குன்றைப் பாடினும் நோய் தணிகிறது என வரும் இவை, நுட்பமான மனவுணர்வுப் படப்பிடிப்புகளாகும்.

## இல்லற வாழ்க்கையின் இனிமை

சங்கப் புலவர்கள் ஒருவன் தன் முன்னோர் தேடிய சொத்தினை வைத்து வாழ்பவர்களை மதித்திலர். 'உள்ளது சிதைப்போர் உளரெனப் படார்' என அவர்களைத் தாழ்வு படுத்திப் பாடினர். தன் முயற்சியால் தான் ஈட்டிய பொருளை வைத்துப் பிறர்க்கும் கொடுத்துத் தானும் உண்டு வாழ்வதைப் போற்றினர். ஒருவன் முயற்சியின்றி, சோம்பேறியாய், இரந்து வாழ்வதைக் கடிந்து பாடினர். பெரிதும் பிறர்க்கு உதவி வாழவேண்டும்; மற்றவரைக் காப்பாற்றி வாழவேண்டும்; ஊரை வாழவைத்துத் தான் வாழவேண்டும் என்று பாடினர்.

இல்வாழ்க்கைதான் பிறரை வாழவைத்துத் தானும் வாழ்வது என்பதால் அதையே போற்றினர். துறவைப் பற்றி, 'அஃதும் பிறன்பழிப்பதில்லையாயின் நன்று' என்று, இல்லறத்திற்கு அடுத்ததாகவே கூறினர்.

இந்திய மொழிகளின் இலக்கியமனைத்தும் துறவியரைத் தெய்வமெனத் தொழக் கூறின. தமிழ் இலக்கியம் ஒன்றே 'இல் வாழ்க்கையை'ப் போற்றி, துறந்தார்க்கும் இல்லறத்தாரே துணை எனக் கூறி, வையத்துள் வாழ்வாங்கு வாழும் இல்லறத்தாரையே, 'வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்' என்று கூறியது.

பிரிவினால் வாடிய தலைவி தனக்கு ஆறுதல் கூறுவாரே இலர் என்றும், தனது 'எனைவிருப்புடையராயினும், நினைவிலர், நேர்ந்த நெஞ்சும் நெகிழ்ந்த தோளும் வாடிய வரியும் நோக்கி நீடாது, எவன் செய்தனள்இப் பேரஞர் உறுவி என்று ஒருநாள் கூறின்றும் இலரே' என்று தன் தோழியிடம் கூறி அழுகின்றாள். தலைவன் தன்மீது பாராமுகமாக இருப்பதன்றியும், வேறு காரியங்களே பெரிதென்று கருதி இல்லற இன்பத்தை மறந்திருப்பதே அவளுக்குப் பேரவலமாகப் படுகிறது. அவள் தோழியிடம் 'செம்மல் மூதூர்த் தமதுசெய் வாழ்க்கையின் இனிய துண்டோ' என வினவுகின்றாள். பழைமை வாய்ந்த ஊரிலே, தம்முடையதாகத் தாமே முயன்று வாழும் இல்வாழ்க்கையை விட இனியது வேறு ஏதும் உண்டோ? என்று கேட்கின்றாள் (நற்.130).

குறுந்தொகையிலும் இதுபோன்ற கருத்துடன் கூடிய சொல்லாட்சி வருகிறது. திருக்குறள் ஒப்புமைக்காகப் பார்ப்போம்.

தலைவன் திருமண ஏற்பாட்டுடன் வருகின்றான். இதனைச் செவிலி கூறினாள். இந் நற்செய்தியைக் கூறிய செவிலித் தாயைத் தோழி வாழ்த்துகின்றாள்.

'தாய் மலைநாடனைத் திருமண ஏற்பாட்டுடன் வருகின்றான் என்று கூறினாள். அவன் பலாமரக் கிளைதோறும் இனிய பழங்கள் தொங்குகின்ற ஓங்குமலை நாடன். அப் பழங்களின் இனிமை, தான் தேடிய செல்வத்தால் கட்டிய தன் வீட்டிலிருந்து, தனது பொருட்செல்வத்தைக் கொண்டு, தனது குடும்பத்துடன் உண்டு வாழ்வது எவ்வளவு இனிமையோ, அவ்வளவு இனிமையுடையது.'

**அரும்பெறல் அமிழ்தம் ஆர்பத மாகப்**
**பெரும்பெயர் உலகம் பெறீஇயரோ அன்னை**
**தம்மில்லிருந்து தமதுஉண் டன்ன சினைதொறும்**
**தீம்பழம் தூங்கும் பலவின்**
**ஓங்குமலை நாடனை வருமென் றோளே** (குறு. 83)

திருக்குறளில், 'தம்மில் இருந்து தமதுபாத்து உண்டற்றால், அம்மா அரிவை முயக்கு' (1107) என்று வருகிறது. 'தம் சொந்த வீட்டிலிருந்து, தாம் தேடியதைப் பகுத்துண்டு வாழ்வதிற் பெறும் இன்பம் போன்றது, இவளை (என் காதலியை) நான் தழுவிக் கொள்ளும் பொழுது பெறும் இன்பம்' என்பது கருத்து. இதில்வரும் 'தம்மிலிருந்து தமதுபாத்து உண்டற்றால்' என்ற உவமைத்தொடர், 'செம்மல் மூதூர்த் தமதுசெய் வாழ்க்கையின் இனியதுண்டோ' என்ற நற்றிணையுடனும் 'தம்மில்லிருந்து தமதுண்டன்ன' என்பதுடனும் சொல், தொடர், கருத்து மூன்றாலும் ஒத்துப்போகிறது. சங்க இலக்கியம் முழுவதும் இவ்வாறு நுட்பமாய் வரும் ஒப்புமைகளை ஆராய வேண்டும்!

## நீலவானில் நீந்தும் பறவைகள்!

சூரியன் மலைவாயில் விழுந்த நேரம். அகன்ற நீலவானம் விரிந்து, சிறிது சிறிதாக ஒளி மங்குகிறது. எங்கோ அடிவானத்தில் ஒரு பறவைக்கூட்டம், அலகில் நெற்கதிர்களுடன் வளைந்து, மாலைபோல் பறந்து செல்கின்றன. அவற்றின் சிறகுகள் மிக வளைந்திருப்பது, அவை விரைந்து பறப்பதைக் காட்டுகின்றன.

அவை எங்கே பறந்துபோகின்றன? எங்கோ ஒரு பெருவழிப் பாதை இருக்கிறது. அதன் ஓரத்தே நன்கு முதிர்ந்து வளர்ந்த கடப்ப மரங்கள் நிற்கின்றன. அவற்றின் கிளைகள் வளைந்து, நீண்டுள்ளன. அவற்றில் இப்பறவைகளின் கூடுகள் உள்ளன. அக் கூடுகளில், இவற்றின் பார்ப்புகள் (குஞ்சுகள்) உள்ளன. அவற்றின் வாயினுள்ளே வைத்து ஊட்டுவதற்காக, இவை தங்களின் அலகுகளில் தொங்கும் இரைகளுடன், ஆர்வத்துடன் விரைந்து பறக்கின்றன.

**ஞாயிறு பட்ட அகல்வாய் வானத்து**
**அளிய தாமே, கொடுஞ்சிறைப்பறவை**
**இறையுற ஓங்கிய நெறிஅயல் மராஅத்த**
**பிள்ளை உள்வாய்ச் செரீஇய**
**இரைகொண் டமையின் விரையுமால் செலவே** *(92)*

ஐயோ இப் பறவைகள் இரங்கத் தக்கன; வளைந்த சிறகுடன் விரைந்து பறக்கின்றன.

பறவைகளின் பிள்ளைப் பாசம் அவ்வாறு பறக்க வைக்கிறது. இப்பாடலை மறுமுறை படியுங்கள். இது பறவைகளைப் பற்றிய பாடல்கள் என்று தோற்றும்.

இதன் கீழே அடிக்குறிப்பாளர், 'காமம் மிக்க கழிபடர் கிளவியால் பொழுதுகண்டு சொல்லியது' என எழுதியுள்ளார்.

தலைவி கூற்று இது. தன் வீட்டிலிருந்து வானத்தைப் பார்க்கும் அவள், 'தன் கணவனும் பொருள் தேடிக்கொண்டு, இவ்வாறு வரவில்லையே என' ஏங்குகின்றாள். அது பாடலில் இல்லை. 'காமம் மிக்க' என்பது, பிரிவால் வாடும் தலைவியின் மனநிலை, உணர்ச்சி மிகுதி, கழிபடர் - மிக்க துன்பம். அதனால் பறவையைப் பார்த்து, தனக்குள் புலம்புகிறாள். இதனை 'இறைச்சி' அமைந்த பாட்டு எனலாம். பறவைகளின் அன்பு, மாந்தரது காதலாகிய உரிப்பொருளுக்குப் புறத்தே வந்து, அவ் அன்பை மிகுவிக்கப் பயன்படுகிறது.

மிக முற்பட்ட காலத்திலேயே, இங்ஙனம் சிறந்த கவிதைப் பண்புள்ள பாடல்களைப் புனைந்துள்ளனர்.

இது பல நூற்றாண்டு வளர்ச்சியைக் காட்டுகிறது.

## மனத்தின் இயல்பு

மாந்தர்தம் மனம் சார்ந்ததன் வண்ணமாகும் இயல்புடையது. அன்றைய இயற்கை வாழ்வில், கடல்நண்டு முதல் மலைவாழ் யானைவரை நன்கு பழக்கப்பட்டனவாய் இருந்தன. நண்டு தன்னைக் கொத்தவரும் கொக்குக்குப் பயந்து, அளையுள் ஓடி ஒளியும் காட்சி, இரக்கவுணர்வைத் தோற்றுவித்தது.

மாந்தர்தம் காதல் வாழ்வைப் பாடும் அகத்திணை முதல் கரு உரி என முப்பொருளைத் தன் உள்ளடக்கமாகக் கொண்டது.

இவற்றுள் முதல் என்பது நிலமும் பொழுதுமாகும். பொழுது, பருவ மாற்றங்களை அல்லது கட்புலனாகாத காலம் என்பதை எங்ஙனம் உணர்ந்தனர்? செயற்கைத் தன்மை மிகுந்துவிட்ட இன்று, அறிவியலை வைத்து உணர்கிறோம். அன்று மழைவரக் கூடும் என்பதை நூறு வழிகளில் முன்னதாக உணர்ந்தனர். 'ஆற்று வெள்ளம் நாளைவரத் தோற்றுதே குறி' எனப் பாடுவர். மண் வாசனை வருகிறது; கூடுதலாக இறுக்கமாக இருக்கிறது; வியர்வை மிகுகிறது; எறும்புகள் விரைந்து நகர்கின்றன; ஆடு அடைகிறது; ஈ மொய்க்கிறது என்றெல்லாம் கூறுவர். உழவர்களைக் கேட்டால் இன்னும் நுட்மான பலவற்றைக் கூறுவர். வெள்ளி என்ற நாள்மீன் வடக்கே சாய்ந்தால் மழை வருமென்றும் தெற்கே சாய்ந்தால் மழையின்றி வறட்சி ஏற்படும் என்றும் பாடியுள்ளனர். 'வெள்ளி, திசை திரிந்து தெற்கேகினும்' வள்ளல்களால் நாடு வாழ்ந்ததாகப் புகழ்ந்துள்ளனர்.

சிற்றுயிர்களுடன் பழகியதால் சிலபல நல்ல பண்புகளையும் மனிதர் பெற்றுள்ளனர். இன்று 'செல்ல உயிரினங்களை' வளர்க்கும் பழக்கம், மேனாட்டார் சிலரிடம் மிகுதியாகவுளது. பறவைகள், விலங்குகளைப் பார்த்துப் பிள்ளைகளைப் பேணிக் காக்கும் பண்பு மனிதருக்கு ஏற்பட்டுள்ளது. பறவைகள் தன் பார்ப்புகளுக்கு, உணவைத் தன் அலகால், குஞ்சுகளின் வாய்க்குள் வைத்து ஊட்டுவது கண்கொள்ளாக் காட்சி.

மனிதர்களைப் பார்த்து குழந்தைப் பாசம், தத்தம் இணைமீது அன்புப்பொழிவு, குடும்ப நேயம், பிரிந்தறியா வாழ்க்கை, இணைவிழைச்சுப் பாலுறவு போன்றவற்றை ஐயறிவுயிர்கள் கற்கவில்லை; அவ்வாறு கற்றலுக்கான அறிவும் அவைகளுக்கு இல்லை. அச்சிற்றுயிர்களைப் பார்த்துத்தான் மனிதர்கள் இவை பற்றியவற்றைக் கற்றுக் கொண்டுள்ளனர்; அதாவது தம்மிடம் இயல்பாகவுள்ள இவ் வுணர்வுகளை வளர்த்துக் கொண்டுள்ளனர். இவற்றை 'இறைச்சி' என்ற கோட்பாடாகவும் புலவர்கள் பயன்படுத்திக் கொண்டுள்ளனர்.

இன்று 'இறைச்சி' என்றதும் இவ் வுயிரினங்களின் தசை, மாமிசம் எனப் பொருள் கொள்கிறோம். முன்பு இது அவ்வுயிரினங்களைக் குறித்து, பொருள்மாறி அவற்றின் 'உடலை'க் குறிக்கலானது. இதனை இழிபொருட்பேறு என்பர்.

தலைவி தலைவன் பிரிவால் வாடுகிறாள். தோழி தலைவன் விரைவில் திரும்புவான் என்று உறுதி கூறுகிறாள். அதற்கு அவள் கூறும் காரணம்தான், அக்கால இயற்கை வாழ்வைக் காட்டுகிறது. யாமரம் பாலை நிலங்களில் காணப்படும். அதன் பட்டை, வறண்ட காலங்களிலும் ஈரப்பசையோடு இருக்கும். யானைகள் தண்ணீரில்லாத காட்டில், நீர்வேட்கையைத் தணித்துக்கொள்ள, யாமரப் பட்டையை உரித்துத் தின்னும். தலைவன் போகிற சுரவழியில் இத்தகைய யானைக் கூட்டத்தைப் பார்ப்பான். வேழம் என்னும் பெரிய களிற்று யானை யாமரப் பட்டையை உரித்து, தன் பிடியாகிய பெண்யானையின் பசியைப் போக்கும். இயல்பாகவே, மிகுந்த அன்புடைய தலைவன், பாசம் மிக்க இக்காட்சியைப் பார்ப்பானாகையால், நிச்சயம் விரைவில் திரும்பிவிடுவான் என்பது, தோழியின் ஆறுதல் மொழி.

**நசைபெரிது உடையர், நல்கலும் நல்குவர்**
**பிடிபசி களைஇய பெருங்கை வேழம்**
**மென்சினை யாஅம் பொளிக்கும்**
**அன்பின தோழி! அவர்சென்ற ஆறே** *(37)*

நசை-அன்பு. யாம்-யாமரம். பொளிக்கும்-உரிக்கும். நல்கலும் நல்குவர்-நிச்சயம் அன்பு செலுத்துவர்.

## வன்கட் சூழ்ச்சியும் வேண்டும்

சூழ்ச்சி - என்ற சொல்லுக்கு, இழிபொருட்பேறாகி விட்டது. முன்பு சூழ்தல் என்றால் சிந்தித்தல், ஆலோசித்தல், நல்லன செய்ய ஆராய்தல் என்பதே பொருள். மந்திரி, தளபதி போல்வாரைச் 'சூழ்வார்' என்றே குறிப்பர். சூழ இருப்பார் என்பதுடன், கலந்தாலோசிக்க உரியவர் என்றே பொருள்படும்.

காலப்போக்கில் கேடுசெய்யத் தந்திரமாகச் சிந்தித்தல் என்ற பொருளில் 'சூழ்ச்சி' என்ற சொல் தரம் தாழ்ந்துபோனது.

இங்கு 'வன்கண் சூழ்ச்சி' என்பது, நல்லதற்கு மட்டுமன்றி, வல்லமையோடும் கூடச் சிந்திக்க வேண்டும்; தந்திரமாகவேனும் சூழ்தல் வேண்டும் என்ற பொருளைக் குறிக்கிறது.

தலைவன் வரையாது (திருமணம் செய்துகொள்ளாது) காலம் நீட்டிக்கின்றான். களவுக் காதல் இரண்டு திங்களுக்கு மேல் நீடிக்கக் கூடாது என்ற கருத்தும் நிலவியுள்ளது. இவ்வாறு திருமண ஏற்பாட்டுக்கு வழிவகுக்காமல், பகலும் இரவும் வந்துபோக விரும்பும் தலைவனிடம் தோழி கடுமையாக நடந்து கொள்கிறாள். முதலில் 'பகற்குறி'யை மறுத்து 'இரவுக்குறியை' ஏற்பதுபோல் பேசுகிறாள். அதன்பின் அதையும் மறுத்து இரவிலும் வராதே என்று மறுக்கின்றாள். இதைப் பார்த்த தலைவி 'இது நேர்மையா' என வினவுகிறாள். அதற்குத் தோழி, 'சும்மா இருடி! இப்படி அலைக்கழித்தால் தான் அவர் வழிக்கு வருவார். எதிலும் சிறிது வன்கண்மையுடன் கூடிய, கண்டிப்பான சூழ்ச்சியும் (சிந்தனையும்) வேண்டும்' என்று விளக்குமிடம் இது.

**மகிழ்நன் மார்பே வெய்யை யால்நீ**
**அழியல் வாழி தோழி! நன்னன்**
**நறுமா கொன்று நாட்டில் போக்கிய**
**ஒன்றுமொழிக் கோசர் போல**
**வன்கட் சூழ்ச்சியும் வேண்டுமால் சிறிதே** (73)

நீ மகிழ்நன் மார்பை அடையவே விரும்புகிறாய். அதற்காக வருந்தித் துன்புறாதே! தோழி! (அவனை மணம் செய்துகொண்டு அடைய வேண்டுமென்றால்) சிறிது வன்கண்மையுடன் கூடிய, தந்திரமும் வேண்டும். நன்னனது மாமரத்தை வீழ்த்தி, அவனைப் போரில் வென்ற ஒன்றுமொழிக் கோசர்போல, வன்கண்மைமிக்க சூழ்ச்சியும் சிறிது வேண்டும்!

இவ்வாறு இரவு வருவானைப் பகல்வா என்றும் பகலில் வருவானை இரவில் வா என்றும் இருபொழுதும் வாராதே என்றும் அலைக்கழித்தால்தான், அவன் திருமணம் செய்ய எண்ணுவான் என்பது கருத்து.

ஞாட்பு - போர். மா - மரம், காவல் மரம். ஒன்றுமொழிக் கோசர் - சொல் தவறாதவர், நீதிமுறை தவறாது தீர்ப்பு வழங்கியவர். நன்னனை வெல்ல அவர்கள் செய்த வன்கண் சூழ்ச்சி யாது எனப் புலனாகவில்லை.

## சான்றோர் அல்லாக் காதலர்

அக் காலத்தும் காதலித்துவிட்டுப் பிறகு ஏமாற்றிய ஆண்கள் இருந்துள்ளனர். இத்தகைய ஆடவர்களைச் 'சான்றோர் அல்லர்' என்று ஔவையார் சாடுகின்றார். சான்றாண்மை - எல்லா நற்பண்புகளும் நிறைந்த தன்மை.

தோழியிடம் தலைவி தன்னைப் பிரிந்து ஏமாற்றமுறச் செய்த காதலனைப் பற்றிக் கூறுமிடம் இது. ''என் காதலர் செய்த இவ் ஏமாற்றத்தை நினைத்தால் மனம் வேகின்றது. நினைக்காது இருப்போமென்றால், காமம் எம்மால் தாங்கமுடியாத அளவு மிகுகின்றது. அது வானத்தைத் தொடுவது போன்று கூடுவதால் நான் மிகவும் நொந்துபோனேன். என்னால் காதலிக்கப் பட்டவர் சான்றோர் அல்லர். யான் என்ன செய்வேன்?''

**உள்ளின் உள்ளம் வேமே, உள்ளாது**
**இருப்பின்எம் அளவைத்து அன்றே, வருத்தி**
**வான்தோய் வற்றே காமம்**
**சான்றோர் அல்லர்யாம் மரீஇ யோரே** ***(102)***

மரீஇயோர் - மருவியர், காதலித்துக் கூடியவர். இதுபோன்ற பாடல்களால் ஔவையார் வாழ்வில் நடந்த அவலமே, அவரை இவ்வாறு பாடவைத்தது என ஆய்வாளர் உய்த்துணர்ந்து கூறியுள்ளனர்.

## காணாமற்போன காதலன்

மற்றுமொரு காதலன் பிரிந்து போனவன் போன இடம் தெரியவில்லை. தலைவியும் தோழியும் யாரையேனும் அனுப்பித் தேடிக் கண்டு பிடிப்போமா, அவ்வாறு தேடினால் எப்படித் தப்பிப்பார், அவரை எவ்வாறேனும் கண்டுபிடித்துவிட முடியும் எனப் பேசிக் கொள்வது இது.

''நம் காதலர் போன இடம் தெரியவில்லை. ஆயினும் அவர் நிலத்தைத் தோண்டி, கீழே போயிருக்க முடியாது; வானத்தில் ஏறி மேலே சென்றிருக்கவும் முடியாது. குறுக்காகக் கிடக்கும் பெரிய கடலில், காலால் நடந்தோ, தேரைச் செலுத்தியோ போயிருக்க இயலாது. எனவே நாடுநாடாக, ஊர்ஊராக, ஒவ்வோர் ஊரிலுமுள்ள ஒவ்வொரு குடியாகத் தேடினால், அவரால் தப்பிக்க முடியுமோ? முடியாது. எவ்வாறேனும் கண்டுபிடித்து விடலாம்!''

**நிலம்தொட்டுப் புகார், வானம் ஏறார்**
**விலங்கிரு முந்நீர் காலின் செல்லார்,**
**நாட்டின் நாட்டின், ஊரின் ஊரின்,**
**குடிமுறை குடிமுறை தேரின்**
**கெடுநரும் உளரோநம் காத லோரே** ***(130)***

முந்நீர் - கடல். கால் - காலால், காலென்பது சக்கரமுமாம் (தேர்). அன்று குடிகள் பல வாழ்வது ஊராகவும், ஊர்கள் பல சேர்ந்தது நாடாகவும் (வளநாடு, நாடு - இன்றைய வட்டம், மாவட்டம் போல்வன), நாடுகள் பல சேர்ந்தது ஒரு தேயமாகவும் விளங்கியுள்ளன என இதனால் அறிகிறோம்.

இது வெள்ளிவீதியார் பாட்டு. ஔவையார் போலவே வெள்ளிவீதியார் வாழ்விலும் காதல் அவலம் நேர்ந்ததற்கான சான்றுகள் உள.

## காதலின் இயல்பு

ஊருணியில் சில சமயம் பாசி படர்ந்திருக்கும். நாம் தண்ணீர் பருகக் கையை வைத்து விலக்கினால் பாசி விலகும்;

கையை எடுத்ததும் உடனே பாசி மூடிக்கொள்ளும். காதல்வயப் பட்ட காமஉணர்வும் அப்படிப்பட்டது என்று, வரைவிடை ஆற்றாத தலைவி, தோழியிடம் கூறுகிறாள்.

ஊருண்ணும் கேணியில் (கேணி இங்கு குளம்), நீர் பருகும் துறையில் பாசி படர்ந்து கிடப்பது போன்றது, காதல் பிரிவால் வரும் பசலைநோய். அது காதலர் தொடுவுழித் தொடுவுழி நீங்கிவிடும் (பசலை என்ற கறுத்துப்போன முகமும் உடலும் பொலிவு பெறும்). காதலர் பிரிந்து, தழுவுதலை விட்டால் உடனே அப் பசலைநோய் படரத் தொடங்கிவிடும்.

காதலரின் குன்றம் பாடியதும் காதலியின் காமநோய் தணிவதாக ஒரு பாட்டு; அவனுடைய குன்றை நோக்கியதும் நெற்றி பழைய பொலிவைப் பெற்றதாக ஒரு பாட்டு; அவனுடைய மலைமீது அருவியாய் விழுந்து, ஆறாய் ஓடி வருவதில் குளிப்பதால் நோய் நீங்குவதாக ஒரு பாட்டு. இவ்வாறு வருவன நுண்ணிய ஆழ்மன உணர்வுகளைப் பற்றியன.

இப் பாடலும் அது போன்றதே

**ஊருண் கேணி உண்துறைத் தொக்க**
**பாசி அற்றே பசலை, காதலர்**
**தொடுவுழித் தொடுவுழி நீங்கி**
**விடுவுழி விடுவுழிப் பரத்த லானே** *(399)*

ஊருண் கேணி - ஊருணி. முன்பு கேணி என்பது குளத்தைக் குறித்தது. இன்றும் திருவல்லிக் கேணி என்பது அல்லிக் குளமே. தொடுவுழி, விடுவுழி விடுவுழி என்ற அடுக்குத் தொடர்கள், மனமாற்றத்தின் விரைந்த விளைவை உடல் எவ்வாறு வெளிப்படுத்துகின்றது என்பதை, மெய்ப்பாட்டுடன் கூறுகிறது.

சங்க அகப் பாடல்களின் நுட்பத்திறன் மேன்மேலும் ஆராயத்தக்க உளவியல் உடையது. மானுடம் உள்ளவரை நினைக்கத் தக்க உணர்வுகளின் ஓவியங்கள் இவை எனலாம்.

# 2

# உள்ளங்கள் ஒன்றிடும் அன்றில் பறவைகள்!

ஓர் இலக்கியம் மக்கள் வாழ்க்கையிலிருந்து பிறக்கிறது என்றார் வில்லியம் என்றி அட்சன். தமிழர்களின் சங்க இலக்கியமோ மண்ணுலக நிலத்திலும் அதில் அடர்ந்து படர்ந்து கிடந்த இயற்கையிலும் அந்த நிலம், அதைச் சூழ்ந்திருந்த பருவநிலைக் காடுகள், குன்றுகள், வயல்கள், கடற்கரைகள் போன்றவற்றிலும் அவ்வியற்கைச் சூழலுக்கேற்ப வாழ்ந்த மாந்தரின் நடைமுறை வாழ்விலும் தோன்றிப் பிறந்து வளர்ந்ததாகும்.

அன்றிருந்த இருளடர்ந்த வளம் நிறைந்த பசுமைக் காடுகளில் நிறைந்திருந்த பறவையினம், விலங்கினம் முதலான உயிரினங்களைக் குறும்படங்களாய்க் கண்ணெதிரே காண்கின்றோம். அவ் ஐவகை நிலங்களில் காணப்பட்ட இயற்கை வயப்பட்ட வேறுபாடுகள் நம்மை வியப்பிலாழ்த்துகின்றன. காடு மலை நாடு கடல் சுரம் எனப்பட்ட அந்தஅந்த நிலத்திற்கேற்ற வண்ணமும் எண்ணமும் சேர்ந்த தெய்வங்களை அவர்கள் வழிபட்டனர். அவர்கள் தொழிலில், விளைத்துண்ட உணவில், இசைத்த கருவிகளில், கொட்டி முழக்கிய தோற்கருவிகளில் கூட, வேறுவேறானவையாக இருந்தன. சங்கப் பாடல்கள் ஒவ்வொன்றும் ஒரு சிறு குறும்படம். அதில் அவ்வியற்கைச் சூழலில் நடமாடும் மாந்தர்கள், ஒரு நாடகத்தில், நாட்டியத்தில் வந்துவந்து போகின்றவர்கள் போல் தோன்றி மறைகின்றனர்.

இத்தனைப் பின்னணிகளோடு எடுக்கப்பட்ட, அவ் வண்ண வண்ணப் படங்களில் வரும் மாந்தர்களின் மன உணர்வு நிலைகளே, உரிப்பொருளாகப் பதிவு செய்யப்பெற்றுள்ளன. அந்த மாந்த மனஉணர்வுகள் இன்றும் உள்ளன. அதனால் சங்கப் பாடல்களைப் படிக்கும்போது, இறுதியில் நம் மனத்தில் தங்குவது அம் மனவுணர்வுப் படப்பிடிப்புகளேயாம்.

புறக் காட்சிகளைப் படம் எடுக்கலாம். அக உணர்வை, மனத்துடிப்பை, உள்ளுள் எழும் உணர்வை, அருவமான ஒன்றை, உள்ளத்தை உள்ளத்தால் மட்டுமே உணரக் கூடிய ஒன்றை ஓவியமாக, சொற்சித்திரமாக வரைந்து காட்ட முடியுமா?

சங்கப் பாடல்கள் அதைச் சாதித்துள்ளன. அதனால் அப் பாடல்கள் மானுடம் உள்ளவரை நினைந்து நினைந்து, போற்றிப் போற்றி இன்புறுத்தவல்லனவாகின்றன. நம் வாழ்வை இனிமைப்படுத்துகின்றன.

அப் படச்சுருளிலிருந்து ஒரு காட்சியைப் பார்ப்போம்.

## அதோ அன்றில் பறவைகள்!

தமிழகத்திலிருந்த மிக அரிய பறவையினத்தில் ஒன்று அன்றில் பறவை. இவை ஆணும் பெண்ணும் இணைந்தே வாழ்வன. தலைவன் பிரிந்தால் தலைவி உயிர்வாழாள் என்பதைக் கூற வந்த, மோசி கண்ணத்தனார் என்ற புலவர், நற்றிணையில் 'ஒன்றில் காலை அன்றில் போல' என உவமை கூறுகின்றார். (124) சோடிப் பறவைகளில் ஒன்று இறந்துபடுமானால், மற்றதும் உயிரை விட்டுவிடும் என்று தெரிகிறது.

இன்று காம உணர்வை, பாலியல் பற்றிய தூண்டலை அளவுக்கு மீறி, திரைப்படம், தொலைக்காட்சி, வானொலிப் பாடல்கள், கதைகள் போல்வன மேற்கொண்டு, மக்களை விலங்குகளாக ஆக்கிவருகின்றன. முன்பு இயற்கையில் மானினம், யானைக் கூட்டம், குருவிகள், புறாக்கள், பறவைகள் போல்வனவே மக்களுக்கு அரிய காட்சிப் படங்களாக விளங்கின.

அவர்களின் கண்களில் மயில்கள் ஆடும் காட்சிகள், மனத்தை மகிழ்ச்சியில் ஆழ்த்தின; குயில்கள் கூவுவதைக் கேட்குந்தோறும் அவர்கள் அடைந்த இன்பத்திற்கு எல்லையே இல்லை. காடு கெடுத்து நாடாக்கி, நாடு கெடுத்து நகரமாக்கி வாழும் இன்று, இத்தகைய இயற்கைச் சூழலுக்கு எங்கே போவது? ''எங்கெங்குக் காணினும் இயற்கையடா! தம்பி எழுச்சிதரும் இன்ப மகிழ்ச்சியடா' என்று, காங்கிரீட்டுக் கட்டிடத்தினுள்ளிருந்து, பாடிக்கொண்டிருக்கலாம். அவ்வளவுதான்!

அன்றிற் பறவைகள் பனைமரங்களின் மடல்களின் ஊடே சிறுசிறு கூடுகட்டிக் கொண்டு, கூதிர்கால நள்ளிரவு நேரம் போன்றவற்றில், ஒன்றுடன் ஒன்று கூடி மகிழ்ந்து, இசைக் கருவிபோல இனிதாக மிகத் தாழ்ந்த குரலில் 'முரலுமாம்'. இம் முரல் ஒலி கூடியிருக்கும் காதலர்களின் இன்பத்தை மிகுவிக்கும்; பிரிந்திருக்கும் காதலர்களின் காம இன்ப உணர்வைத் தூண்டி விட்டு, அவர்களை இரவெல்லாம் வருந்தச் செய்யும்.

**நெருப்பின் அன்ன செந்தலை அன்றில்**
**இறவின் அன்ன கொடுவாய்ப் பெடையொடு**
**தடவின் ஓங்குசினைக் கட்சியில், பிரிந்தோர்**
**கையற நரலும் நள்ளென் யாமத்துப்**
**பெருந்தண் வாடையும் வாரார்**
**இஃதோ தோழி நம் காதலர் வரவே?** ***(160)***

(செந்தலை-கொண்டை, சிவப்பாய் நெருப்புப் போல இருக்கும். இறால்மீன் போல வளைந்த வாய். கொடுவாய் - வளைந்தவாய். தடாமரத்தின் ஓங்கிய கிளையிலுள்ள கூட்டில் என இப்பாடலில் மட்டும் வருகிறது. பிற பாடல்கள் அனைத்திலும் பனை மரத்து, நெருங்கிய மடல்களினூடேயுள்ள கூடு என வருகிறது. கட்சி - கூடு. கையற நரலும் - பிரிந்தோர் வருந்த ஒலிசெய்யும்).

காதலன் விரைந்து திருமணம் செய்து கொள்வதாகக் கூறி, பொருள் தேடி வரப் புறப்பட்டுப் போனவன் கார்காலமும் வந்து, கூதிர் காலமுமாகிவிட்ட வாடைக் காலத்திலும் திரும்பிலன்.

'இதுதானா தோழி! நம் காதலர் உரிய காலத்தில் வருவதாகச் சொன்னஉறுதிமொழி? - என வினவுகிறாள் தலைவி.

நள்ளென் யாமத்துப் பெருந்தண் வாடை - நள்ளிரவு நேரத்தில், மிகக் குளிராக வீசும் வாடைக் காற்று. இது குறிஞ்சி நிலப் பாட்டு.

**கடல்பாடு அவிந்து கானல் மயங்கித்**
**துறைநீர் இருங்கழி புல்லென் றன்றே**
**மன்றலம் பெண்ணை மடல்சேர் வாழ்க்கை**
**அன்றிலும் பைஎன நரலும்; இன்று அவர்**
**வருவர்கொல் வாழி தோழி! நாம்தம்**
**புலப்பினும் பிரிவுஆங்கு அஞ்சித்**
**தணப்பருங் காமம் தண்டி யோரே (177)**

இது நெய்தல் நிலப்பாட்டு. அங்கு மாலைநேரம் எவ்வாறு வந்தது? கடல் ஒலி அடங்கிற்று (பாடு-ஒலி). கானல் - கடற்கரைச் சோலைகள். மயங்கி - ஒளிமழுங்கின. துறைநீர் இருங்கழி - கடலோர கரிய நீர்நிலைகள். அவற்றிலும் பூக்கள் கூம்பின. இவ்வாறு மாலை (முன்னிரவு) வந்தது.

மன்றலம் பெண்ணை மடல்சேர் வாழ்க்கை, அன்றிலும் பைஎன நரலும் - மன்றத்திலுள்ள பனைமரத்து மடலில் கூடு கட்டி வாழும் அன்றில் பறவையும் மெதுவாக ஒலிஎழுப்பும். (பெண்ணை-பனை).

ஒரு காலத்தில் நாம் சிறிது புலந்து விலகினாலும், அச்சிறு விலகலுக்கே அஞ்சி, தாங்கற்கரிய காமஇன்ப உணர்வால், நம்மை வலிந்து அணைத்து இன்பம் துய்த்தவர், இது பொழுது வாராதிருப்பாரா? இன்று அவர் வருவார் போலும்! (இன்று நம்மைத் தேடி வருவார் போல் தோன்றுகிறது எனத் தோழி தலைவியிடம் கூறுகிறாள்.)

**முழவுமுதல் அரைய தடவுநிலைப் பெண்ணைக்**
**கொழுமடல் இழைத்த சிறுகோற் குடம்பைக்**

கருங்கால் அன்றில் காமர் கடுஞ்சூல்
வயவுப்பெடை அகவும் பானாட் கங்குல்
மன்றம் போழும் இனமணி நெடுந்தேர்
வாராதாயினும் வருவதுபோலச்
செவிமுதல் இசைக்கும் அரவமொடு
துயில்துறந் தனவால், தோழிஎன் கண்ணே (301)

இதுவும் வரைவிடை வைத்துத் தலைவன் பிரிந்த காலத்தில் தோழியிடம் தலைவி கூறியதுதான்.

இப் பாடலில் ஓர் உளவியல் பொதிந்து கிடக்கிறது. நமக்கு வேண்டிய ஒருவர், மாலைக்குள் வரவேண்டும் என எதிர்பார்க்கின்றோம். இரவு கனமழை என எச்சரித்ததற்குத் தோதாகக் கருமுகில்கள் வானில் குழுமுகின்றன. படுத்திருக்கும் நமக்கு அவர் வரும் வண்டி ஓசை, வருவதுபோல் கேட்கிறது; எழுந்துபோய்ப் பார்க்கிறோம். அவர் ஒன்றும் வரவில்லை. நம் மனவேட்கையால், வருவதுபோல் ஓர் ஓசை; அவர் நடந்துவந்து கதவருகே நின்று தட்டுவது போன்ற நினைவு தோன்றித் தோன்றி மறையும்.

காதலனும் திருமண ஏற்பாட்டுடன் வருவதாகச் சொன்னவன், அவன் குறித்த காலமெல்லாம் கடந்தும் வந்திலன். 'இன்று வாரானா, நாளை வாரானா' என்று ஏங்கிய காதலி நெஞ்சம் இரவெல்லாம் உறக்கமின்றித் தவிக்கிறது. படுத்தும் உறக்கமின்றித் தவிக்கும் அவள் செவிகளில், அவனுடைய தேர் வருவது போன்றதோர் ஓசை கேட்கிறது. ஆர்வம்தான் அதற்குக் காரணம்.

''நம் தலைவனுடைய இனமணி நெடுந்தேர்
வாராதாயினும்
வருவதுபோலச் செவிமுதல் இசைக்கும் அரவமொடு
என்கண்கள் துயில் துறந்தன தோழி!''

(இனமணி - ஒரேவகை மணிகள் கட்டிய பெரியதேர். அரவம் - தேரோடும் ஓசை. துயில் - உறக்கம்.)

இவ்வாறு தலைவி வருந்திய நள்ளிரவு முதலில் புனையப் படுகிறது. முழவு போன்ற பருத்துருண்ட அடிப்பாகத்தை யுடைய, மேல் பகுதி அகன்ற தழைத்த பனைமரத்தின், கொழுவிய மடல்களின் ஊடே சிறு குச்சிகளால் கட்டப்பட்ட சிறுகூடு உளது. அதில் கரிய நிறக் கால்களையுடைய அன்றிலின், நன்கு முற்றிய கருப்பத்தால், வயா நோயுடன் கூடிய பெண் பறவை, ஆண்பறவையைக் கூவி அழைக்கிறது. இவ்வாறு முரலும் ஒலி, தலைவியின் தூக்கத்தைக் கெடுக்கும் நள்ளிரவு அது. (அரை-அடிப்பகுதி. தடவு-அகன்ற. பெண்ணை-பனை. கோல்-குச்சி. குடம்பை-பறவைக் கூடு. காமர் - விருப்பந்தரவல்ல கருப்பம். கடுஞ்சூல்-முற்றியநிலை. வயவுப்பெடை - கருப்பத்தால் வருவது வயா நோய் எனப்படும். மகளிர்க்கு வரும் நோய் இங்கு பறவைக்கும் வருகிறது. பானாள் கங்குல்-நள்ளிரவு.) இந் நிலையில் எங்ஙனம் ஆற்றியிருப்பேன் எனத் தலைவி தோழியிடம் வருந்திக் கூறுகிறாள்.

இவ்வாறு பறவை முதலான உயிரின வாழ்வைச் சுட்டி, மக்களின் காதலுக்குப் பொருத்திக் காட்டுவதை, 'உரிப் புறத்ததாகிய' 'இறைச்சி' என்பார் தொல்காப்பியர். இவ் அன்றில் பற்றி சங்கப் பாடல்களில் வருமிடங்கள் பலவாகும் என உ.வே.சா. அடிக்குறிப்பில் காட்டியுள்ளார். (குறிஞ்சிப். 219. நற்.152, 218, 303, 335. கலி.129 அகம். 50, 120, 260, 305, 360 மேலும் பலவுள.)

## நீர்வாழ் மகன்றில்

மகன்றில் என்பது மருதநிலத்து நீர்ப்பறவையாகக் கருதப்படுகிறது. அதுவும் ஒன்றையொன்று பிரியாதாம். பூக்களிடையே வாழும் பறவை என்பதால், 'தாமரை பூத்த தடாகம்' போன்றவற்றில் வாழ்கின்ற இயல்புடையது என அறிகிறோம். பரிபாடலில் 'அலர் ஞெமல் மகன்றில் நன்னர்ப் புணர்ச்சி' (8.44) என்பதற்கு, பரிமேலழகர், 'பூவின்கண் திரியும் மகன்றில்' என விளக்கம் எழுதுகிறார். அப் பறவைபோல்

இணைபிரியாக் காதலர் கூடுதலை, 'நன்னர்ப் புணர்ச்சி' என்று கூறப்படுகிறது. ஐங்குறு நூற்றிலும் இம் மகன்றில் பற்றி வருகிறது. அது பாலைத்திணைப் பாட்டு. காதலர்கள் உடன்போக்கில் இருவராக, பாலைவழியில் வரக்கண்டோர் வருந்திக் கூறுவது அது.

**பைங்காய் நெல்லி பலவுடன் மிசைந்து**
**செங்கால் மராஅத்த வரிநிழல் இருந்தோர்**
**யார்கொல் அளியர் தாமே, வார்சிறைக்**
**குறுங்கால் மகன்றில் அன்ன**
**உடன்புணர்க் கொள்கைக் காத லோரே (381)**

காட்டுவழி போவார் பருக நீர் கிடைக்காதபோது நெல்லிக் கனிகளை மென்று தின்று, வேட்கை தணிந்து செல்வராம். இதனால் காடெங்கும் நெல்லி மரங்களை வளர்ப்பது ஓர் அறமாகவும் கருதப்பட்டது. சிவந்த அடிப்பாகத்தையுடைய செங்கடம்ப மரத்தின் இலையுதிர்ந்து போனதால் வரிவரியான நிழலில் காதலர் ஓய்வெடுத்தனர். நீண்ட சிறகினையும் குறுகிய காலினையுமுடைய மகன்றில் பறவை, ஒன்றையொன்று பிரியாது, பிரிந்தால் உயிர்வாழாது என்பர். அப் பறவைகள் போல இணை பிரியாது சேர்ந்தமைந்த - பிரிவறியாக் காதலையுடைய இவ் இளைய காதலர் யாரோ? மிகவும் இரங்கத் தக்கவராக உள்ளனர்.

இனிக் குறுந்தொகையில் மகன்றில் வருவதைக் காண்போம்.

**பூஇடைப் படினும் யாண்டுகழிந் தன்ன**
**நீர்உறை மகன்றில் புணர்ச்சிபோலப்**
**பிரிவரிதாகிய தண்டாக் காமமொடு**
**உடன்உயிர் போகுக தில்ல, கடன்அறிந்து**
**இருவேம் ஆகிய உலகத்து**
**ஒருவே மாகிய புன்மைநாம் உயற்கே (57)**

பூக்களிடையே இணைந்து நீந்தும்போது, ஒரு பூ இடைப் பட்டுத் தங்களைப் பிரித்தால், ஏதோ ஓராண்டு பிரிந்ததுபோல

வருந்தும் மகன்றில் பறவைகளின் கூடிவாழும் தன்மைபோல, நானும் என் காதலனும் இணைந்தோம்.

இல்லறக் கடமைகளை ஆற்றுதற்பொருட்டு நாங்கள் இருவராகப் பிறந்தோமேயல்லாமல், இணைபிரியா நட்பினர் நாங்கள். (இருவராகப் பிறந்தது தவிர்க்க முடியாததேயன்றி, நாங்கள் ஒருயிரனையம்.) ஆனால் இன்று என் பெற்றோர் என்னை வீட்டில் வைத்துக் காப்பதால், நாங்கள் தனித்தனியே ஒருவராகிவிட்டோம். இத் துன்பத்தினின்றும் தப்பிப்பதற்கு ஒரேவழி, பிரிந்தால் வாழாத அம் மகன்றில் பறவைகள் போல, குறையாது மேன்மேல் பெருகும் காமஉணர்வுடனே, இவ் வுயிரைப் போக்கிக் கொள்வதே யாகும். (பிரிந்து வாழாது உயிரை விடவே விரும்புகின்றேன்.)

அன்றிலும் மகன்றிலும் வேறுவேறு பறவைகளே. முன்னது குறிஞ்சி, நெய்தல் நிலங்களில் காணப்பட்டது; மகன்றில் மருத நிலத்தது. முன்னது பனையில் கூடுகட்டி வாழ்வது; பின்னது நீர்நிலைகளில் பூக்களிடையே வாழ்வது.

மகன்றில் சிறிதுநேரமும் இணைபிரியாது என்பது கண் கண்ட இயற்கை. அதை 'யாண்டு ஒன்று கழிந்ததுபோல வருந்தும்' என்றது, மனித மனஉணர்வைப் பறவைமேல் ஏற்றிய கற்பனை. இது வெற்றுக் கற்பனையாகாது, உண்மையுடன் ஒட்டிய கற்பனையாக இருப்பதே சிறப்பு.

இருவராகப் பிறக்காமல், ஒருவராகவே பிறந்திருக்கலாமாம். ஆனால் ஆண், பெண்ணாக-இருவராகப் பிறந்தால்தானே கூடி இன்பம் துய்க்கலாம்; மணந்து இல்லறக் கடமைகளை ஆற்றலாம். அதற்காக என்று இருவராக-ஒரு கடமை கருதிப் பிறந்தவர்களை, தனித்தனியே பிரித்துவைப்பது 'புன்மை' அல்லவா? இவ் இழிதகவை விட்டு, உய்யவேண்டுமேல், உயிர்விடுதலே தக்கது போலும் என்பது அவள் சிந்தனை. தண்டாக் காமம்-குறையாத காமஉணர்வு, புணர்ச்சி இன்பம். அதனை அடைவது இரண்டு உயிர்களாகப் பிறந்ததன் பயன். அது கைகூடாதபோது, உயிருடனிருந்து என்ன பயன்?

ஆதியில் இறைவன் மாந்தரை ஆண்பெண் இணைந்த ஒருவராகப் பிறப்பித்தான் என்றும் பிறகு இருவராகப் பிரிய நேர்ந்ததால், அம் முன்னைய நிலைப்படி இரண்டு உயிரும் உடலும் இணைந்து ஒன்றாகத் துடிப்பதன் பயனே காதலும் காமமும் என்றும் மேனாட்டார் கூறும் கற்பனைகளும் இவண் ஒப்பிடற்பாலன.

## ஆராக் காமம் தீரா இன்பம்

நாச்சுவையை மறுப்பாருண்டோ? செவிக்கினிய இசையை வெறுப்பாருண்டோ? இன்சொற்பொழிவுகள் கேட்டலை, 'செவி நுகர் கனிகள்' என்பார் கம்பர். உலகப் பொருள்கள் எல்லாம் ஓரிரு புலன்களுக்கு இன்பம் தரலாம். ஐம்புலனுக்கும் இன்பம் தருவது காம இன்பமே. அதை நம் பேதைமையால் குறை யுடையதாக, குற்றம் போல்வதாகக் கருதுவது தீது.

சங்க இலக்கியம் இக் காம இன்ப நுகர்வை மூன்றாகப் பகுத்தது. தொடக்கநிலையினது, காண்பது தடுமாறுவது துணிவது குறிப்பறிந்து மனங்கலப்பது என இவை முதல் தொடக்கம். அடுத்தது அளவான் அமைந்த காம இன்ப நுகர்வு. இது உலகில் அரிதாகக் காணப்படினும், இதனையே மிகுதியும் புனைவன பழந் தமிழிலக்கியங்கள். மூன்றாவது அளவை மீறியது; எல்லை கடந்தது. அதுவே உலகில் பெரிதும் காணப் படுகிறது. இதனாலேதான் அருளாளர்கள் இவ் அளவு மீறிய காமத்தை எண்ணிக் கடிந்து பாடியுள்ளனர்.

நம் பத்திநெறி, சமயநெறியும் அம்மையும் அப்பனுமாக இறைமையைக் காண்பதாகும். ஒவ்வொரு கோயிலிலும் ஒவ்வொரு நிலையிலும் இவ் இருகூறு சேர்ந்த, ஒருகூறாகப் பார்ப்பது நம் மரபு. இதனை உலகச் சமய மரபுகளில், இது போன்றதொரு தன்மையுடன் காண்பது அரிது.

காதல் எந்த அளவு பிரிவறியாதது? ஈருடல் ஒன்றிய ஆராக் காதலை எந்த அளவு புனையலாம்? 'பூஇடைப்படினும் யாண்டு கழிந்தன்ன காதல் இது.' பிரிவறியாத் தண்டாக் காமம் இது.'

'முயக்கிடைத் தண்வளி போழப் பசப்புற்ற
பேதை பெருமழைக்கண் *(1239)*

என்றார் திருவள்ளுவர். இருவரும் தழுவிக் கொண்டபொழுது இடையே காற்றுப் புகுந்ததற்கே, காதலியின் கண் பசப்புற்றதாம். 'தண்வளி' போழ என்ற சொல்லாட்சி, காற்றுப் புகுந்ததே இரண்டு உடல்களை, இடைப்புகுந்து பிளந்தது போல இருந்ததாம். இந்த இன்பத்திற்கு, நம் காணாது கண்டதுபோல் கூறி மகிழ்கிற அந்தத் துறக்க இன்பமும் ஈடாகாது என்றும் அவர் கூறுகிறார் *(1103)*.

உறுதோறு உயிர்தளிர்ப்பத் தீண்டலால் பேதைக்கு
அமிழ்தின் இயன்றன தோள் *(1106)*

தொட்டுத் தழுவுந்தோறும் உயிர்தளிர்ப்பதெனில், இதனை இழுக்குடையதெனல் தகுமா? இருவர் கூடி நுகரும் இன்பத்தை, இறை அனுபவ இன்பத்திற்கு ஈடாகக் கூறிப் பாடியவர்கள் உளர். தமிழில் 'நாயக நாயகி பாவம்' என, பத்திப் பாடல்கள் வளர்ந்ததற்கு இதன் சிறப்பைத் தமிழர்கள் உணர்ந்திருந்தமையே காரணம் ஆகும்.

சுடர்செல் வானம் சேப்பப் படர்கூர்ந்து
எல்லுறு பொழுதின் முல்லை மலரும்
மாலை என்மனார் மயங்கியோரே,
குடுமிக் கோழி நெடுநகர் இயம்பும்
பெரும்புலர் விடியலும் மாலை
பகலும் மாலை துணைஇ லோர்க்கே *(234)*

துணைஇலோர்க்கு - துணையைப் பிரிந்த காதலர்க்கு. சுடர் - சூரியன். அது மறையும் வானம் செந்நிறமடைய, இருள் மிகுந்து, இரவு தொடங்கும்போது முல்லைப்பூக்கள் மலரும். அந்தப் பொழுதை மட்டுமே 'மாலை' என்று அறிவு மயங்கிய மக்கள்தான்

சொல்வார்கள். உண்மையில் ஒருவரை ஒருவர் பிரிந்திருக்கும் காதலர்க்கு, உச்சிக் கொண்டையையுடைய சேவல், பெரிய வளமனையின்கண் கூவுகின்ற, நெடிய இரவு முடிந்து புலர்கின்ற விடியற்காலமும் மாலையேயாம்; நண்பகலும் மாலையேயாம். (எல்லாப் பொழுதும் ஒன்றுபோலவே துன்பம் விளைவிக்கும்).

தலைவியை விரும்பும் ஒரு காதலன், அவள் இசையாததால் தோழியிடம் கெஞ்சிக் கேட்கின்றான். தான் அவள் நினைவாகவே இருப்பதை எடுத்துச் சொல்கின்றான். இரவும் பகலும் தான் காம உணர்வால் வாடுவதையும் அதைத் தீர்க்கா விட்டால் மடலேறி உயிர்விடப் போவதாகவும் கூறுகின்றான்.

**காலையும் பகலும் கையறு மாலையும்**
**ஊர்துஞ்சு யாமமும் விடியலும் என்றுஇப்**
**பொழுதிடை தெரியின் பொய்யே காமம்**
**மாஎன மடலொடு மறுகில் தோன்றித்**
**தெற்றெனத் தூற்றலும் பழியே**
**வாழ்தலும் பழியே, பிரிவுதலை வரினே** ***(32)***

இப் பாடலில் வரும் தலைவி, காதலுக்கு உடம்படுவாள் போல இருந்தும், பின்னர்த்த லைவனை ஏற்க மறுக்கின்றாள். காலம் ஓடுகின்றது. அவனுக்கோ அவளை மணந்துகொண்டு, எப்பொழுதும் உடனிருக்க வேண்டும் எனத் தோற்றுகிறது. இந்நிலையில் தன் உணர்வு நிலையையும் உண்மைக் காதலையும் கூறித் தோழியிடம் தன்னைத் தலைவியிடம் சேர்த்துவைக்க வேண்டுகின்றான். இன்றேல் மடலேறி உயிர்விடுவதாகக் கூறி அச்சுறுத்துகின்றான்.

"காமம் என்பது கணப்பொழுதும் பிரிவறியாதது. காலை, நண்பகல், (எற்பாடு), கையற்று வருந்தும் மாலை (முன்னிரவு), ஊர் உறங்கும் நள்ளிரவு, விடிகாலை என்று இப்பொழுதுகள் பற்றிய உணர்வு இடையே தோற்றுமாயின் அக் காமம் பொய்யேயாகும்.

இப்பொழுது மாறுதலைக்கூட அறியாத - பிரிவுணர்வற்ற காதலில், பிரிவு நேருமாயின் குதிரை என்று சொல்லி, பனங்

கறுக்காற் குதிரைபோற் செய்த மடலில் ஏறி, தெளிவாக 'இவளால் இவன் இப்படி ஆனான்' என உலகறியச் செய்து, உயிர்விடுதலும் பழியேயாகும். அதற்குப் பயந்து வாழ்தலும் அதைவிடப் பழியே யாகும். கையறுதல் - செயலற்று வருந்துதல். துஞ்சுதல்-ஆழ்ந்து உறங்குதல். மா-குதிரை. மடல்-பனை மடல். மறுகு-நாற்சந்தி. தெற்றென-ஊர் அறியத் தெளிவாக.

இப் பாடலில் மூன்று செய்திகள் மனங்கொள்ளத்தக்கன. ஒன்று காமஉணர்வு அல்லது காதலென்பது சிறுபொழுதும் பிரிவறியாதது. எப்பொழுதும் ஒருவரை ஒருவர் நினைந்து வாழ்வது அது. இங்கு பிரிவு அறியாத தன்மை என்பது, ஒருவரை ஒருவர் மறத்தல் இல்லை என்பதே.

இன்றைய நிலையில் மனத்தை அலையவிடும் காதல் - காமம் பற்றியவை நிலையானவை அல்ல. இது நிலையான உணர்வு பற்றியது. மணமுறிவு அல்லது மனமுறிவு அற்றதே உண்மைக் காதல் என்பதை, இவ்வாறு உச்சகட்டக் கற்பனையில் வைத்துப் புலவர்கள் பாடியுள்ளனர்.

ஆங்கிலத்தைக் கற்கையிலும் அயன் மொழியைக் கற்கையிலும், தீங்கனியாம் தாய்த் தமிழை மறத்தல் கூடாது என்ற பாவேந்தர் பாரதிதாசன் கருத்தை இவண் ஒப்பு நோக்குக. கூடியிருக்குங் காலத்துப் பொழுதுகள் வருதலும் போதலும் கூடத் தெரிவதில்லை என்பது, உள்ளங்கள் ஒன்றிக் காம இன்பம் நுகர்வதன் உச்சத்தைக் குறிக்கின்றது.

இரண்டு மாலைப்பொழுது பற்றியது. இன்று நகர நாகரிகத்திலும் காலை பகல் எற்பாடு என்பன கடிகாரம் பார்த்தே அறியப்படுகின்றன. இயற்கையுடன் உடனுறைந்து தாமாக உணரப்படுவன அல்ல. எங்கோ மலையடிவாரத்தில், சின்னஞ் சிறிய ஊரில், குடிசைவாழ் காதலரிடம் இம் மாலைப்பொழுது வந்து பிரிவுத் துன்பத்தை மிகுவிக்கும். இதற்கு முற்கால நிலை

பற்றிய உணர்வு இருந்தால்தான், பாட்டுப்பொருள் தெளிவுபடும். மேலும் முன்பு பருவம், பொழுதுகளை நம் முன்னோர் வரையறுத்தமை பற்றிய தெளிவு வேண்டும்.

அவர்கள் ஓராண்டிற்குட்பட்ட பருவங்கள் எனப்படும் பெரும்பொழுதுகளையும் ஆறாகப் பகுத்தனர்; ஒரு நாளிற்குட் பட்ட சிறுபொழுதுகளையும் ஆறாகப் பகுத்து வைத்தனர்.

பருவங்கள்: கார்காலம், கூதிர்காலம் (நான்கு மாதங்கள். இவை மழைக்காலம்.) முன்பனி, பின்பனிக் காலம் (நான்கு மாதங்கள். பனிக்காலம்). இளவேனில், முதுவேனில் (நான்கு மாதங்கள். இவை கோடைக்காலம்). ஆவணி, புரட்டாதி தொடங்கி இரண்டிரண்டு மாதங்களாய் ஆறு பெரும்பொழுதுகள் அல்லது பருவங்கள்.

அதுபோலவேதான் சிறுபொழுதும். காலை, நண்பகல், எற்பாடு அல்லது சாயுங்காலம். மாலை, யாமம், வைகறை. எற்பாடு - சூரியன் படும், மறையும் நேரம். சாயுங்காலம். எல்- சூரியன். முன்பு மாலை என்பது முன்னிரவு (மாலை 6 மணி முதல் 10 வரை). காலப்போக்கில் வைகறையும் விடிகாலையும் ஒன்று போலவும் எற்பாடும் மாலையும் ஒன்றுபோலவும் உணரப்பட்டுப் பாடல்களில் வரும் வருணனைகளில் இடம் பெற்றாலும் ஆறு பிரிவு என்பதில் மாற்றமில்லை.

இடைக்காலத்தில் இதைக் 'கைவகைச் சிறுபொழுது ஐவகைத் தாகும்' என்று, இப்பாடலில் எற்பாடு பிரித்துக் கூறப் படாததை வைத்துக் குழப்பிவிட்டனர். அது தவறு. பாடலின் நடைக்கேற்ப ஒரு பொழுது விடப்படினும் அதையும் சேர்த்துப் பொருள்கொள்வதே முறையாகும்.

மடலேறுதல் என்பது மிகப் பழங்கால மரபு. தழையுடை, வெறியாட்டு, நடுகல் போல்வன கற்கால மனித வாழ்வு தொட்டு வருவன. காதலில் தோல்வி ஏற்பட்டால் ஆடவன் தற்கொலை செய்துகொள்ள முயல்வது போன்றதிது. பனங்கறுக்கால் குதிரை போல் செய்து, அரளி, எருக்கம்பூ மாலை போன்றவற்றை அணிந்து

கொண்டு, கையில் தான் காதலித்த பெண்ணின் படம், பெயரை எழுதி வைத்துக்கொண்டு, நாற்சந்தியில் அதனை இழுக்கச் செய்வான். பனங்கறுக்கால் உடல் அறுபட்டு, இரத்தம் சொட்டச் சொட்ட இறப்பான். இதற்கு முயல்வது அச்சுறுத்துவதாகும். இதை அறிந்த பெற்றோர் தம் பெண்ணைத் தர இரக்கப்பட்டு முன் வரலாம்; ஊரார் சேர்த்துவைக்க நடுவே பேசிக் காப்பாற்ற முயலலாம். இது மிகப் பழைய மரபு. சங்கப் பாடல்களில் மடலேறுவதாக அச்சுறுத்தும் பாடல்களே காணப்படுகின்றன.

இவை யாவும் ஒருவனுக்கு ஒருத்தி என்ற நிலை நோக்கியவை; காதலின் அழுத்தமான உறவை வலியுறுத்துபவை; தீர அனுபவித்து, பிறகு அதிலிருந்து விடுபடுவதே இயற்கைக்கு உகந்தது என்பது தமிழர் மரபு.

## பல்லி சொல்லும் பலன்

பல்லி சொல்லும் பலனிலிருந்து, விரிச்சி என நற்சொல் (அசரீரி) கேட்டல்வரை, நூற்றுக்கணக்கான நிமித்தங்களில் தமிழர்கள் நம்பிக்கை வைத்திருந்தனர். ‘பல்லியும் பாங்கொற்று இசைத்தது’ என மனஅமைதி தேடுவதுண்டு. இங்கு பல்லி முதலான உயிரினமும் பயிரினமுமே முன்பு காதலர்களிடம் பாலுணர்வைத் தூண்டும் கருவிகளாக இருந்தன.

இன்று இத் தூண்டுதல் சீரழிந்து கிடக்கிறது. திரைப் படம், தொலைக்காட்சி எல்லாம் மாந்தரை, விலங்குகளின் நிலைக்குத் திசைதிருப்பிக் கொண்டிருக்கின்றன.

மானுட வாழ்வில் உயர்வுந்தல், தொழிலுந்தல், திறனுந்தல் எனப் பலவும் தேவைப்படுவன. மாந்தனிடம் மங்கிக் கிடக்கும் இம் மனவுணர்வுகள், சூழ்நிலைகளால் உந்துதல் பெற்றுப் பொங்கி வெளிப்படுகின்றன. உயர்வை நோக்கிய சிந்தனைகள், பிறர் திறன்கண்டு தானும் வளர எண்ணுவன என இவை பலவாகும். இவைபோல, இயல்பான உடல்சார்ந்த காம உணர்வுடையவ னாயினும், அவன் பிரிவில் மனைவியை அடைய எண்ணுமாறு,

சிலபல பாலுந்தல் காட்சிகள் அன்று நிகழ்ந்தன. இவை படச் சுருள்கள் போல், பதிவுசெய்யப்பட்டிருப்பதை 'இறைச்சி' என்ற கோட்பாடு என்பார் தொல்காப்பியர்.

தலைமகன் பொருள் தேடச் சென்றான். அதிலேயே ஈடுபட்டுத் திரும்ப நாளாயிற்று. தலைவி ஆற்றாது வருந்துகின்றாள். தோழி, தலைவனுக்கு உன்னைப் பற்றிய எண்ணம் வரும்; அவன் சென்ற காடே உன்னை நினைப்பூட்டும். அதனால் விரைவில் திரும்புவான். வருந்தாதே என்று கூறுகிறாள்.

**உள்ளார் கொல்லோ தோழி! கள்வர்தம்**
**பொன்புனை பகழி செப்பம் கொண்மார்**
**உகிர்நுதி புரட்டும் ஓசை போலச்**
**செங்காற் பல்லி தன்துணை பயிரும்**
**அங்காற் கள்ளியங் காடிறந் தோரே** **(16)**

''தோழி! வழிப்பறி செய்யும் கள்வர்கள், தம் நீண்ட நக நுனியில், இரும்பாற்செய்த அம்பினைக் கூர்மையாக்குவதற்காக, அதனை வைத்துத் தீட்டும்போது ஒருவித ஓசை தோன்றும். அதுபோல செங்காற் பல்லி தன் பெண்பல்லியைக் கூடுதற் பொருட்டு 'இச்சிச்சு' என ஒலி எழுப்பி அழைப்பது கேட்கும். அப் பல்லிகள் உறையும் கள்ளியங் காட்டைக் கடந்து சென்றவர், அவ் ஓசைகேட்டதும் உன் நினைவு வாராதிருப்பாரோ? வந்து விடுவார்! ஆறுதல் கொள்!'' என்பது தோழி கூற்று. (பொன்-இரும்பொன், இரும்பு. பகழி-அம்பு. உகிர்-நகம். பயிர்தல்-கூடும் விருப்புடன் கத்துதல்.)

இதில் ஒரு மனநிலை பதிவாகி இருக்கிறது. 'இச்சு இச்சு' என்று அப்படியும் இப்படியும் தீட்டும் ஓசையும் பல்லி மாறி மாறி விடாமல் ஒலிக்கும் ஓசையும் ஒத்துள்ளன. அவ் ஓசை செவியில் விழுந்தோறும், பல்லிகள் ஒன்றை ஒன்று அழைக்கும் நினைவு வருகிறது. பயிர்தல் - இணை விழைச்சோடு அழைத்தலையே பெரிதும் குறிக்கும்.

## பூவிழும் ஓசையிலும் பொலிந்தது காதல்

அவன் இரவிலே வர ஆசைப்பட்டான். தோழிக்கும் உடன்பாடுதான். ஆயினும் இரவிலே உறங்கிவிட்டால் என் செய்வது? ஆனாலும் இதிலும் ஓர் உளவியல் என்னவென்றால், 'உள்ளத்தில் நல்ல உள்ளம் உறங்காது', என்பதுதான் அது.

**கொன்ஊர் துஞ்சினும் யாம்துஞ் சலமே**
**எம்இல் அயலது ஏழில் உம்பர்**
**மயிலடி இலைய மாக்குரல் நொச்சி**
**அணிமிகு மென்கொம்பு ஊழ்த்த**
**மணிமருள் பூவின் பாடுநனி கேட்டே** ***(138)***

தலைவ! எம் ஊர்க்குப் பக்கத்தே ஏழில் குன்றம் உளது. அதன் மேலே நொச்சிமரங்கள் உள்ளன. அவற்றின் இலைகள் மயிலின் காலடிபோல, கவர்த்தனவாய் இருக்கும். அதில் கரிய பூங்கொத்துக்கள் உள. அழகுமிகும் மெல்லிய கிளைகளில், நன்கு முதிர்ந்த நீலமணி போலும் பூக்கள் கீழே உதிர்ந்துவிழும் ஓசை, நள்ளிரவில் எங்கட்கு நன்கு கேட்கும். அதனால் பெரிய ஊரே ஆழ்ந்து உறங்கினும் நாங்கள் உறங்க மாட்டோம்! (கொன்-பெரிய. துஞ்சுதல்-ஆழ்ந்து உறங்குதல். உம்பர்-மேலே. மா-கரிய. குரல-கொத்தான பூக்கள். ஊழ்த்த - கிளைகளில் பூத்து முதிர்ந்ததால் உதிரும். மணி - நீலமணிபோலும் நிறம். பாடு - ஓசை, பூவிழும் ஓசை.)

## மணிஒலி கேட்டு மயங்கும் நெஞ்சம்

தலைவன் பொருள்தேடப் பிரிந்தவன் திரும்பக் காலத் தாழ்வானது. தலைவி பிரிவுத் துயரால் வாடுகிறாள். தன் துன்பத்தைத் தோழியுடன் பகிர்ந்து கொள்கிறாள்.

பழங்காலத்தில் மாட்டுத் தொழுவம், வீடு, தோட்டம் எல்லாம் அருகருகே இருந்தன. தொழுவத்தில் பல பசுக்களும் ஒரு காளையும் கட்டியிருந்தன. சிலபோது நள்ளிரவில் அக் காளை

ஒரு பசுவிடம் கூட முயல்வதுண்டு. அப்போது அக் காளையின் கழுத்தில் கட்டிய மணி ஒலிக்கும். வீட்டினுள் நன்கு உறங்கிய கணவன் மனைவியரை அது விழிக்க வைத்துவிடும். இதனால் மீண்டும் அரவணைத்துக் கொண்டு உறங்க முயல்வர்.

இப்போது வெளியூர் சென்றுள்ள தலைவனுக்கு இது நினைவில் வாராதா? இந்த ஓர் ஏற்றினது (காளைமாடு) ஒருமணிக் குரலை' அவர் அறியாரா? (இந் நினைவு வந்தால் அவர் அங்கே தங்க மாட்டார், விரைவில் திரும்புவார்.)

இது தலைவியின் ஆறுதல்; தோழியிடம் கூறி மன அமைதி தேடுகிறாள்.

**நெறிஇருங் கதுப்பொடு பெருந்தோள் நீவிச்**
**செறிவளை நெகிழச் செய்பொருட்கு அகன்றோர்**
**அறிவர்கொல் வாழி தோழி! பொறிவரி**
**வெஞ்சின அரவின் பைந்தலை துமிய**
**உரவுஉரும் உரறும் அரைஇருள் நடுநாள்**
**நல்லேறு இயங்குதொ றியம்பும்**
**பல்லான் தொழுவத்து ஒருமணிக் குரலே** ***(190)***

நெளிநெளியான கரிய கூந்தலையும் பெருந்தோளையும் தடவிக் கொடுத்து, தலைவன் நயமாக நடந்து பிரிந்தான். என் கைகளுக்குச் செறிவாயிருந்த வளையல்கள் நெகிழும்படி, பொருள்தேடச் சென்றான். (அவன் வருவதாகச் சொன்ன மழைக்காலம் வந்தும் இன்னும் வந்திலன்.)

புள்ளிகளையும் வரிக்கோடுகளையும் உடைய, கடுஞ் சீற்றமுடைய நாகப் பாம்பின் தலை துண்டிக்கும்படி, வலிய இடி பெருமுழக்கம் செய்ய, இரவு நடு யாமத்தில் மழை பொழிகிறது. இடி ஓசையால் விழித்த நல்ல காளைமாடு, (பசுவொன்றைக் கூடும்போது) அசையுந்தோறும், பல பசுக்கள் கட்டியுள்ள தொழுவத்திலிருந்து, ஒரு மணியின் குரல் மட்டும் தனித்து ஒலிப்பது ஏன் என்பதைப் பற்றிய அனுபவத்தை அறியாதவரா அவர்? அதை

அறிந்தவரேயாதலால் விரைவில் திரும்புவர் என நம்புகிறேன் தோழி! (நெறி-நெளி. கதுப்பு-கூந்தல். நீவி-தடவி. செய்பொருள் - பொருள்தேடல் (செய்க பொருளை எனும் குறள் காண்க 759) பொறிவரி - பாம்பின் மேலுள்ள புள்ளிகளும் கோடுகளும். துமிய - துண்டிக்க. இடி கேட்டுப் பாம்பு நடுங்கும். உரவு-வலிய. உரும்-இடி. உரறும்-முழக்கமிடும். அரை இருள் நடுநாள்- இரவின் பாதியான நடுச்சாமம். ஏறு-காளைமாடு. ஒரு மணிக்குரல் - ஒரு காளையின் கழுத்தில் கட்டிய ஒரு மணியின் குரல் மட்டும் கேட்பதில், அது பசுவைக் கூடிக்கொண்டிருப்பது உணரப்படுகிறது.)

## ஆடையும் மலரே, அணியும் மலரே!

அன்று மக்களின் வாழ்க்கையை மணக்கவைத்தன எல்லாம் மலர்களே. 'அரவுரி அன்ன (பாம்புச் சட்டை போன்ற) அவிர்நூல் கலிங்கம்' எல்லாம் இருந்தாலும், அன்று மகளிர் விரும்பி அணிந்தன, மலர்களை இடையிடையே வைத்துத் தொடுத்த ஆடைகளே. தழையுடைகள் திருமண வாழ்வில் முக்கிய பங்கு வகித்தன. கார்காலத்தில் இடையன் சூடியன எல்லாம், 'சிறிய பசும் முல்லைமலர்களாகவே' இருந்தன. முல்லை மலர் அழகுக்காக மட்டுமல்லாமல் நற்பண்புக்கு, பேரன்புக்கு, நிலைத்த கற்புக்கு எல்லாம் அடையாளமாக விளங்கியது. உடுத்ததும் அணிந்ததும் நறுமணம் விளைத்ததும் மலர்களாகவே இருந்ததால், மகளிர் ஆடவர் உடல்கூட நறுமணமுடையதாக இருந்தது.

நாரத்தை என்ற நரந்தம்பூ நறுமணம் மிக்கது. அதைச் சூடிக் களைந்த பிறகும் பல நாழிகைக் காலம் கூந்தலும் உடலும் அந் நறுமணம் மாறாதிருந்துளது.

ஆடவர்கள் அழகுக்காக அசோகந் தளிர்களைக் காதுகளில் செருகிக் கொண்டார்கள்.

இருள்சூழ்ந்த, காடடர்ந்த, இயற்கை வளம் கொட்டிக் கிடந்த இயல்பான சுற்றுச்சூழல் மாசுபட வழியில்லை. எங்கும் பசுமை, நறுமணம், மல்ர்களைப் போன்ற மகிழ்ச்சிப் பெருக்கு!

மாந்தர்கள் தாம் வாழுமிடம் பற்றியும் போரிடும் காரணம் பற்றியும் காதலிக்கும் நெறிமுறை பற்றியும் எல்லாம் மலர்களை வைத்தே தங்களை அடையாளப்படுத்திக் கொண்டனர்.

சங்க காலத் தமிழர் மலர்களோடு கொண்டிருந்த உறவும் பாசமும், சங்கப் பாடல்கள் முழுவதும் இன்றும் மணம் பரப்புகின்றன.

தலைவன் தலைவியைச் சந்தித்து ஒரு திங்களாகிறது. திருமணமான புதிது என்றாலும், தலைவி பொறுத்திருந்ததைத் தோழி பாராட்டினாள். அதற்குத் தலைவி கூறும் காரணம்தான் சிறப்புடையதாகும். தலைவனுடன் ஒருநாள் கூடினாலும், அந் நினைவிலேயே, மாதக்கணக்கில் மனத்தளவில் இன்புற்று வாழலாமாம்.

**மட்டம் பெய்த மணிக்கலத்து அன்ன**
**இட்டுவாய்ச் சுனைய பகுவாய்த் தேரை**
**தட்டைப் பறையில் கறங்கும் நாடன்**
**தொல்லைத் திங்கள் நெடுவெண் ணிலவின்**
**மணந்தனன் மன்எம் தோளே**
**இன்றும் முல்லை முகைநா றும்மே** ***(193)***

முன்பு நீலமணி போலும் நிறமுடைய குப்பிகளில் மட்டு என்னும் கள்ளை ஊற்றி வைப்பார்களாம். அக்காலத்தில் குன்றுகளில் சிறு சிறு பள்ளங்கள் - சுனைகள் இருந்தன. (இன்று அரசுகள் கையூட்டு வாங்கிக்கொண்டு, சிறிய பெரிய குன்றங்களை எல்லாம் அறுத்தெடுக்க உரிமம் வழங்குகின்றன. பூமித்தாயின் மார்பகங்கள் எனப் போற்றப் பட்ட இக் குன்றுகள் பெரிதும் அழிக்கப்பட்டு, தரை மட்டமாகி வருகின்றன.) இச்சிறு சுனைகள், கள் ஊற்றிய குப்பிகள் போலிருக்க, அதிலுள்ள பிளந்த வாயையுடைய தேரைகள், கிளிகடி கருவியாகிய மூங்கிலால் செய்த தட்டைப் பறைபோல ஒலிக்கின்றன. சுழலும் ஓசையுடைய அக்குன்ற நாடன், சென்ற மாதம், முழுநிலவு நாளன்று, தலைவியின் தோளைத் தொட்டுக் கூடினானாம். அது இன்றும் முல்லைப் பூமொட்டுக்கள் அணிந்து கூடிய காரணத்தால், அதன் மணம் ஒருமாதமாகியும் இன்னமும் மாறாது மணக்கின்றதாம்

(ஒருநாள் கூடிய நினைவுபற்றிய மகிழ்ச்சியிலேயே ஒரு திங்கள் ஓடிவிட்டது. அந்நினைவே எனக்கு வருத்தம் தராதவாறு, என் நலனைக் காக்கின்றது என்று கூறுகிறாள், தலைவி.) (மட்டு, மட்டம் - கள். கலம் - குப்பி, கிண்ணம் போல்வது. இட்டுவாய், சிறியவாய். மூங்கிலில் செய்து சுழற்றவே அதன் ஒலிகேட்டுப் பறவைகள் ஓடும். தவளைச் சத்தம் அதுபோல்உளது. தொல்லைத் திங்கள் - சென்ற மாதம். நெடு வெண்ணிலவு - முழுநிலவு, 'பௌர்ணமி' என்பர். மணத்தல் - கூடுதல். முல்லைப்பூச் சூடிக் கூடியதன் மணம் இன்றும் மணக்கிறது என்பது நினைவு பற்றியது.)

மட்டம் பெய்த மணிக் கலம், இட்டுவாய்ச் சுனை, நெடுவெண்ணிலவு - இவ்வாறு அரிய தொடர்களாகக் கோத்துப் பாடலைக் கட்டுவதன் அருமை, சங்கப்பாடல்களின் தனிச்சிறப்பு.

## மணக்கும் நரந்தம்

நரந்தம், நாரத்தை, நாரத்தம்பழம் நன்கு கனிந்தால், மிக இனிமையாக இருக்கும். அதன் வளர்ச்சி இன்று மிகக் குறைந்து விட்டது. அதன் இலையைத் தொட்டாலே மணக்கும். முற்காலத்தே இறைச்சி உணவுண்பவர்கள், உண்டு முடித்ததும் நாரத்தையின் இலையைக் கையில் போட்டுக் கசக்கிக் கழுவுவர். அதனால் புலால் நாற்றம் போய்விடும். நாரத்தம்பூவைச் சூடினால் அதன் மணம் நீண்ட நேரம் கமழுமாம்.

தோழி திருமணமாகப் போகும் தலைவியிடம், தான் செய்த சிறுசிறு உதவியாலேதான் - தூண்டுதலாலேதான் தலைவிக்கு இது உறுதியாயிற்று என்று மகிழ்வுடன் கூறுகிறாள். சிறுகச் சிறுக அறத்தொடு நின்று, பெற்றோரைச் சம்மதிக்க வைத்தாளாம்.

**ஆர்களிறு மிதித்த நீர்திகழ் சிலம்பில்**<br>
**சூர்நசைந் தனையையாய் நடுங்கல் கண்டே**<br>
**நரந்தம் நாறும் குவையிருங் கூந்தல்**<br>
**நிரந்திலங்கு வெண்பல் மடந்தை**<br>
**பரிந்தனென் அல்லெனோ இறைஇறை யானே** (52)

நாரத்தம்பூ சூடியதால், திரண்ட கரிய கூந்தலில் அதன் மணம் கமழ்கிறது. வெண்பற்கள் வரிசையாக விளங்குகின்றன. இத்தகைய அழகுள்ள தலைவியே! வலிய களிறு மிதித்த பள்ளத்தில் கிடக்கும் நீருள்ள, மலைமீதுள்ள சூரர மகளிரால் பீடிக்கப்பட்டவள்போல, நீ அடிக்கடி நடுக்கமுற்றாய்! அதைக் கண்டு, யான் அவ்வப்போது சிறிது சிறிதாக, உன்பால் பரிவுகொண்டு ஆவன எல்லாம் உதவி வந்தேனல்லவா? (அதாவது பெற்றவருக்கு, அறத்தொடு நின்று திருமணத்திற்கு இசைய வைத்துவிட்டேன்.) மலைமீது யானை மிதித்த பள்ளங்களில் நீர் கிடக்கிறது. பருவம் அடைந்த பெண்கள் உடலில் மாற்றங்கள் உண்டாகும். நிறம் மாறுவர்; வாட்டமுறுவர். இது தெய்வத்தினால் வந்ததோ என்று பெற்றோர் ஐயுறுவர். அவ் வாட்டம் போக்கத் தோழி தான் முயன்றதாகக் கூறுகிறாள். குவைஇருங் கூந்தல், நிரந்திலங்கு வெண்பல் எனவரும் அடைத் தொடர்கள் பாட்டிற்கு அழகு சேர்க்கின்றன.

## அன்பின் உச்சமா, அடிமை மனமா?

அக்காலத் தமிழர்களிடம் நூற்றுக்கணக்கான மூட நம்பிக்கைகள் மலிந்துகிடந்தன. அவற்றுட் சில நன்னம்பிக்கைகளு மாயின. மரங்களில் தெய்வங்கள் உறைவதாக நம்புவது, உலகெங்கும் தொன்றுதொட்டுவரும் பண்பாட்டு மானுடவியலில் ஒரு கூறேயாகும்.

ஊர் நடுவேயுள்ள செங்கடம்பு மரத்தில் தெய்வம் உறைவதாக நம்பிய நிலையில், அதன் அடியில் நின்று காதலன் தன் காதலியிடம் ‘உன்னைப் பிரியேன்; பிரியின் உயிர் தரியேன்’ என சூளுரைத்தான். இப்போது சொன்ன சொல் தவறிவிட்ட அவனைத் தெய்வம் தண்டிக்குமல்லவா?

**மன்ற மராஅத்த பேஎமுதிர் கடவுள்**
**கொடியோர்த் தெறூஉம் என்ப யாவதும்**
**பசைஇப் பசந்தன்று நுதலே**
**ஞெகிழ ஞெகிழ்ந்தன்று தடமென் தோளே** (87)

கபிலர் பாட்டு இது. மன்றத்தின் நடுவிலுள்ள, செங்கடம்பு மரத்திலிருக்கும் தெய்வம், கொடியவர்களை அழித்துவிடும் என்பர். அவளைக் காதலித்தவன் சொல்தவறியதால் அவனைக் கொடியவன் என்று எண்ணி தெய்வம் அழித்துவிட்டால் என்ன செய்வது? தனக்குத் தீங்கிழைத்தவனேயானாலும் அவனைத் தெய்வம் தண்டிப்பதை அவள் மனம் பொறுக்கவில்லை. அதனால் அவள் தெய்வத்திடம் கும்பிட்டு வேண்டிக் கொள்கிறாள்:

''செங்கடம்ப மரத்திலுள்ள கடவுளே! அவர் சிறிதும் கொடியவர் அல்லர். பின் ஏன் என் நுதல் (நெற்றி) நிறம் மாறிப் பசந்தது என்றால், அது தானாகப் பசலை நிறத்தையடைய விரும்பி அவ்வாறானது. என் அகன்ற மெல்லிய தோளும் தானே மெலிய நினைத்து மெலிநது போனது!'' (எனவே அவரை ஒன்றும் செய்துவிடாதே என்பது கருத்து.)

ஒரு உருசியக் கதை நினைவுக்கு வருகிறது. அவனோ குடிகாரன். தன் காதலியை இரத்தம் கசியக் கசிய அடிக்கின்றான். எவ்வளவு அடித்தாலும், அழுது புரண்டாலும் மீண்டும் மீண்டும் அவள் அவனையே நேசிக்கின்றாள்.

எனவேதான் இத்தகைய உழுவலன்பை, அன்பின் உச்சம் எனப் போற்றுவதா? அடிமையின் சின்னம் எனத் தூற்றுவதா? - என்ற ஐயம் எழுகின்றது.

ஆனால் ஆணோ, பெண்ணோ இப்படியும் அன்புடைய சிலர் உலகில் வாழ்கிறார்கள் என்பது மட்டும் உறுதி.

## காதலும் கடவுள் பத்திமையும்

கடவுள்மாட்டுக் காட்டும் அன்பில்; தன்னை இழக்கும் - தன்னையே ஒப்படைக்கும் 'சரணாகதித் தத்துவம்' என ஒன்றைக் கூறுவர். இனைய உள்ளன்போடு நினைப்பதைப் போற்றுவர்.

அத்திசை நோக்கித் தொழுவதிலும் இன்பம் காண்பர். இறைவன் செய்யும் சோதனைகளையும் பொறுத்துக் கொள்வர்.

உள்ளம் ஒன்றிய காதலும் அத்தகையதே. இதில் ஆண், பெண் அடிமை பேசல், 'சதை வணிக' நினைவினர்க்குப் பொருந்தலாம். உண்மை அன்பிற்குப் பொருந்தாது.

தலைவன் திருமணம் செய்ய வர வேண்டியவன், வரக் காலத் தாழ்வானது. இதனால் தலைவிக்கு ஆற்றாமைதான். ஆயினும் அவன்மீது ஆராத காதலும் நம்பிக்கையுமுடைய அவளுக்கு, பிரிவைப் பொறுத்துக்கொள்ளும் பொறுமை தோன்றியது. அதனால், 'உனக்கு இது வருத்தமாக இல்லையா?' என்று கேட்ட தோழிக்கு, தலைவி தான் பொறுத்துக்கொள்ள முயல்வதை விளக்குகிறாள்:

**இனமயில் அகவும் மரம்பயில் கானத்து**
**நரைமுக ஊகம் பார்ப்பொடு பனிப்ப**
**படுமழை பொழிந்த சாரல் அவர்நாட்டுக்**
**குன்றம் நோக்கினென் தோழி!**
**பண்டை யற்றோ கண்டிசின் நுதலே? (249)**

தோழி! கூட்டமாக இருக்கும் மயில்கள் அகவும் மரங்கள் நிறைந்த காட்டில், வெளுத்த முகத்தையுடைய கருங்குரங்கு தன் குட்டியுடன் நடுங்கும்படி பெருமழை கொட்டிய மலைச்சாரலையுடையதாய், அதோ தெரியும் அவர்நாட்டுக் குன்றத்தைப் பார்த்ததும், அவரைப் பார்த்தது போலவே மகிழ்ந்தேன். இப்போது என் நெற்றி, பசலை நோய் நீங்கி, பழைய பொலிவைப் பெற்றுவிட்டதா? பார்ப்பாயாக!

உற்ற நண்பர் சிலரைப் பிரிந்தபோது, அவர் பயன்படுத்திய பொருளைப் பார்த்துப் பார்த்து ஆறுதலடைவது ஓர் உளவியல். தலைவனின் குன்றத்தை நோக்கியதும், நெற்றி பழைய நல்ல நிலையை அடைந்துவிட்டதாகக் கூறுவது, விரைவு பற்றியது மட்டுமன்றி, ஆறுதல் பற்றியதுமாகும்.

## உலகம் பலவகை
## காதல் அதில் ஒரு தனிவகை

உலகில் இருளும் ஒளியும் துன்பமும் இன்பமும் குறையும் நிறையும் கலந்தே காணப்படுகின்றன. சங்க இலக்கியத்தில் வரும் அகத்திணைப் பாடல்கள், அக்கால உலக வழக்கைப் பார்த்து, நாடக வடிவப்படுத்திப் புனைந்தவை. அதில் கூடி மகிழ்தல் பற்றியவை குறைவு; பிரிவில் வருந்துபவை மிகுதி. நிறையுடையன சில; குறைகளைப் புனைவன பல. அவற்றைப் புனைந்துள்ள விதம்; எடுத்துக் கூறியுள்ள முறை என இவைதான் இலக்கிய இன்பம் தருகின்றன. குறை களைந்து, நிறைநோக்கிச் செலுத்தும் விதத்தில் அவை பாடப் பெற்றிருப்பதால் மட்டுமே மானுட விழுமியம் காப்பாற்றப்படுகிறது.

எடுத்துக்காட்டிற்கு, களவுத் தொடர்பான அனைத்துப் பாடல்களும் மறைவாகக் கொள்ளும் காதலைப் புனைவன வாயினும், அவை பெரும்பகுதி கற்பை நோக்கியனவாகவே இருக்கும்; வரைவுக்கு வற்புறுத்துதல், வரைவுக்குத் தூண்டுதல் என இவ்வாறுதான் அமைந்திருக்கும். பரத்தையருடன் ஆடிப்பாடிக் கூத்தடிப்பது பற்றியனவும், அதனை இழிவுபடுத்தும் பார்வையுடன் பாடப்பட்டிருக்கும்; பரத்தைமை வாழ்வுடைய தலைவன் பலவாறு கண்டிக்கப்படுவதை, அங்கதமாக நகையாடி இடித்துக் கூறப் படுவதையே காண்கிறோம்.

ஒரு தலைவி கூற்று. தலைவன் பரத்தையர் வீடுபோய்த் திரும்பியவன், தன் மனைவியுடன் இருக்கின்றான். பிரிந்தபோது வருந்திய மனைவி, இப்போது தன்னருகே அன்புடையவன்போல் வந்திருக்கும் தலைவனிடம், அவன் மனத்தில் படும்படி பேசுகிறாள்.

**அணிற்பல் அன்ன கொங்குமுதிர் முண்டகத்து**
**மணிக்கேழ் அன்ன மாநீர்ச் சேர்ப்ப!**
**இம்மை மாறி மறுமை யாயினும்**
**நீஆகியர் என் கணவனை**
**யான் ஆகியர்நின் நெஞ்சுநேர்பவளே** (49)

அணிலின் பல்போன்ற முட்களையுடைய, மகரந்தம் முதிர்ந்த முள்ளிச் செடிகளையும் நீலமணி போலும் நிறமுடைய பரந்த நீர்ப்பரப்பைக் கொண்ட கடற்கரைக்குத் தலைவனே! இப்பிறவி போய் மறுபிறவி வருமாயினும் நீயே என் கணவனாக ஆகுக! யான் உன் நெஞ்சுக்கு உகந்தவளாக ஆகுக!

இவ்வாறு கூறியதன் உட்கருத்து, இப்பிறப்பில் யான் மனைவியாக இருந்தும், பரத்தையரே உன் மனத்திற்கு உகந்தவர்களாக உள்ளனர். மறுபிறவியிலாவது, மனைவியாக மட்டுமன்றி, உன் மனத்திற்கு உகந்தவளாகவும் யான் ஆகுமாறு விரும்புகின்றேன். 'நீயாகியர் என் கணவனை', எனக் கூறியவள், 'யான் ஆகியர் நின் மனைவி' எனக் கூறியிருக்கலாமல்லவா? பாடலில் 'நெஞ்சுநேர்பவளாக' ஆகுக என வேண்டியதிலேதான், குறிப்பால் தலைவன் மனத்தில் பதியும்படி கூறிய அக்கருத்து அடங்கியுளது.

நற்றிணையில் இதுபோல் மறுபிறவி பற்றிய பாடல் ஒன்று வருகிறது. ஒப்புமைக்காக ஒரு சிறிது பார்ப்போம்.

தலைவன் தொழில் கருதிப் பிரிந்தவன் திரும்பிவரக் காலங்கடந்து போனது. நெடுங்காலம் காத்திருந்து, பிரிவால் வாடிய தலைவி சாவின் எல்லைக்கே போவது போன்ற நிலை. அப்போது தோழி ஆறுதல் கூறுகிறாள். அதற்குத் தலைவி, 'சாவின் எல்லையில் இருக்கும் நான், அதற்காக அஞ்சவில்லை. ஒருவேளை நான் சாக நேர்ந்தால், மறுபிறவி எங்கு, எவ்வாறு அமையுமோ? அவ்வாறு மாறிஅமைந்தால், 'காதலனை மறக்க நேருமே' என அதற்காக அஞ்சுகிறேன். எங்ஙனமாயினும் அவர் வருவார் என இன்னமும் நம்பி ஆற்றிஇருக்க முயல்வேன், என்று கூறுகிறாள்.

**யாங்காகுவென்கொல் யானே ஈங்கோ**
**சாதல் அஞ்சேன், அஞ்சுவல் சாவின்**
**பிறப்புப் பிறிதாகுவது ஆயின்**
**மறக்குவென்கொல்என் காதலன் எனவே (397)**

(எனக்கு என்ன ஆகுமோ, அறியேன். இப்போது நான் சாவதற்கு அஞ்சவில்லை; ஒருவேளை அவ்வாறு சாக நேர்ந்தால், வேறு ஐயறிவுடைய விலங்கு, பறவை என ஏதேனும் ஒரு பிறப்பாய்ப் பிறக்க நேர்ந்துவிட்டால், என் காதலனை மறக்கநேருமோ என அதற்காக அஞ்சுகின்றேன்.)

உண்மையான அன்பு, உறுதியாக அன்பையே விளைவிக்கும். நம்பிக்கை வீண்போகாது.

## நம் குடும்ப மரபு ஒரு நந்தா விளக்கு

கோயில்களில் முற்காலங்களில் கருவறையிலும் பிற இடங்களிலும் எண்ணெய் விளக்குப் போட அறக்கொடைகள் (மானியங்கள்) நிறுவினர். கல்வெட்டுக்களால் இதை அறியலாம். காலந்தோறும் நாள் தவறாமல் போட என்று இதை நிறுவுவர்.

நம் நாட்டுக் குடும்பக் கட்டமைப்பும் நந்தா விளக்குப் போன்றதே. காதல் கொண்டு, திருமணமாகி, குழந்தைகள் பெற்றதும் ஒரு கணவன் தன் மனைவியிடம் வெறுப்புக் காட்டி வேறு ‘ஒன்று’ தேடுவது சிலரிடம் இருந்த தீய பழக்கம். இன்று அதைவிடக் கொடுமை அடிக்கடி ‘மாற்றுத்’ தேடுவதாகும். ஆண்களிடம் மட்டுமன்றி, இது பெண்களிடமும் பரவிவருகிறது.

## வேப்பங்காயும் வெல்லக் கட்டியும்

ஒரு கணவன் மணம்செய்த புதிதில், தன் மனைவி சமைத்த உணவு, ஒரு மாதிரியாக இருந்தும், ‘இனிது இனிது’ என உண்டான். அதைக் கேட்ட அவள் முகம் நுண்ணிதின் மகிழ்ந்தது.

பிறிதொரு கணவனும் அவ்வாறுதான் முதலில் இருந்தான். அவள் தொட்டதெல்லாம் பொன் என்றான்; அவள் சமைத்த தெல்லாம் அமிழ்தம் என்றான். அளவுகடந்து அவள்வயப்பட்டு அன்பைப் பொழிந்தான். என்ன ஆயிற்று? குழந்தைகள் பிறந்து,

குடும்பம் வளர்ந்தபின், அவன் பரத்தையரை நாடலானான். அதனால் அவளிடம் முகத்தை மாறவைத்துக் கொண்டு வெறுப்புடன் நடந்தான். அவள் தொட்டதெல்லாம் வீண் என்றான். அவள் தந்ததை எல்லாம் வெறுப்புடன் வாங்கி வீண்பழி பேசினான். தோழி, இதைச் சுட்டிக்காட்டி, அவனுக்குப் புத்தி வராதா என்ற ஏக்கத்துடன் பேசுகின்றாள்.

**வேம்பின் பைங்காய்என் தோழி தரினே**
**தேம்பூங் கட்டி என்றனிர், இனியே**
**பாரி பறம்பில் பனிச்சுனைத் தெண்ணீர்**
**தைஇத் திங்கள் தண்ணிய தரினும்**
**'வெய்ய, உவர்க்கும்' என்றனிர்**
**ஐய அற்றால் அன்பின் பாலே** ***(196)***

முன்பு களவுக் காலத்தில், காதல்கொண்ட தொடக்க நாட்களில் என்தோழி வேம்பின் பச்சைக் காயைத் தந்தாலும் அதை வாங்கி மென்றுதின்று, 'இனிய மணமுள்ள வெல்லக்கட்டி' என்று அதைப் புகழ்ந்தீர்! ஐயனே! இப்பொழுது, குழந்தைகள் பிறந்து, குடும்பம் பெரிதான இன்று, பாரியின் பறம்பு மலையிலுள்ள சுனைகளின் தெளிந்த இனிய குளிர்ந்த நீரை, தைமாதத்தில் அதற்குரிய குளிர்ச்சியுடன் தந்தாலும் 'வெப்பமாக இருக்கிறது, உவர்க்கிறது' என்றெல்லாம் வெறுத்துப் பேசுகிறீர்! உலகில் அன்பின் தன்மை அத்தகையதுதான் போலும்!

முன்பு 'காமம்' இன்ன தன்மைத்து என விளக்கிய பாடல்களைப் பாடிய அதே மிளைக் கந்தன் என்ற புலவரே, அன்பின் தன்மை இப்படியும் ஆகுமென்பதைச் சுட்டிக்காட்டி விளக்கியுள்ளார்.

முன்பும் குறைகள் இருந்தன. படைப்புக்கலைகள் குறை களைய வழிகாட்டின. குடிப்பவர் இருந்தனர். ஆயினும் குடிப்பது ஒரு குறையே என நாணினர். இன்றும் குறைகள் உள்ளன. படைப்புக் கலைகளும் ஊடகங்களும் இக் குறைகளையே மிகுத்துக் காட்டி, உலகத்தை இழிவுநோக்கிச் செலுத்தி அழிய வழிகாட்டுகின்றன.

## இன்பம் எது? துன்பம் எது?

தமிழ்ச் சொற்கள் மிகு சிறப்புடையன. பிறப்பு இறப்பு - இரண்டிற்கும் அதிக வேறுபாடு இல்லாதது போன்று ஒற்றுமை ஒலி. இன்பம் துன்பம் - இரண்டும் ஒன்றினுள் ஒன்றுளது போன்ற சொல்லமைப்பு. நன்மைxதின்மை (தீமை). வாழ்நாள்xவீழ்நாள். நனவு x கனவு. இவ்வாறு எண்ணிக் கொண்டே போகலாம்.

கபிலர் பாடல் ஒன்று. அவர் பாரியின் நண்பர். மூவேந்தரும் பாரியைப் பகைத்துப் போர்தொடுத்து, பல ஆண்டுகள் பறம்புமலையை முற்றுகையிட்டு, எல்லையற்ற துன்பம் தந்தபோதும் கபிலர் பாரியைக் கைவிட்டு ஓடினாரல்லர். அந்நட்பால் ஏற்பட்ட துன்பங்களை எல்லாம் இன்பமாக ஏற்றுக்கொண்ட, புலனழுக்கற்ற அந்தணாளர் அவர்.

அவர் பாடலில் வரும் தலைவன் ஒருவன் தலைவியைப் பிரிந்து நெடுநாளாயிற்று. அதனால் தலைவி பிரிவுத்துன்பம் தாங்காது வருந்தி மெலிந்து போனாள். இதைக் கண்ட தோழி, தலைவியிடம் இத் தலைவனால் நமக்கு எவ்வளவு துன்பம் பார்த்தாயா என்று வருந்திப் பேசினாள். தலைவிக்கோ தலைவன் கூடிய விரைவில் வருவான் என்ற நம்பிக்கை. அதனால் தலைவி இதுநாள் வரை பட்ட துன்பத்தை, இன்பம் என்றே சொல்லி, தோழிக்கும் ஆறுதலாகக் கூறுகிறாள்.

**கறிவளர் அடுக்கத்து ஆங்கண் முறிஅருந்து**
**குரங்கு ஒருங்கிருக்கும் பெருங்கல் நாடன்**
**இனியன் ஆகலின், இனத்தின் இயன்ற**
**இன்னாமையினும் இனிதோ**
**இனிதெனப் படூஉம் புத்தேள் நாடே** (288)

மிளகுக் கொடிகள் வளர்கின்ற மலையடுக்கம்; அங்கே குரங்குகள் கூட்டம் கூட்டமாக இருக்கின்றன.

பெருங்கல் நாடனாகிய தலைவனது மலைமீதுள்ள முற்றிய தளிர்களை மென்று தின்று கொண்டிருக்கின்றன.

அவன் இனியவனே. ஏதோ காரணத்தால் காலம் தாழ்த்திருக்கிறது. உறுதியாக வந்துவிடுவான். இவ்வாறு நம்பிக்கையோடு பேசும் தலைவி, தோழியைப் பார்த்துக் கேட்கும் ஒரு கேள்விதான் நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது.

– – இனத்தின் இயன்ற
இன்னாமையினும் இனிதோ
இனிதெனப் படுஉம் புத்தேள் நாடே?

நமக்கு மிகவும் வேண்டியவர்களுக்கு ஏற்பட்ட துன்பம் காரணமாக, நாம் படும் துன்பத்தைக் காட்டிலும், இனிது எனச் சொல்லப்படுகின்ற அச் 'சொர்க்கவுலகம்', தருவது இதைவிட இனிதாகுமோ?

குழந்தைக்காக, அதை வளர்க்கப் பாடுபடும் தாய், தன் துணைவி விபத்தொன்றால் ஊனப்பட அவளைக் கடைசிவரை காப்பாற்ற முயலும் உண்மையுள்ள ஒரு கணவன் ஆக இவர்களைப் போல்பவர்கள் எல்லாம் அவற்றைத் துன்பம் எனக் கருதுவார்களா? அவர்கள் உள்ளுள் அடையும் மகிழ்ச்சிக்கு எல்லை உண்டா? ஒருவருக்கு உதவும் போது, உதவுபவன் அவ்வாறு உதவக்கிடைத்த வாய்ப்பை, ஒரு பெரும் பேறாகக் கருதுகின்றானே? அதுவல்லவா இன்பம்!

இதைவிடத் துறக்க இன்பம் என்னடா இன்பம் என்று கேட்கிறது, சங்கப் பாடல். இது தமிழ்ப் பண்பாட்டின் சாறு. பாரி வள்ளலுக்காகத் துன்பப்பட்டதை எல்லாம் இன்பமாக எடுத்துக் கொண்ட கபிலரின் தன் அனுபவ உணர்வுமல்லவா இதில் தொனிக்கிறது!

# 3

# உச்சத்தைத் தொடும் உணர்ச்சி ஓவியங்கள்

காதல் வாழ்வில் நம்பிக்கை, உண்மை, மாறாத அன்புடைமை, தடுமாறாத உள்ளம் என்பன அன்றும் இன்றும் அரிதாகவே உள்ளன. இதனால்தான் சமுதாயக் கட்டுப்பாடுகள், ஆடவரின் தடுமாற்றத்தைத் தடுக்கும் சடங்குகள், நாடறி நன்மணம், மகளிரின் தற்காப்பு, பெற்றோரின் கட்டுப்பாடு என்பன வழிவழியாகப் பின்பற்றப்பட்டு வந்துள்ளன.

மகளிரின் அடிமைக்கு, குலவழி சிதறிவிடாமல் காக்கும் பொருள் முதல் வாதமே அடிப்படை என விவாதிப்பர்.

இன்று எலும்பை உருக்கும் ஆட்கொல்லிநோய் பரவுவதைக் கண்ட பிற்பாடு, 'ஓகோ, ஒருவனுக்கு ஒருத்தி' என்பது தான் சிறந்ததோ என எண்ணத் தலைப்படுகின்றனர்.

விளையாட்டிற்கு ஓர் அரங்கம் அமைத்துக்கொண்டு, அதனுள் மட்டுமே, சில கடும் விதிகளுக்குட்பட்டு விளையாட வேண்டும் என்பது அடிமைப்படுத்துவதாகுமா?

சங்கப் பாடல்களில் உண்மையான அன்பு, குடும்ப விளக்குப் போன்ற மகளிர், மன ஊசலாட்டமுள்ள ஆடவர், அவரால் மகளிர் பட்ட துன்பங்கள், ஆறுதல்கள் எனப் பல நிலைகளும் இருந்துள இவ் உலக வழக்கை நேரே நாடக வடிவப்படுத்திய அகத்திணைப் பாடல்கள், கூடியவரை, குறையுடைய சமுதாயம் - மன்பதை

மேலும் குறைகள் பெருகிச் சிதைந்துவிடாமல், இயன்றவரை நல்ல திசைநோக்கித் திருப்ப முயன்றுள்ளன.

மருதத் திணைதான் பரத்தையற் பிரிவு பற்றிய உரிப் பொருளுடையது. இதனை 'ஆடல்' என்னாமல், 'ஊடல்' என வைத்து, அதற்கேற்பத் தலைவிக்குத் தலைமைதந்து, அவள் ஊடுவதாகவும் அவன் அவளிடம் ஊடல் தவிர்த்துத் தன்னை ஏற்குமாறு கெஞ்சுவதாகவும் (ஊடல் உணர்த்தல்), அங்ஙனம் அவன் இரந்து நின்றபோதும் அவள் ஊடல் தவிராமல் சீற்றம் கொள்ளவே, அவள் 'உணர்ப்பு வயின் வாரா ஊடற்கண்' வருந்துவதாகவும் இத்தகைய கற்பனைகளையே மிகுதியும் காண்கிறோம்.

**'கொடுமை ஒழுக்கம் கோடல் வேண்டி**
**அடிமேல் வீழ்ந்த கிழவனை நெருங்கி**
**'காதல் எங்கையர் காணின்' நன்றுஎன**
**மாதர் சான்ற வகையின் கண்ணும்** **(கற்பியல்)**

என வருவது போன்ற படைப்புக்கள், ஆடவனைக் கீழ்மைப் படுத்தி, அவமானமுற வைத்து, திருந்துமாறு செய்யவல்லன.

'கொடிய பரத்தை ஒழுக்கத்தை மன்னிக்க வேண்டி அவன் அவள் காலில் விழுந்தானாம். அதற்கு அவள் 'இதை என் தங்கையர் (பரத்தையர்) பார்த்தால் சிரிக்கப் போகிறார்கள்' என்று கூறித் திருத்த முயன்ற அன்பொடு கூடிய கூற்றுக்களும் மனைவிக்கு உரியன என்பது கருத்து.

இன்றும் நல்ல குடும்பங்களில் மனைவிக்கே தலைமையும் உரிமையும் இருப்பதைக் காணலாம். எலித் தொந்தரவு கருதி, வீட்டிற்கு நெருப்புவைத்துவிடக் கூடாது. 'பெண்ணடிமை தீருமட்டும் பேசும் திருநாட்டு மண்ணடிமை தீராது' என்பது உண்மையே. அதற்காக நாம் அமெரிக்க, ஐரோப்பியப் பாலுணர்வுச் சிதைவுச் சீரழிவுகளுக்குப் போய்விடக் கூடாது.

**நோம்என் நெஞ்சே! நோம்என் நெஞ்சே!**
**இமைதீய்ப்பு அன்ன கண்ணீர் தாங்கி**
**அமைதற்கு அமைந்தநம் காதலர்**
**அமைவில ராகுதல் நோம்என் நெஞ்சே! *(4)***

வருந்திச் சொல்லிச் சொல்லி அழுவதுபோல், பாட்டும் நொந்து உருகுவதுபோல் உளது. மூன்றுமுறை 'நோகும்' என்பது, உணர்வுக்கு ஏற்ற பாட்டுவடிவமாகிறது. துன்பக் கண்ணீர் சுடும். அது இமையைத் 'தீய்ப்பது' போலுளதாம். அமைதல் - அளவளாவிக் கலந்து பழகுதல்.

**'நோம்என் நெஞ்சே! நோம்என் நெஞ்சே!**
**புன்புலத்து அமன்ற சிறியிலை நெருஞ்சிக்**
**கட்குஇன் புதுமலர் முட்பயந் தாஅங்கு**
**இனிய செய்தநங் காதலர்**
**இன்னா செய்தல் நோமென் நெஞ்சே *(202)***

குறிஞ்சிப் பூப் போன்ற உயர்ந்த காதலைப் பற்றிய பாடல்கள் உள்ள அதே குறுந்தொகையில்தான், இவ்வாறான 'நெருஞ்சிப்' பூப்போன்ற, நிலையற்ற காதல்பற்றிய பாடல்களும் உள. நெருஞ்சிப் பூ குப்பென்று படர்ந்து பூத்து இனிதாகக் காட்சி தரும்; அதே பூ முற்றியபின் முள்ளாகும். முன்பு அன்புடன் பழகிய காதலன் இப்போது 'முள்ளாக' மாறியதை மிகச்சுருக்கமாக இப்பாடல் எடுத்துரைக்கிறது. தூரத்தே சேய்மையில் கண்ணுக்கு அழகாக இருக்கும்; அருகில் போனால் முள் குத்தும். இத்தகைய காமம் இழிதகவுடையது.

## மனைவியின் உரிமை

ஒரு பரத்தை தாங்கள் எவ்வளவுதான் மயக்க முயன்றாலும் தலைவன் தன் வீட்டிற்குப் போனால், ஆமைபோல் அடங்கி விடுகின்றான்; தன் மனைவி ஆட்டியபடி எல்லாம் ஆடுகின்றான் என்று கூறுகிறாள்.

**கழனி மாத்து விளைந்துகு தீம்பழம்**
**பழன வாளை கதூஉம் ஊரன்**

**எம்இல் பெருமொழி கூறி, தம்இல்**
**கையும் காலும் தூக்கத் தூக்கும்**
**ஆடிப் பாவை போல**
**மேவன செய்யும்தன் புதல்வன் தாய்க்கே** (8)

''வயலோரத்திலுள்ள மாமரத்து முற்றிய இனிய மாங்கனி, பக்கத்தில் உள்ள நீர்நிலையில் விழ, அதிலிருந்த வாளைமீன் அதை எளிதிற் கவ்வி உண்டது. அத்தகைய மருதநிலத் தலைவன் பரத்தையராகிய எம் வீட்டிலிருக்கும்போது, மிகப் பெரிதாகத் தன்னைப்பற்றி ஓங்கிப்பேசுவான். தன் வீட்டிற்குப் போய்விட்டாலோ, தன் மகனின் தாயாகிய தன் மனைவியிடம், கண்ணாடியில் தெரியும் நிழலுருவம், எதிரே நிற்பவர் கையைக் காலைத் தூக்கத்தூக்கத் தானும் அதுபோல் செய்வது போன்ற நிலையை அடைகின்றான். தன் மனைவி விருப்பப்படி எல்லாம் ஆடுகின்றான்.'' *(கழனி-வயல். மா-மாமரம். உகு-தானே கனிந்து விழுதல் பழனம்-நீர்நிலை. பெரு மொழி-தன்னைப்பற்றிப் பெரிதாகப் பேசுதல். மேவன-விரும்புவன.)*

மனைவி என்று கூறாது, 'புதல்வன் தாய்' என்றது, குழந்தை பெற்றுக் குடியைக் காக்கும் மனைவியின் உரிமையைச் சுட்டிக் காட்டுகிறது.

மாங்கனி தானே விழுந்ததை வாளைமீன் கவ்வி உண்டது, வாளைமீன் குற்றமன்று. அதுபோலத் தலைவன் தானே எங்களிடம் வந்தானேயன்றி, தாங்கள் குற்றம் செய்யவில்லை என்றும் பரத்தை ஓர்உட்பொருள்வைத்துக்கூறுகிறாள். இது உள்ளுறை உவமைசார்ந்தது.

## காதலில் ஏமாற்றம்

காதலித்தான்; கூடி மகிழ்ந்தனர். விரைவில் வந்து மணப்பதாகக் கூறிப் போனான். கூறியபடி அவன் வாராதது மட்டுமன்றி, பொய் சொல்லவும் துணிந்தான் போலும்.

**யாரும் இல்லை தானே கள்வன்**
**தான்அது பொய்ப்பின் யான்எவன் செய்கோ?**
**தினைத்தாள் அன்ன சிறுபசுங் கால**

ஒழுகுநீர் ஆரல் பார்க்கும்
குருகும் உண்டுதான் மணந்த ஞான்றே (25)

"நாங்கள் காதலித்துக் கூடியபொழுது, ஒருவரும் இல்லை. ஓடுகிற நீரில் ஆரல்மீன் வருகிறதா என்று கூர்ந்து அதையே பார்க்கும், கரிய தினையின் அடிபோன்ற கால்களையுடைய நாரை மட்டும் அங்கே நின்றது. நாங்கள் மறைவாகக் கூடிய, 'அதனை' இல்லை என்று அவனே பொய் கூறினால், யான் என்ன செய்வேன்? (அது-களவு ஒழுக்கம். நெஞ்சறி சுட்டு என்பர். தினையின் அடிப்பாகம் போன்ற கரிய கால்களையுடையது நாரை.) குருகும் மீன் நினைவாக இருந்ததால், வேறு சான்றே இல்லை என்பது கருத்து.

## வெள்ளிவீதியார் வாழ்வில் அவலம்

பெண்ணாகப் பிறந்தவள் கன்னிகழிய வேண்டும்; திருமண வாழ்வு பெறவேண்டும். இன்றேல் அதனை பெருங் குறையாகக் கருதியது தமிழர் சமுதாயம்.

திருமணம் செய்துகொள்ளாது, தனித்தனியே காதலர்களாக வாழ்ந்தால் போதாதா என்ற பேச்சுக்கே இங்கு இடமில்லை.

அற்றார்க்குஒன்று ஆற்றாதான் செல்வம் மிகநலம்
பெற்றாள் தமியள்மூத் தற்று (1007)

என்பார் திருவள்ளுவர். செல்வம் அஃதிலாது வருந்துவார்க்கு உதவப்படாமல், வெறுமனே இருந்து கழிவதால் பயன் என்ன? மிக்க அழகுடையாள் ஒருத்தி, தனியளாய் இருந்து, அவள் அழகு துய்க்கப்படாமல் வயதாகி முதிர்ச்சி அடைவது போன்றதென அவர் கூறும் உவமை இக் கருத்தை உள்ளடக்கியதேயாம்.

வெள்ளிவீதியார் வாழ்வில் பிரிந்த தலைவன் திரும்பாமலே போனதால், 'மிகநலம் பெற்றவள், தமியளாய், மூத்தற்று' என்ற அவலநிலை ஏற்பட்டுள்ளது.

கன்றும் உண்ணாது கலத்தினும் படாஅது
நல்ஆன் தீம்பால் நிலத்துக் காஅங்கு
எனக்கும் ஆகாது என்ஐக்கும் உதவாது
பசலை உணீஇயர் வேண்டும்
திதலை அல்குல்என் மாமைக் கவினே *(27)*

நல்ல ஆவின்பால் ஒன்று கன்றுக்காவது பயன்பட வேண்டும். அல்லது கலத்தில், பால்கறக்கப்பட்டு மக்களுக்காவது பயன்பட வேண்டும். இரண்டும் இலாது அதனை மண் தரையில் கொட்டிக் கவிழ்த்துப் பயன் என்ன?

''என் தேமல் படர்ந்த அல்குலின் அழகு, மாநிற எழிலுடையது. அதனை எனக்கும் பயன்படாது, என் தலைவனுக்கும் உதவாது, பசலைநோய் உண்ண எண்ணுகின்றது?''

(மாமைக் கவின் - மாநிற மேனி அழகு. பசலை - நிறம் மாறி மெலியும் பிரிவுத் துயர். திதலை - தேமல். கூடிமகிழ வேண்டிய இளமையும் அழகும் வீணே கழிகின்றன.)

அகநானூற்றில் ஔவையார், ''வெள்ளி வீதியைப் போல நன்றும், செலவு அயர்ந்திசினால் யானே'' (147) என்று குறிப்பிடுவதால், வெள்ளி வீதியாரின் தனிவாழ்வில், இவ் அவலம் நேர்ந்துளது என அறிகின்றோம். ஔவையார் வாழ்விலும் இக் காதல் தோல்வி அவலம் ஏற்பட்டுள்ளது என உய்த்துணர முடிகிறது. இப் பாடல்களுக்குள் தனி ஒருவர் பெயர் வராததால் இவை அகப்பாடலில் சேர்க்கப் பெற்றுள்ளன. அகத்திணைப் பாடல்களின் தனித்தன்மைகளுள் ஒன்று, அக் காதற் பாடல்கள் யாரைப் பற்றியன என அறியுமாறு இயற்பெயரோ அல்லது அதற்கான அடையாளமோ இடம்பெறாது என்பதேயாம். அவை உலக மாந்தரினப் பொதுவாக அன்றே கருதப்பட்டமை வியப்பளிப்பதாகும். நாட்டாரின் நாடோடிப் பாடல்களில் பெயர் இடம்பெறாதென்றும் அதனிலிருந்து வந்த அகத்திணைப் பாடல்களிலும் இயற்பெயர் சுட்டாமை இயல்பாய் அமைந்தது என்றும் கூறுவார் அறிஞர் மு.வ.

மக்கள் நுதலிய அகன்ஐந் திணையும்
சுட்டி ஒருவர்ப் பெயர்கொளப் பெறாஅர்

புறத்திணை மருங்கின் பொருந்தின் அல்லது
அகத்திணை மருங்கின் அளவுதல் இலவே
(அகத்திணையியல்)

மக்கள்நுதலிய-பொதுவாக மாந்தரின மக்கள் அனைவரையும் கருதியது; மக்களைப் பற்றியது. சுட்டி ஒருவர்ப் பெயர்-ஒருவரைக் குறிக்கும் இயற்பெயர் அல்லது அடையாளம். புறத்திணை மருங்கின் பொருந்தின் அல்லது - என்பதால், அப்படிப் பெயர் குறிப்பிட்டு வந்தால் அது புறத் திணையில் சேர்க்கப்படும் என்ற கருத்தையும் உள்ளடக்கியது. நக்கண்ணையார் காதற்பாடல்களும் பேகன் கண்ணகி குடும்பச் சிக்கற் பாடல்களும் புறநானூற்றில் சேர்க்கப்பட்டுள்ளன.

மேலே கண்ட வெள்ளிவீதியார் பாடலில் உள்ளது அவரது வாழ்க்கை அவலமே என்பது, அகநானூற்றிலுள்ள ஔவையார் பாடலில் அறியப் படினும், இப்பாடலில், அவர் பெயர் சுட்டிக் கூறப்படாததால் இது அகத்திணைப் பாடலாயிற்று.

## ஔவையார் வாழ்வில் அவலம்

அகப் பாடல்களில் ஔவையார், வெள்ளிவீதியார், ஆதி மந்தியார் பாடல்களில், அவரவர் சொந்த வாழ்வின் எதிரொலிகள் இடம்பெற்றுள்ளன என உய்த்துணர முடிகிறது. இவைபோலவே பிற அகம் பற்றிய பல பாடல்களில், அவரவர் சொந்த அனுபவங்களே, பொதுமைநோக்கிப் பாடப்பெற்றுள்ளனவோ அல்லது அண்டை அயலார் வாழ்வில் கண்டவற்றையே பாடினரோ என ஐயப்பட இடமுளது.

வரைவிடை வைத்து, விரைவில் வந்து மணம் முடிப்பதாகச் சொன்னவன் அவ்வாறு வரவில்லை. கன்னிப்பெண் காம நோயால் வாடி, அதன் உச்சத்திற்கே போகின்றாள். நள்ளிரவில் உறக்கமின்றி அலமருகின்றாள். பக்கத்தில் படுத்திருக்கும் தோழியோ, எச்

கவலையுமின்றி ஆழ்ந்து உறங்குகின்றாள். ஊரே உறங்கும் வேளையில், தான் மட்டும் தவிப்பதால், மனம் உணர்ச்சி அலைகளில் மோதி உடைகிறது.

**முட்டுவேன்கொல்? தாக்கு வேன்கொல்?**
**ஓரேன் யானும்ஓர் பெற்றி மேலிட்டு**
**'ஆஅ! ஒல்! எனக் கூவுவேன் கொல்?**
**அலமரல் அசைவளி அலைப்பஎன்**
**உயவுநோய் அறியாது துஞ்சும் ஊர்க்கே (28)**

உயவுநோய் - உளைச்சல்தரும் காமஉணர்வு. ஊர் என்பது தோழி உள்ளிட்ட ஊராரைக் குறிப்பது. கவலையின்றித் தன்னைப் பற்றிக் கவலைப்படாது உறங்கும் ஊர்மேல் சீற்றம் பொங்குகிறது. ஓர் பெற்றி மேலிட்டு - ஒரு தன்மையைமீறி, அவலம் மிகுந்து, வெறி கொண்டு எனலாம். அலமரல் அசைவளி அலைப்ப - சுழன்றடித்து அசையும் வாடைக்காற்று அவள் மேனியில் மோதி உள்ளக் கிளர்ச்சியை மிகுவிக்கிறது. துஞ்சுதல் - ஆழ்ந்து உறங்குதல். முட்டுவேனா? தாக்குவேனா? ஆ, ஒல் எனக் கூவி அழுவேனா?

இதுவும் நேரிசையாசிரியம்தான். ஆனால் உணர்ச்சிக்கேற்ற வடிவங்கொள்கிறது. அவல மெய்ப்பாடு பாடலிலேயே உளது. பொருள் பாராமல், பாட்டைப் படித்த அளவிலேயே அழுகை மெய்ப்பாடு பிறக்கிறது.

**உய்த்துணர் வின்றித் தலைவரு பொருளான்**
**மெய்ப்பட முடிப்பது மெய்ப்பாடாகும்**

என்ற தொல்காப்பியச் செய்யுளியல் நூற்பாவையும், 'சொல் கேட்டார்க்குப் பொருள் கண்கூடாதல்' என்ற பேராசிரியர் கூற்றையும் இப்பாடலில் ஒப்புநோக்குக.

## ஆர்வத் துடிப்பைப் பாட்டுநடையில் காட்டுதல்

தேர்வெழுதிய மாணவன் தன் வெற்றியையும் மதிப்பெண்ணையும் அறியத் துடிப்பது இயல்பே. அவன் நண்பன் 'நீ வெற்றிபெற்றுவிட்டாய்!' தேர்ச்சியர்கி விட்டாய்' என்றால், உடனே அவன், 'எங்கு பார்த்தாய்? இணைய தளத்திலா? நாளிதழிலா?' என்று ஆர்வத் துடிப்புடன் வினவுவான்.

காணாமல் போன தன் மகனை சில ஆண்டுகள் கழித்து, 'எங்கோ மும்பையில் கண்டதாக', ஒருவர் சொன்னால் அதை உறுதிப்படுத்திக் கொள்ள அத்தாய் எவ்வளவு துடிதுடிப்பாள்? என்ன என்ன கேள்வி கேட்பாள்?

பழங்காலத்தில் வேற்று ஊருக்குப் பிரிந்துபோன தன் தலைவனை எதிர்பார்த்திருந்தாள் ஒரு தலைவி. அவன் திரும்பி வந்து கொண்டிருப்பதாக, வருவதாக யாராவது சொல்வார்கள் அல்லது பாணன் வந்து சொல்வான். அவ்வாறே ஒரு தேர் வரும். அது அடுத்தவீட்டுத் தேராக இருக்கும், அல்லது அடுத்த தெரு நோக்கிப் போகும். இப்படிப் பலமுறை ஏமாந்தவள் அத் தலைவி.

ஒருநாள் உறுதியாகப் பாணன் சொன்னான். அதை அவளால் நம்ப முடியவில்லை. "நீயே நேரில் பார்த்தாயா, யாராவது சொல்லக் கேட்டாயா? இரண்டிலொன்றைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள விரும்புகின்றேன்?

என் தலைவனே வருவதாக யார் சொன்னார்கள்? அது மட்டும் உண்மையானால், அதைச் சொன்னவர்கள், யானைகள் விளையாடும் சோணையாற்றங்கரையிலுள்ள பாடலிபுத்திரத்தையே பரிசிலாகப் பெறுவார்களாக!"

- இவ்வாறு ஆர்வத்துடன் வாழ்த்திப் பேசுகிறாள். இரு மனநிலைகளின் படப்பிடிப்புகள் இதிலுள.

**நீகண்டனையோ? கண்டார்க் கேட்டனையோ?**
**ஒன்று தெளிய நசையினம் மொழிமோ?**
**வெண்கோட்டியானை சோணை படியும்**
**பொன்மலி பாடலி பெறீஇயர்!**
**யார்வாய்க் கேட்டனை காதலர் வரவே? (75)**

(நசையினம் - விரும்புகிறேன். சோணையாறு கங்கையில் கலந்த ஒரு கிளையாறு. கங்கையின் வடக்கே ஒன்றிரண்டு கல் தொலைவில் இருந்த அதன் கரைமேல் - அதாவது சோணையாறு கங்கையிற் கலக்குமிடத்தில் பாடலிபுத்திரப் பெருநகரம் சிறந்து விளங்கியது. அது செல்வச் செழிப்பு மிக்கது என்று இந்திய வரலாறு கூறுகிறது அக்காலத்தில் காவிரி கடலொடு கலக்குமிடத்தில் காவிரிப்பூம் பட்டினம் விளங்கியது போன்றது இது. அந்நகரம் மோரியர், நந்தர் ஆகிய இரண்டு அரச பரம்பரையினர் காலத்திலும் உலகப் புகழ்பெற்று விளங்கியதாயினும் கி.மு.5ஆம் நூற்றாண்டைச் சார்ந்த நந்தர் காலத்துப் பாடலிபுத்திரமே இங்கு குறிக்கப் பட்டதென்பது, அகநானூறு 265ஆம் பாடலால் அறியப்படுகிறது.

'பொய்யாச் சிறப்பிற் பட்டினம் பெறினும் வாரேன் வாழிய நெஞ்சே!' எனப் பட்டினப் பாலையில் வருவது போல், பொன்மலி பாடலிபுத்திரத்தையே பரிசிலாகப் பெறுக என வாழ்த்துவது, உணர்ச்சியின் உச்சநிலை!

யார்வாய்க் கேட்டனை, ஒன்று தெளிவாகத் தெரிய வேண்டும் என்பதும், ஓர் ஆர்வத் துடிப்பாம் மனநிலையின் படப்பிடிப்பே!

இதுவும் நேரிசையாசிரியமே யாயினும் சங்கப்பாடல்கள் பொருளுக்கும் உணர்வுக்குமே முதன்மை கொடுத்து, நெகிழ்ந்து கொடுக்கும் என்பதையும் இப் பாடலால் அறியலாம்! சங்கப் பாடல்களின் காலத்தை உறுதிப்படுத்த, இந்திய வரலாறும் அகழ்வாராய்ச்சியும் இப்பாடல்களின் கருத்தும் ஒத்துப் போவது ஒருபெரும் சான்றாகும். இதனையும் ஐயப்படுவார் உளரேல், 'அவர்தம் பிறப்பின்கண் ஐயப்படும்', அவ்வளவே!

## திக்குத் தெரியாத காட்டில் – தேடி அலைந்தேனே

நாம் ஒரு புத்தகத்தை வைத்த இடத்தை மறந்துவிட்டு, மணிக்கணக்காகத் தேடுவோம்; மற்ற புத்தகமெல்லாம் கண்ணிற் படும்; முன்பு தேடி காணாது அலுத்துப்போன அந்தப் புத்தகம் கூட எதிர்பாராது கண்டுபிடிக்கப்படும்; ஆனால் அப்பொழுது தேடிய அதுமட்டும் கண்ணுக்கு அகப்படாது.

நாம் ஒருவரைத் தேடிப்போவோம்; அவரைத் தவிர மற்றவர்கள் எல்லாம் எதிரே வருவார்கள். நாம் தேடுகிறவர் மட்டும் வரமாட்டார்.

நாம் ஏழாம் எண் பேருந்துக்குக் காத்து நிற்போம். பதினேழு வரும்; முப்பத்தேழு வரும்; எழுபத்தேழும் வரும். ஆனால் பாழாய்ப் போன அந்த வெறும் ஏழுமட்டும் வராது.

இது ஒரு மனநிலை.

தன் மகளும் அவள் காதலனும் உடன்போக்கில் போய்விட, செவிலித்தாய் அவர்களைத் தேடிப்போகிறாள். எதிரே, அந்தப் பாலை வழியில், சோடி சோடியாக எத்தனையோ காதலர்கள் வருகிறார்கள். ஆனால் இவளுடைய மக்களை மட்டும் காண வில்லை. சேய்மையில் தன் மக்கள்போல் தெரிகிறது; அருகில் வரும் வரை உற்றுப்பார்த்துப் பார்த்து அலுத்துப் போனாள். எல்லோரும் மற்றவர்களாகவே இருக்கிறார்கள். நடந்துநடந்து கால்களும் தடுமாறுகின்றன; அடி சீராக இல்லாமல் நடை தள்ளாடுகிறது. பார்த்துப்பார்த்துப் பார்த்த கண் பூத்துப்போயிற்று. வானத்திலுள்ள விண்மீன்களைவிட மிகப் பலராக, வேறு மாந்தர்களே – காதற் சோடிகளே எதிரே வருகிறார்கள். இச் செவிலித்தாய் தேடிப்போன காதல் இணையரை மட்டும் காணவில்லை. வெள்ளிவீதியார் படம்பிடித்த ஒரு மனநிலை, தள்ளாடும் தாயின் மெய்ப்பாட்டில் வெளியிடப் படுகிறது.

காலே பரிதப் பினவே; கண்ணே
நோக்கி நோக்கி வாள்இழந்தனவே!
அகலிரு விசும்பின் மீனினும்
பலரே மன்றஇவ் வுலகத்துப் பிறரே! (44)

(பரி - நடக்கும்போது அடிக்கு அடி இடைவெளி விடும் ஓர் ஒழுங்கு. வாள் - ஒளி. மீன் - நட்சத்திரக் கூட்டம்.) இது ஓர் உளவியற் பாட்டு. செவிலித்தாய் உடன்போன தன் மகளையும் அவள் காதலனையும் தேடிப் போய் அழைத்துவந்து திருமணம் செய்விக்கவே இப்படி நடக்கிறாள். அதில் அவள் படும் அவலக் காட்சியை, இந்நான்கு அடிப்பாடலில் சித்திரமாகப் பார்க்கிறோம். 'முளிதயிர் பிசைந்த' எனத் தொடங்கும் பாடல், 'யாயும் ஞாயும்' எனத் தொடங்கும் பாடல்கள் போல, ஓவியர்களைக் கொண்டு சித்திரமாக வரைந்து, பாடலையும் சேர்த்து அச்சிட்டு, முடிந்தால் ஆங்கிலம் முதலான மொழிகளிலும் ஆக்கம்செய்து அச்சிட்டு, வீடு, பள்ளி, நூலகம், மண்டபம் எனப்பொது இடந்தோறும் ஒட்டிகளாக ஒட்டி வைக்க வேண்டிய பாடல்களில் இதுவும் ஒன்று.

## ஊர்க் குருவியிடத்திலும் பாடம் படிக்கலாம்

மனிதன்தான் மிகப் பெரியவன்; பகுத்தறிவுடையவன் என்று நினைத்துக் கருவம் கொள்ள வேண்டாம்.

ஒரு பெட்டைக் கோழி; தொந்தரவு என்று தெருவில் விரட்டி, வெளிக் கதவைச் சார்த்தி ஆயிற்று, அது அடையும் இடமோ, வீட்டினுள், ஒரு திண்ணையின் அடியில் மூலையிலுள்ள கூடை. அது என்ன செய்தது தெரியுமா? முட்டையிடும் நேரம் வந்ததால், பத்தடி உயரமுள்ள வெளிச்சுவரில் ஏறி, முகடுவழியாக நடந்து, தன் கூடையிருக்கும் வளவுவரை வந்து, பத்தடி உயரத்திலிருந்து, அப்படியே பறந்தபடி குதித்ததே பார்க்கலாம்; விரைந்து கூடைக்குள் போய் அடைந்து கொண்டது. வெளியே துரத்தப்பட்ட இக் கோழிக்குத் தான் அடையுமிடம் எவ்வாறு தெரிந்தது? சிந்தித்ததா? மனம் உண்டா? இயல்புணர்ச்சியா?

'ஆறு அறிவதுவே அவற்றொடு மனனே' என்ற தொல்காப்பியர், மிக விழிப்பாக,

**மக்கள் தாமே ஆறுஅறிவு உயிரே**
**பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே (மரபியல்)**

என்றார், இதனால் ஐம்பொறிகளின்வழி ஐந்தறிவுடைய பறவை, விலங்கினங்களுக்கும் மனம் என ஒன்றுண்டென்பாரும் இல்லையென்பாரும் உளர் என உரையாசிரியர்கள் மேலே சிந்திக்கத் தூண்டிச் சென்றனர்.

**ஆம்பற் பூவின் சாம்பல் அன்ன**
**கூம்பிய சிறகர் மனையுறை குரீஇ**
**முன்றில் உணங்கல் மாந்தி, மன்றத்து**
**எருவின்நுண் தாது குடைவன ஆடி,**
**இல்இறைப் பள்ளித்தம் பிள்ளையொடு வதியும்**
**புன்கண் மாலையும் புலம்பும்**
**இன்றுகொல் தோழிஅவர் சென்ற நாட்டே (46)**

பிரிந்த தலைவன் விரைவில் திரும்புவான் என்ற நம்பிக்கையில் தலைவி தோழியிடம் பேசுவது இது. தலைவன் சென்றிருக்கும் நாட்டிலும் மாலைப்பொழுதும் தனிமைத் துன்பமும் இல்லாமலா போகும்? அங்கும் சிட்டுக் குருவிகள் இருக்கும் தானே? எப்படிப்பட்ட குருவிகள்?

ஆம்பலின் வாடிய பூப்போன்ற குவிந்த சிறகுடன், வீட்டினுள் வசிக்கும் ஊர்க்குருவி - சிட்டுக் குருவி இது. வீட்டுமுற்றத்தில் காய வைத்திருக்கும் தானியங்களைத் தின்று, ஆக்களைக்கட்டியுள்ள மன்றத்தில், எருவின்நுண்ணிய பொடிகளைத் துழாவிக் குடைந்து விளையாடும். பிறகு மாலைப்பொழுது வந்ததும், வீட்டின் இறப்பிலே கட்டியிருக்கும் தன் கூடாகிய பள்ளியிலே புகுந்து, தன் குஞ்சுகளோடு உறங்கும். குருவிகளின் வாழ்க்கை இது.

இத்தகைய குருவிகளைப் பார்த்தாவது, மாலைநேரம் வந்துவிட்டதே, இன்னமும் தாமதிக்காமல் திரும்ப வேண்டுமே என்ற எண்ணம் வராமலா போகும்? (அவர் வந்து விடுவார்).

(சாம்பல் - வாடி உலர்ந்து உதிர்ந்த பூ. உணங்கல் - காய வைத்திருக்கும் தானியங்கள். இல்இறை - வீட்டின் தாழ்வான இறப்பு. பள்ளி-கூடு, அதுவே தங்குமிடமும் இரவில் பள்ளி கொள்ளும் இடமும் ஆம்.)

ஊர்க்குருவியின் காட்சி தலைவனைத் திரும்புமாறு தூண்டக்கூடும் என்பது இறைச்சி.

**யாரினும் இனியன் பேர்அன் பினனே**
**உள்ளூர்க் குரீஇத் துள்ளுநடைச் சேவல்**
**சூல்முதிர் பேடைக்கு ஈனில் இழைஇயர்**
**தேம்பொதிக் கொண்ட தீங்கழைக் கரும்பின்**
**நாறா வெண்பூக் கொழுதும்**
**யாணர் ஊரன் பாணன் வாயே** (85)

புறத்தொழுக்கமுள்ள மருதநிலத் தலைவன், பாணனைத் தூதனுப்பித் தோழிமூலம் தன்னை ஏற்குமாறு வேண்டினான். தோழி பாணனிடம், 'உன் தலைவன் உன்னுடைய வாய்ப் பேச்சில்தான் 'யாரிலும் இனியன், பேரன்புடையவன்'; மற்றபடி உண்மையில் அவன் அவ்வாறு இல்லை என்று கூறி வாயில் மறுத்தாள்.

பாணர்கள் வாயிலேதான் அவன் நல்லவன் என்று பொதுவாகச் சொல்லி வாயில் மறுப்பவள், அத்தலைவனது ஊரிலுள்ள குருவிபற்றிக் கூறி மறுப்பதிலேதான் அவள் திறமை வெளிப்படுகிறது.

ஊர்க் குருவியின் துள்ளி நடக்கும் சேவல்குருவி தன் கருப்பம் முதிர்ந்த பேடை, முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கக் கூடுகட்டுவதற்காக இன்சுவை பொருந்திய இனிய தண்டினை யுடைய கரும்பினது மணமில்லாத வெண்பூக்களை அலகாற் கோதி, எடுக்கும். அத்தகைய ஊரனை ஏற்பதற்கில்லை'.

இவ்வாறு மறுக்கின்றாள். ஊர்க்குருவியின் குடும்ப அன்பு கூட, ஊரனிடம் இல்லையே என்பது குறிப்பு. இதில் வாயில் மறுப்பதற்கான காரணமும் உளது. 'அன்புறு தகுந இறைச்சியிற் சுட்டலும்' என்பது தொல்காப்பியம். இது இறைச்சிப் பாற்படும், குறிப்புப் பொருளுடையது. (யாணர் - புதுவருவாயையுடையது மருதநிலம்)

துள்ளுநடைச் சேவல் - வீட்டின் முற்றத்தில் அவை நடப்பதைப் படமாக்குகிறது இது. சிலர் வாயால் பெரிதுபடப் பேசுவர். உண்மையில் அப்படி நடக்கமாட்டார்கள். உள்ளூர்க் குரீஇ, துள்ளுநடைச் சேவல், சூல்முதிர்பேடை, தீங்கழைக் கரும்பு, நாறா வெண்பூ எனத் தொடர்களை அடுக்கிப் பாடலைக் கட்டமைப்பது, செறிவுடைமைக்கு அடிப்படையாகும்.

## குரங்குகளிடத்திலும் குடும்ப உறவுண்டு

தலைவன் தன் காதலியைக் காண இரவுநேரத்தில் அடிக்கடி வருகின்றான். இரவிலே வரும் மலைச்சாரல் காட்டுவழி பல ஆபத்துக்களையுடையது. எனவே அதைத் தடுக்க நினைக்கிறாள் தோழி.

**கருங்கட் தாக்கலை பெரும்பிறிது உற்றெனக்**
**கைம்மை உய்யாக் காமர் மந்தி**
**கல்லா வன்பறழ் கிளைமுதல் சேர்த்தி,**
**ஓங்குவரை அடுக்கத்துப் பாய்ந்துயிர் செகுக்கும்**
**சாரல் நாட! நடுநாள்**
**வாரல் வாழியோ, வருந்துதும் யாமே** **(69)**

*''மலைச்சாரல் நாடனே! கரிய கண்களையுடைய, தாவுதலில் வல்ல ஆண்குரங்கு, இறந்துபாடுற்றதாக, கைம்மையைத் தாங்கமாட்டாத பாசம் மிக்க பெண்குரங்கு, தனது தாவுதல் முதலானவற்றை இன்னமும் கல்லாத சிறுகுட்டியை, தன் சுற்றமிருக்கும் இடத்திலே விட்டுவிட்டு, ஓங்கிய மலை*

அடுக்கத்தின் மேலே ஏறி, கீழே பாய்ந்து தன் உயிரை விடும். அத்தகைய மலை நாடனே! இனி இவளைப் பார்க்க நள்ளிரவில் வராதே; வரின் உனக்கு என்ன நேருமோ என நாங்கள் வருந்த நேரும். (உனக்கு எதுவும் நேர்ந்தால் தலைவி உயிர் வாழாள் என்பது குறிப்பு.)

(தாக் கலை - தாவும் ஆண்குரங்கு. பெரும்பிறிதாதல் - சாதல். இது ஒரு மரபுத்தொடர். காமர்-பாசம். பறழ்-குட்டி. கிளைமுதல் - சுற்றம் இருக்குமிடம், சுற்றத்திடமுமாம். செகுக்கும் - தன்னை மாய்த்துக் கொள்ளும். நடுநாள் - நள்ளிரவு.) இதுவும் இறைச்சி யாகும். கருங்கட் தாக்கலை, காமர் மந்தி, கல்லா வன்பறழ், ஓங்குவரை அடுக்கம்-பொருள் செறிந்த அடைமொழிகள்.

## புதிதாகப் பிடிபட்ட யானை

பாங்கன் தலைவனிடம், 'ஏன் இப்படி ஒருமாதிரியாக இருக்கிறாய்' என்றான். 'ஒன்றுமில்லை. ஒருத்தியைப் பார்த்தேன்; அதிலிருந்து ஒன்றும் ஓடவில்லை' என்றான். பாங்கன் சிரித்தான். 'ஒரு சிறுமிக்காகவா இப்படி ஆவது' என்றான். தலைவன் அவள் அழகை வியந்து, தான் புதிதாகப் பிடிக்கப்பட்ட யானைபோல் ஆனதை விளக்குகின்றான். தலைவன் இவ்வாறு பாங்கற்குச் சொன்னது இது.

**எலுவ! சிறாஅர்ஏமுறு நண்ப!**
**புலவர் தோழ! கேளாய் அத்தை!**
**மாக்கடல் நடுவண் எண்ணாள் பக்கத்துப்**
**பசுவெண் திங்கள் தோன்றி யாங்குக்**
**கதுப்பு அயல் விளங்கும் சிறுநுதல்**
**புதுக்கோள் யானையின் பிணித்தற்றால் எம்மே** ***(129)***

தோழ! இளையோர்க்கு ஆதரவான நண்பனே! புலவர்க்கு உற்ற தோழனே! நான் சொல்வதைச் சற்றே கேட்பாயாக!

கரிய கடல் நடுவே வளர்பிறைப் பக்கத்துஎட்டாம் நாள் பிறைமதி தோன்றுவதுபோல, அடர்ந்த கூந்தல் நடுவே தோன்றி விளங்கும் சிறிய நெற்றியையுடையாளின் அழகு, புதிதாகப் பிடிக்கப்பட்ட யானைபோல என் உள்ளத்தைப் பிணித்தது. என் செய்வேன்!

(அத்தை - முன்னிலை அசை. பெண்ணின் நெற்றி எட்டாம் நாள் வளர்பிறைபோல் இருப்பது அழகாம். கதுப்பு - அடர்ந்த கூந்தல். புதுக்கோள் யானை - புதிதாகப் பிடிக்கப்பட்ட யானை மருளும், துடிக்கும் அல்லவா? தலைவன் உள்ளமும் அவ்வாறானது.)

எண் நாள் பக்கம் - பக்கம் என்பதை இன்று பட்சம் என்று சமஸ்கிருதமாக்கினர். 'உவா பதினான்கு' என்பது நிகண்டு. வளர்பிறை வெள்ளுவா; தேய்பிறை காருவா. நிறைமதி (பௌர்ணமி), மறைமதி (அமாவாசை) இரண்டும் 'உவா' எனப்படும். அதை முன்பு விடுமுறைக் காலமாக்கி, 'பள்ளிக்கு இன்று உவா' என்றனர். அண்மைக் காலம்வரை இன்று பள்ளிக்கு 'வாவு' எனத் திரித்து வழங்கினர். தமிழரின் வானநூற்புலமை வடமொழிமயமாக்கப் பட்டது; கணியமும் சோதிடமாய்ப் பறிபோனது. தமிழ்ச் சொற்கள், மூலநூல்கள் அழிக்கப்பட்டு ஒழிந்தன.

## ஒருவர் பொய் சொல்ல, ஊரின்மேல் பழி

தலைவன் பாணனைத் தூதனுப்பினான். பாணனோ பொய் பேசுவதில் வல்லவன். இதனால் தோழி பாணனைத் தொடர்ந்து வந்த தலைவனிடம் அவர்களை நகையாடிக் கிண்டல் பேசுகிறாள்

**குருகுகொளக் குளித்த கெண்டை அயலது**
**உருகெழு தாமரை வான்முகை வெரூஉம்**
**கழனியம் படப்பைக் காஞ்சி ஊர!**
**ஒருநின் பாணன் பொய்ய னாக**
**உள்ள பாணர் எல்லாம்**
**கள்வர் போல்வர் நீஅகன்றிசி னோர்க்கே** (127)

கொக்கு கொத்தும்போது, அதனின்றும் தப்பித்து, கெண்டைமீன் நீருள் மூழ்கியது. பின்பு மேலே வந்தபோது அழகிய தாமரையின் வெண்ணிற மொட்டுத் தெரிந்தது. அது அக்கொக்கைப் போலவே தோன்றியதால் கெண்டைமீன் அஞ்சியது. இத்தகைய வயல்கள் சூழ்ந்த, தோட்டத்தில் காஞ்சிமரங்கள் நிற்கும் ஊரனே! உன்னுடைய ஒரு பாணன் பொய் பேசுவோனாகவே, உன்னைப் பிரிந்து வருந்தி இருப்போர்க்கு, இவ்வூரிலுள்ள பாணர் எல்லாமே பொய்யர்போல் தோற்றுகின்றனர்! (உரு கெழு - நிறம் அழகிய. வான்முகை - வெண்ணிறத் தாமரை மொட்டு. கழனி - வயல். படப்பை - தோட்டம். அகன்றிசினோர் - பிரிந்திருப்போர்.)

இவ்வாறு படர்க்கையால் கூறினும் தலைவி தன்னை நினைத்தே அவ்வாறு கூறுகிறாள். கொக்குக்குத் தப்பிய மீன் அதைப் போன்ற தாமரைமொட்டைக் கண்டு அஞ்சுகிறது. ஒரு பாணன் பொய் கூறியதால், எந்தப் பாணரைப் பார்த்தாலும் பொய்யர்போல் தோற்றுவதற்கு கெண்டைமீன் செயல் உவமை யாகிறது. இது ஓர் உள்ளுறை உவமை. இதனை ஓர் உலகியல் எனலாம். ஒரு குழுவில் ஒருவன் வஞ்சனை செய்தால், எல்லோர் மீதும் ஐயம் தோன்றுவது இயல்பு.

## பழகப் பழகப் பால் புளிக்கலாம்! கலந்து பழகப் பழகக் காதல் கசக்கலாமா?

'அருளென்னும் அன்பீன் குழவி' என்பார் திருவள்ளுவர். அன்பு முதிர்ந்து வளர்ந்து அருளாக வேண்டும். காதல் 'காமத்துக் காழில் கனியாக' வேண்டும். ஆயினும் ஒரு தலைவன் தன் காதலை மறந்தான்; புறத்தொழுக்கத்தில் மூழ்கினான். ஒருநாள் திரும்ப வந்தான். தோழியிடம் 'வாயில் வேண்டினான்' (தன்னை ஏற்றுக் கொள்ளுமாறு கூறினான்.) தோழிக்குச் சினம் பொங்கியது. இனி உன் ஒட்டும் உறவும் வேண்டவே வேண்டாம்; பேசாமல் எங்கள் தந்தை வீட்டிலேயே கொண்டுபோய் விட்டுவிடு. கொடிய பாம்புகள் திரியும் வீதிகளையுடைய எங்கள் தெருவில் வந்து,

எங்கள் துன்பத்தைப் போக்கிக் கூடிய நீ, இப்போது அங்கேயே கொண்டு போய் விட்டுவிடு!

- தோழியின் சீற்றம் தெறித்து விழுகிறது.

**நீர்நீடு ஆடின் கண்ணும் சிவக்கும்**
**ஆர்ந்தோர் வாயில் தேனும் புளிக்கும்**
**தணந்தனை யாயின் எம்இல்உய்த்துக் கொடுமோ**
**அந்தண் பொய்கை எந்தை எம்மூர்க்**
**கடும்பாம்பு வழங்கும் தெருவில்**
**நடுங்கஞர் எவ்வம் களைந்த எம்மே** ***(354)***

முன்பு பலகாலம் வந்து பழகியவன், பின்பு தலைவியை வெறுக்கத் தொடங்கினான். ''அழகிய பொய்கைகள் நிறைந்த எந்தையின், எம் ஊரிலே, கொடிய பாம்புகள் திரியும் தெருவில் அஞ்சாது வந்து, உனக்கு என்ன ஆகுமோ என நடுங்கிய எங்கள் துன்பத்தைக் களைந்து, தலைவியுடன் இன்புற்ற நீ, இப்பொழுது என் தலைவியைக் கைவிட எண்ணினால், எங்களை எம் தந்தை ஊரிலே, எம் வீட்டில் கொண்டுபோய் விட்டுவிடுக!

ஏனெனில் உலக இயல்பு அதுதான். நீரில் நீண்ட நேரம் ஆடினால் கண் சிவக்கும்; தேனை மிகுதியாக உண்டால், அவ்வாறு உண்ட வாயில் அது புளிக்கும். காதலும் அங்ஙனம் தெவிட்டுவதானால், வேறென் செய்வது?

*(ஆர்தல் - நிரம்ப உண்ணுதல். தணத்தல் - பிரிதல், கைவிடுதல். இல் உய்த்துக் கொடுத்தல் - வீட்டிற் கொண்டுபோய்விடுதல். அஞர் - கடுந்துன்பம்.)*

காதலை ஒரு காமநுகர்ச்சிப் பொருளாக மட்டும் கருதுபவர்கள் இழிந்தவர்களே. அவர்களிடம் 'சமரசம்' செய்து கொள்வதைவிட, அவர்களை முற்றிலும் துறப்பதே மேல்.

## அன்பும் காதலும்

காதல் தனிஇன்பம் கனிவது. தாயன்பு, தந்தையின் ஆதரவு, பிள்ளைப் பாசம் எல்லாம் வேறு. காதலில் ஊடியும் கூடியும் உடலுக்கு இயற்கையான காமஇன்பம் நுகர்ந்து திளைப்பது வேறு. ஒரு தலைவன் பரத்தைமை ஒழுக்கமும் உடையவனாய்க் குடும்பத்திலும் அன்பு பாராட்டி வாழ்ந்து வந்தான். இதனால் தோழி, அவனுக்காகப் பரிந்துபேசினாள். அதற்குத் தலைவி, "நான் எதற்கு ஊடல் கொள்ளப் போகிறேன். அவர் நமக்கு தாயும் தந்தையும் போல அல்லவா இருக்கின்றார். உண்மையான, மனைவியிடம் காட்ட வேண்டிய காதலுணர்வு இல்லாத அவரிடம் நான் புலந்து என்ன ஆகப் போகிறது?" - இவ்வாறு குத்தலாக, நகைச்சுவைபட, ஒரு நல்ல கணவனாக நடக்கவேண்டிய முறைப்படி நடவாதவனை அவள் கடிந்துபேசி, 'இனி என் முன்னே அவர் பேச்சை எடுக்காதே' என்று வாயில் மறுக்கின்றாள்.

**நன்னலம் தொலைய நலம்மிகச் சாஅய்**
**இன்னுயிர் கழியினும் உரையல், அவர்நமக்கு**
**அன்னையும் அத்தனும் அல்லரோ?**
**புலவிஅஃது எவனோ அன்பிலங் கடையே (93)**

(நன்னலம்-இல்லற நன்மைகள். சாஅய் - அழகுகெட்டு. உரையல் - அவர் பேச்சை எடுக்காதே. அத்தன் - தந்தை. அன்பிலங்கடை - காதலனாக நடக்கும் அந்த அன்பு.) காதல் வயப்பட்டவர்களிடம் ஊடலும் கூடலும் உண்டு. தாய் தந்தைபோல் நடப்பதையா ஒரு காதலி விரும்புவாள்?

## உணர்ப்பு வயின் வாரா ஊடல்

ஊடுதல் தலைவியின் உரிமை பற்றியது. உணர்த்துதல் - அதைத் தவிர்க்குமாறு தலைவன் வேண்டுதல். அவ்வாறு அவன் மன்னிப்புக் கேட்பான்போல, கெஞ்சிக்கேட்டும் அவள் ஊடலைக் கைவிடா விட்டால், தலைவனது மனம் வருந்தும்.

அவ்வாறு ஒருதலைவி பிடிவாதமாகத் தலைவனை ஏற்க மறுத்தபோது, தலைவன் தன் நெஞ்சிற்குச் சொல்லி வருந்துகிறான்.

**எவ்வி இழந்த வறுமையாழ்ப் பாணர்**
**பூவில் வறுந்தலை போலப் புல்லென்று**
**இனைமதி வாழிய நெஞ்சே! மனைமரத்து**
**எல்லுறும் மௌவல் நாறும்**
**பல்லிருங் கூந்தல் யாரளோ நமக்கே?** *(19)*

(எவ்வி-பாணரைப் போற்றிய வள்ளல். ஒருவர் இறந்தால் பூச் சூடாது தம் கையறுநிலையை வெளிப்படுத்துவர். மனை மரத்து மௌவல்-வீட்டிலுள்ள மரத்தில் படரும் முல்லை. எல்லுறும்மௌவல்- மாலையில் மலரும்முல்லை. யாரளோ-அவள் யாரோ, நாம் யாரோ?)

"எவ்வளவு கெஞ்சியும் ஊடல்தீர மறுக்கின்றாள். வீட்டுத் தோட்டத்து மரத்தில் படர்ந்த, கொடியில் மலரும் முல்லைப்பூ மணக்கும், அடர்ந்த கூந்தலையுடைய நம் தலைவிக்கும் நமக்கும் இனி என்ன உறவு? அவள் யாரோ, நாம் யாரோ? எவ்வி என்ற வள்ளலை இழந்த பாணர்களின் பூச்சூடாது பொலிவிழந்துபோன வறிய தலைபோல, நெஞ்சே! நீயும் பொலிவற்று வருந்துவாயாக!"

தலைவன் 'பிரியேன் பிரியின் உயிர்தரியேன்' என்று சூள் உரைப்பதும், பிரிவை முன்கூட்டி அறிவித்து, ஆறுதலடையுமாறு மறைமுகமாகக் கூறுவதேயாம். வறுமையாழ்ப் பாணர், பூஇல் வறுந்தலை, மனைமரத்துமௌவல், எல்லுறும்மௌவல், பல்லிருங் கூந்தல் - தொடர்களைத் தொடுத்த மாலைபோல்வது சங்கப் பாடல் என்பதனை, இப்பாடலிலும் காணலாம்.

## தலைவியின் சீற்றம்

காமஇன்ப நுகர்வுபற்றிய அதன் தொடர்பானவற்றையும், மிக நுட்பமாக, உள்ளார்ந்த பட்டறிவு உணர்வோடு அகத்திணைப் பாடல்கள் புனையப்பட்டுள்ளன. மாந்தரினம் அத்துணைப் பக்குவப்

பட்டிருத்தல் இயலாது எனக் கருதக்கூடிய அக்காலத்தே, மிகப் பக்குவப்பட்ட மனநிலைகளை, மிகச் சரியான நிலையில், பொருத்தமான கோணத்தில் படம்பிடித்துள்ளமை வியப்பைத் தருகிறது.

மிகுந்த ஒழுக்கக் கேடுகளுக்கு இடம் தருவது இது. துறவு வேடத்தில் ஊரை மேய்க்கும் 'சாமியார்கள்' இன்று எத்தனை பேர்? நித்தியமும் ஆனந்தமயமாக இருக்கும் ஒரு சாமியார் உறங்கும்போது அவர் ஆன்மா மேலுலகம்போய், விழிக்கும்போது திரும்ப வருகிறதாம். அவர் மூன்றுமுறை தொட்டால், வந்த நோய் போய்விடுகிறதாம். அவரை நம்பி நோய்வாய்ப்பட்ட இளம் பெண்களை மருத்துவமனைக்குக் கூட்டிபோகாமல், மடத்துக்குக் கூட்டிபோய்த் தொடச் சொல்லித் தந்தையும் கணவனும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஒருமுறை தொடுவதற்கு ஏழாயிரம் உரூவா காணிக்கையாம்.

இக் குப்பை கூளங்களிடையே, ஒருவருக்கு ஒருவர் உள்ளன்போடு, உறுதியோடு, சிறிதும் மனப் பிறழ்ச்சியோ தடுமாற்றமோ இன்றி வாழும் நல்ல இணையர்கள், குடும்பங்களும் மிகுதியாக உள்ளன.

இந்நிலையில் திரைக்கதைஞர் முதல் படைப்புக்கலை தொடர்பான பெரும்பான்மையோரும், ஊடகங்கள் வைத்து இராகு கேது சனி சூரியன் சந்திரன் இந்திரன் எனத் தனியார் தொலைக்காட்சிகள் நடத்துவோரும் தமிழ் மொழியையும் மக்களின் பண்பாட்டையும் ஒவ்வொரு கணமும் சிதைத்துச் சீரழித்து வருகிறார்கள்.

பணம் குவிக்கவேண்டுமென்று எந்த நிலைக்கும் போகும் இத் தீயவர்கள் சாகும்போது, இவர்கள் இத்தீய வழியில் தேடும் பணம் கூடவே போகப் போவதில்லை. முதலில்அரைகுறை உடையுடன், மார்பு குலுங்க வலிப்புநடனம் ஆடுபவர்களையும் அதை நடத்துபவர்களையும் வெட்கமின்றி அதை இரசித்துப்

பார்ப்பவர்களையும் தண்டிக்க வேண்டும்; அல்லது அவர்களாகவே கவிழ்ந்து, செய்த தீவினைகளின் பயனை அனுபவிக்க வேண்டும்.

சங்ககாலத்தும் அத்தனை தீமைகளும் இருக்கவே செய்தன. அன்று மானிட மன்பதை சிறிது. அதன்நிலை வேறு. இன்று மக்கள்தொகை ஆயிரம் மடங்கு கூடுதல்; அதனால் தீமைகளும் ஆயிரம் மடங்கு கூடுகின்றன.

சங்கப்புலவர்கள் இவற்றை நெறிப்படுத்த முயன்ற முயற்சியின் விளைவே அவர்களின் இலக்கியப் படைப்புக்கள். அவர்கள் கால மக்கள் மன்னாயம் ஒருபுறம் இழுக்க, அவர்கள் மறுபுறம் நல்வழிக்கு அதை இழுக்க முயன்ற கயிறு இழுப்புப் போட்டியையே நாம் சங்க அகப் பாடல்களில் காண்கின்றோம்.

ஒரு தலைவன் பிரிந்து போனவன் உரியநாள் வந்தும் திரும்பவில்லை. சொன்ன சொல்தவறிய அவன்மீது அவளுக்குச் சீற்றம் பொங்கியது. தோழியிடம் தன் ஆத்திரத்தைக் கொட்டித் தீர்க்கின்றாள்.

**விடர்முகை அடுக்கத்து விறல்கெழு சூலிக்குக்**
**கடனும் பூணாம்; கைந்நூல் யாவாம்;**
**புள்ளும் ஓராம்; விரிச்சியும் நில்லாம்;**
**உள்ளலும் உள்ளாம் அன்றே தோழி!**
**உயிர்க்குஉயிர் அன்ன ராகலின் தம்இன்று**
**இமைப்புவரை அமையா நம்வயின்**
**மறந்து ஆண்டு அமைதல் வல்லியோர் மாட்டே** *(218)*

காதலர் உயிர்க்குயிராக விளங்கியவர். அதனால் அவரின்றி ஓர் இமைப்பொழுதுகூட, நாம் வாழமாட்டோம் என்பது அவருக்குத் தெரியும். இருந்தும் நம்மைப்பற்றி எதுவுமே நினையாது, மறந்து, தாம் போன இடத்திலே அமைதியாகப் பொருந்தி வாழும் அளவு வன்மை மிக்க நெஞ்சுடைய அவரை நாம் மட்டும் ஏன் நினைக்க வேண்டும்? அவர் விரைவில் பொருள்தேடி வரவேண்டும் என்று செய்யும் நோன்புகளை, நாம் ஏன் தொடர்ந்து செய்யவேண்டும்?

அதனால் பிளவுற்ற குகைகளையுடைய மலையடுக்கத்தில் உறையும் கொற்றவைக்கு, பலிக் கடன்களை இனிச் செய்யோம். கையில் நோன்புக்காகக் கட்டும் காப்புநூலையும் கட்டோம்; நிமித்தம் பற்றியும் ஆராயோம்; நற்சொல் கேட்கவும் காத்து நில்லோம். இனி அவரை நினைக்கவும் மாட்டோம்!

இத்தனையும் சொன்னாலும் காதலர் திரும்பும்வரை மனைவியர் இத்தனை நோன்புகளையும் செய்வர் என்பதே கருத்து. சூலப்படையை உடையவள் சூலி, கொற்றவை. விறல் - வெற்றி தருபவள். இன்று ஐயர் கையில் காப்புக்கட்டித் திருமணம் முதலான சடங்குகளில், நடத்துவன தமிழர் மரபே. அவர் வந்து அங்கே அமர்ந்துகொண்டு, சமஸ்கிருதம் ஓதியது காணிக்கை பெறுதற்பொருட்டே. புள்-இன்று 'சகுனம்' என்பர். விரிச்சி- இன்று அசரீரி எனப் பழக்கிவிட்டனர். தமிழர்களுக்கு இவற்றிலெல்லாம் அன்றும் இன்றும் நம்பிக்கை மிகுதி. 'அமைதல்' என்பது ஒரு மரபுத்தொடராக வழங்கியிருக்கிறது. ஒருவரொடு ஒருவர் மனம் பொருந்தி, இன்பம் துய்த்தலை அது குறித்துளது. இன்றும் 'வீடு பார்த்தீர்களே, என்ன ஆயிற்று?' என்றால், 'ஒன்றும் நல்லதாக அமையவில்லை' என்பர். அதாவது பொருத்தமுற அமையவில்லை என்பது கருத்து.

## காமஇன்ப இயல்பு

ஆசையை நுகர்ந்து பிறகு அதிலிருந்து விடுபட வேண்டும். ஆசையே இல்லை என்பது நடிப்பாக மாறக்கூடும். தொல்காப்பியர் காலந்தொட்டே, பெண்ணாசை, பொன்னாசை, மண்ணாசை எல்லாம் கூடா என்ற கோட்பாடு முகிழ்க்கவில்லை. இவை மிக அளவாக, நெறிப்பட நுகரப்பட வேண்டும். உடலின் இயல்பு, மனத்தின் இயல்பு, இவை உலக இயற்கை சார்ந்தன. இயற்கையை அழிப்பதும் பகைப்பதும் பயன்தரா. பசி என்பது எவ்வாறு இயற்கை சார்ந்ததோ, அதுபோன்றனவே பிறவும். தொல்காப்பியர் இல்லற வாழ்வின் முடிந்த பயனைக் கூறவந்தவர், 'காமம் சான்ற கடைக் கோட்காலை' (1138) என்ற உலக இன்பங்களை நுகர்ந்து

தீர்ந்த, குறிப்பிட்ட அகவையை எட்டிவிட்ட இறுதிக் காலத்தே, அறம்செய்து, பொதுநலம் பேணி வாழவேண்டும் என்றார்.

பொருள்தேடப் போகலாம் என்று விரும்பிய தலைவன், தன் துணையைப் பிரியவேண்டுமே என முதலில் தயங்குவான். எங்ஙனமாயினும் பொருள்தேடி வரின் அல்லது இல்லறக் கடமைகளை ஆற்ற முடியாதே என்ற கவலை ஒருபுறம் தோன்றும். அச் சமயங்களில் அவன் தன் நெஞ்சுடன் பேசி, ஒரு தீர்வுகாண முயல்வான். இங்கே ஒரு தலைவன் தன் நெஞ்சிற்கு, அவளுடன் கூடிவாழும் நுட்பமான அக் காமஇன்ப நுகர்ச்சி பற்றிக் கூறிப் பிரிவைத் தவிர்க்க அல்லது சிலகாலம் கடத்த விழைந்து பேசுகின்றான்.

**மன்னுயிர் அறியாத் துன்னரும் பொதியில்**
**சூருடை அடுக்கத்து ஆரம் கடுப்ப**
**வேனி லானே தண்ணியள்; பனியே**
**வாங்குகதிர் தொகுப்பக் கூம்பி ஐயென**
**அலங்குவெயிற் பொதிந்த தாமரை**
**உள்ளகத் தன்ன சிறுவெம் மையளே** *(376)*

''நிலைபெற்ற உயிர்கள் - குறிப்பாக மக்கள் உட்சென்று அறியாத நெருங்குதற்கரிய காடடர்ந்த பொதியமலை. அதில் 'சூர்' எனும் தெய்வம் உறையும் மலையடுக்கத்தில் உள்ள சந்தனமரம் மிகுந்த குளிர்ச்சி தருவது. அதனைப்போல என் காதலி வேனிற் காலமாகிய வெப்பம் மிக்க பருவத்தில், தழுவிக் கொள்ளுங்கால் குளிர்ச்சிதரும் தண்மையுடையவள். பனிப்பருவத்திலோ, சூரியக் கதிரின் வெப்பத்தை உள்வாங்கி, பிறகு குவிந்து மூடி, விரைவாக, விளங்கும் அவ் வெயிலைப் பொதிந்துவைத்த, தாமரையின் உள்ளகம் எவ்வாறு சிறு வெம்மையுடையதாக விளங்குமோ அதுபோலத் தழுவிக்கொள்ளுங்கால் சிறிதளவான வெம்மையைத் தருபவள் இவள்.'' இவளை எவ்வாறு பிரிந்து பொருள்தேடச் செல்வது என்பது குறிப்பு. இருவரும் விழைந்து ஆரத் தழுவிக் கொள்ளுங்கால், வெயில் காலத்தில் குளிர்ச்சியையும் குளிர் காலத்தில் வெம்மையையும் தருபவள் எனக் கூறுகின்றான்.

குளிர்ச்சியும் வெப்பமும் எந்த அளவு அமையும் என்பதற்குக் கூறியுள்ள உவமைகள் மிக நுட்பமுடையன. வேனில் - கோடைக் காலம். பனி - குளிர்காலம். ஆரம் - சந்தனம். அலங்கு - விளங்கும்.

காதல் வாழ்க்கையில், உற்ற நண்பர்கள் உதவி பெரிது. இடர்கள் வருங்காலத்தில் வாய்திறந்து சொல்லி ஆறுதல் பெறவாவது ஒரு தோழி, தோழன் வேண்டும். தக்க கருத்துரை கூறவும் வழிகாட்டவும் கூடிய நண்பர்கள் கிடைத்துவிட்டால் அதுபோல் உற்ற துணை வேறு கிடையாது.

வழக்கறிஞர் ஒருவர் வழக்குத் தொடுப்பவர் சார்பாகப் பேசும்பொழுது, 'தாமே அவராகக் கொண்டு' பேசுவார். தோழியும் தன்னைத் தலைவி போலவே 'பாவித்துப்' பேசுவதாக வருவதால், அகப்பாடல்களில் எது தலைவி கூற்று, எது தோழி கூற்று என அறிவதில் தடுமாற்றம் உளது. மிக நுட்பமாக ஆராய்ந்து, அங்ஙனம் வேறுபாடறிவதற்கான, கூறுகள் கண்டறியப்பட வேண்டும்.

ஒரு தோழி தலைவியிடம் அவளை அவள் காதலனுக்கு மணம்முடிக்க ஏற்பாடாயிற்று என்ற நல்ல செய்தியைக் கூறுகிறாள். இந்த நல்ல முடிவு ஏற்படுமுன், இவர்கள் களவுக் காதல்பற்றி, ஊரார் பேசிய கிசுகிசுப்புக்களுக்கு, பழிப் பேச்சுக்களுக்கு அளவே இல்லையாம். அது தூக்கணங்குருவியின் கூடு, பல முடிச்சுக்களாகப் பின்னிப் பிணைந்தும் வளைந்தும் ஒரே குழப்பமாகக் கட்டப் பட்டிருப்பது போலப் பலவாறு பேசப்பட்டதாம். திருமணம் உறுதிப்பட்டதால், மயங்கிக் கிடந்த ஊர், இப்போது தெளிவுபட்டு, நம்முடன் ஒற்றுமைப்பட்டு விட்டது என்று கூறுகிறாள் தோழி.

**எந்தையும் யாயும் உணரக் காட்டி**
**ஒளித்த செய்தி வெளிப்படக் கிளந்தபின்**
**மலைகெழு வெற்பன் தலைவந்து இரப்ப**
**நன்றுபுரி கொள்கையின் ஒன்றா கின்றே**
**முடங்கல் இறைய தூங்கணங் குரீஇ**
**நீடிரும் பெண்ணைத் தொடுத்த**
**கூடினும் மயங்கிய மையல் ஊரே (374)**

தோழி தலைவியிடம் தான் 'அறத்தொடு நின்றதால்' பெற்றோர் இசைந்து, திருமணம் நடக்க இருப்பதைக் கூறுகிறாள். ''நம் தந்தையும் தாயும் நன்கு அறியும்படி அவர்களுக்கு விளக்கிச் சொல்லி, இதுவரை மறைத்து வைத்திருந்த செய்தியை வெளிப் படக் கூறினேன். அவ்வாறு கூறியபின், மலைகளையுடைய வெற்பனாம் தலைவன் நம் பெற்றோரிடம் வந்து பெண்கேட்டு நின்றான். அதனால் நல்லதைச் செய்யும் திருமணம் உறுதிப் பட்டது. முன்பு நம்மைக் களவுக்காலத்தில் அலர்தூற்றிப் பழித்துப் பேசிய ஊர், இன்று நம்முடன் ஒன்றுபட்டு அதுவும் மகிழலாயிற்று. எதுபோல என்றால் வளைந்த சிறகையுடைய தூக்கணங்குருவி, உயர்ந்த பனைமரத்தில் கட்டிய கூடு, எந்த அளவு பலவாறு பின்னிப் பிணைந்து கலந்து காணப்படுமோ அதுபோல மயக்க முற்றிருந்த ஊர், இப்போது நம்முடன் ஒன்றுபட்டது.

இப்படியும் அப்படியும் பேசி அலர்தூற்றும் ஊருக்கு, தூக்கணங் குருவிக் கூட்டை உவமை சொல்லியிருப்பது புதுமை தவழும் உவமையாகவுளது (ஒளித்த செய்தி - களவுக்காதல். நன்றுபுரி கொள்கை - திருமணம் செய்யக் கருதும் நல்லெண்ணம். தலைவந்து இரப்ப - தலைவன் மிகப்பணிவாக வந்து பெண் கேட்டமை, தலைவியை உயர்த்திக் காட்டுகிறது. இறைய - சிறகையுடைய. பெண்ணை - பனை.)

## அறிவுரை கூறும் திறன்மிகு தோழி

ஓர் ஆடவன் ஒருத்திமீது காதல்கொண்டு அவளின் அன்பைப் பெறும்வரை கெஞ்சுவான்; இரந்து நிற்பான்; சூள் உரைப்பான்; பணிவுடன் கனியக் கனியப் பேசுவான். அவளும் மனம் ஒன்றுபட்டுக் காதல்கொண்டு, அவனது 'மயக்கமுற்ற நிலை' கண்டு, தானும் மயங்கித் தன்னைத் தொட அனுமதிப்பாள். அவ்வாறு தொட்டு, இருவரும் கூடி மகிழ்ந்தபின் நிலைமை மாறும். அவன் தயங்கியதும் மயங்கியதும் இரந்து பின்னின்றதும் போல் இவள் தயங்கி, மயங்கி, அஞ்சி, அலமருவாள். தன்னை அவன் கைவிட்டுவிடக் கூடாதே என்ற ஏக்கம் உண்டாகும்.

ஒரு பெண் இன்று ஆடவர்க்குச் சமமாகக் கல்விகற்று, மேன்மையுற்று, வருமானமும் தேடி, தன்காலில் நிற்குமளவு பெருமை பெற்று வருகிறாள். எனினும் ஓர் ஆடவனுக்கு அவனது உண்மையான காதலை அறியும்வரை அணுகவிடுதல் தவறு. ஓராண்டுக்கும் மேல் பழகியபின்புதான் 'இடம்' கொடுக்க வேண்டும்.

பின்னே வரும் வண்டிகள் படிக்கும்படி, ஒரு சரக்குந்துவின் பின்புறம், 'தொடர்ந்து வா, தொடாதே' என எழுதியிருந்தது. மகளிருக்கும் இது ஒரு நல்ல பாடம். ஒரு தலைவன் தன் காதலியை களவில் கூடிமகிழ்ந்து, பிறகு திருமண ஏற்பாட்டுக்காகப் பொருள்தேடச் செல்கிறான். அவன் பிரியும் நேரத்தில், தோழி அவனிடம் ''விரைவில் பொருள்தேடி வந்து, முறைப்படி பெண் கேட்டு, பரிசம்போட்டுத் திருமணம் செய்துகொள். இனி அவள் வாழ்வதும் தாழ்வதும் உன் கையில் இருக்கின்றன. அடித்தாலும் அணைத்தாலும் இனி நீயே அவளுக்குத் துணை. அவள் துயரைக் களைவார் இனிவேறு யாருமிலர்,'' எனப் பலவாறு அறிவுரை கூறி அனுப்புகின்றாள். இன்றும் அதே நிலைதான். ஆனால் வேறுவிதமாக அணுகவேண்டியிருக்கும்.

இன்றும் பெண்ணுக்குத் 'தற்காத்தல்' என்பது கூடுதல் தேவையே. விளக்கொளியில் விழும் விட்டிலாக ஆகி, பின்னர் விதியை நோவாமல், விழிப்பாக இருப்பதே மேல். முன்பு தோழி சொன்ன அறிவுரை இதுதான்:

**நனைமுதிர் ஞாழற் சினைமருள் திரள்வீ**
**நெய்தல் மாமலர்ப் பெய்த போல**
**ஊதை தூற்றும் உரவுநீர்ச் சேர்ப்ப!**
**தாய்உடன்று அலைக்கும் காலையும் வாய்விட்டு**
**'அன்னாய்' என்னும் குழவி போல**
**இன்னா செயினும் இனிதுதலை யளிப்பினும்**
**நின்வரைப் பினள்என் தோழி!**
**தன்னுறு விழுமம் களைஞரோ இலளே (397)**

அரும்பு முதிர்ந்த, புலிநகக் கொன்றையின் மீன் முட்டைபோல் திரண்டு உருண்ட பூக்கள், கீழே நீர்நிலையில் உள்ள நெய்தலது பெரிய மலர்களின்மீது, மேலேயிருந்து கொட்டுவதுபோல, ஊதைக் காற்று வீசித்தூற்றும் வலிய கடற்கரைத் தலைவ! தாய் சினமுற்று அடிக்கும் போதும் குழந்தை வாய்விட்டு 'அம்மா' என்றே அழும். அக் குழந்தைபோல, இன்னாதது செய்யினும் இனிது செய்யினும் இனி, என்தோழி உன் எல்லைக்குட்பட்டவளே. அவளுக்கு ஏதும் துன்பம் நேரினும் அதனைக் களைவார் உன்னையன்றி வேறு எவருமிலர்.

ஞாழலின் சின்னஞ்சிறிய பூக்களை, கீழே வாய் திறந்திருக்கும் நெய்தலின் பெரிய பூக்களில், ஊதைக் காற்று வீசி உதிர்ப்பது, யாரோ அப்பூக்களை மேலேயிருந்து கொட்டுவது போல இருக்கிறதாம். நல்ல கற்பனை வளமுள்ள சொற்சித்திரம் இது. 'தாய் அடித்தாலும் அம்மா என்று அவளையே கூப்பிட்டு அழைக்கும் குழந்தை', என்பது அரிய உவமை.

பெருமாள் திருமொழியில், திருமாலைப் பணிந்து பரவும் பொழுது, 'அரி சினத்தால் ஈன்றதாய் அகற்றிடினும் மற்றவள்தன், அருள் நினைந்தே அழுங்குழவி அதுவேபோன்று இருந்தேனே' என வருவது, சங்கஇலக்கியச் செல்வாக்கின் தொடர்ச்சி எனலாம்.

## ஏமாற்றும் காதலனை இடித்துரைப்பார் யார்?

தலைவன் காதில் விழும்படி தலைவி தோழியிடம் தன் காதலன் தன்னை ஏமாற்ற நினைப்பதைக் கடிந்து கூறுகிறாள். தலைவிக்கு இப்போது வேறுஇடத்தில் திருமணம் பேசுகிறார்கள்; அது தெரிந்தும் பாராமுகமாக இருக்கும் தலைவனைப் பற்றி வருந்திக் கூறுகிறாள், தலைவி.

**எறிசுறாக் கலித்த இலங்குநீர்ப் பரப்பின்**
**நறுவீ ஞாழலொடு புன்னை தாஅய்**
**வெறிஅயர் களத்தினின் தோன்றும் துறைவன்**
**குறியா னாயினும் குறிப்பினும் பிறிதொன்று**

**அறியாற்கு உரைப்பலோ யானே? எய்த்தஇப்**
**பணைஎழில் மென்தோள் அணைஇய அந்நாள்**
**பிழையா வஞ்சினம் செய்த**
**கள்வனும் கடவனும் புணைவனும் தானே** *(318)*

தாக்கவல்ல சுறாமீன்கள் மிக்குள்ள விளங்கும் கடல்நீர்ப் பரப்பின் துறையில் நறுமணமுள்ள ஞாழற் பூக்களும் புன்னைப் பூக்களும் உதிர்ந்து, பரவிக்கிடக்கின்ற காட்சி, வெறியாட்டெடுக்கிற களம்போல இருக்கிறது. அத் துறைவன் என்னை மணம் செய்யக் கருதினும் கருதா விடினும், பிறிதொரு நிகழ்வு நடப்பதை (அதாவது வேறு சிலர் மணம்பேச வருவதை) அறியமாட்டானா? அதை யான் சொல்லியா தெரியவேண்டும்? இன்று மெலிந்துபோன, திரண்டுருண்ட மூங்கில்போலும் எனது மெல்லிய தோள்களைத் தழுவிக்கொண்ட, அக்காலத்தில், 'நான் கை விடேன்' என்று தவறவே மாட்டாத வஞ்சினம் கூறிய கள்வனும் அதனைத் தீரக் கேட்டு ஆராய்ந்து தீர்ப்புக் கூறவேண்டியவனும் அதற்குச் சான்றுகூற வேண்டியவனும் அவன் ஒருவனே! அவனே தவறின் என் செய்வேன்?

(கலித்த - மிகுதியாக உள்ள. கள்வன் (குற்றவாளி), கடவன் (ஆராயும் - விசாரிக்கும் நீதிபதி), புணைவன் - சான்று கூற வேண்டியவன். அக்கால வழக்காடுமுறை இதனால் விளங்குகிறது.)

## தலைவியின் தளரா நம்பிக்கை

**வண்டுபடத் ததைந்த கொடிஇணர் இடையிடுபு**
**பொன்செய் புனைஇழை கட்டிய மகளிர்**
**கதுப்பில் தோன்றும் புதுப்பூங் கொன்றைக்**
**கானம் கார்எனக் கூறினும்**
**யானோ தேறேன் அவர் பொய்வழங் கலரே** *(21)*

அவர் வாராததால் இது கார்காலமாக இருக்க முடியாது. கானமே பூத்துக் குலுங்கி, இது கார்காலமே என்று கூறினாலும் யான் நம்பமாட்டேன் என்று கூறுகிறாள் தலைவி. இவற்றில் புலவர்களின் கற்பனை வளமும் கலந்திருப்பினும், ஒருவர்மீது ஒருவர் வைத்திருந்த - அல்லது வைக்கவேண்டிய நம்பிக்கையை இவை காட்டுகின்றன.

# 4

# மனத்தைக் கவரும் மாணிக்கப் பரல்கள்

1200 நேரிசை ஆசிரியப் பாவாலான அகத்திணைப் பாக்கள், மூன்று தொகுதிகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. குறுந்தொகை, நற்றிணை, நெடுந்தொகை, 4-8 அடிகளுக்குட் பட்ட பாடல்கள் குறுந்தொகை; 9-12 அடிகளுக்குட்பட்ட பாடல்கள் நற்றிணை. 13-31 அடிகளுக்குட்பட்ட பாடல்கள் நெடுந்தொகை (அகநானூறு). இவை ஒரே சமயத்தில் திட்டமிட்டுத் தொகுக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதுதானே பொருத்தம். இவை மூன்றும் நானூறு நானூறாகத் தொகுக்கப் பட்டுள்ளன.

இவற்றில் யார் பாடியவர் என்று பெயர் தெரியாதவையும் உள. சில பாடல்களுக்கு அதில் வரும் உவமையாலும் அரிய தொடராலும் ஆசிரியருக்குப் பெயரிட்டுள்ளனர்.

நெடுந்தொகை நானூறு அகநானூறு எனப்பட்டு அதற்கு ஈடாகப் புறநானூறு தொகுக்கப்பட்டுள்ளது. ஐந்துதிணை பற்றி ஐந்து தொகுதியாகப் பாடப்பெற்ற கலித்தொகையும் இசைப் பாடல்களைக்கொண்ட பரிபாடலும் மீட்டுருவாக்கம் போலத் தோன்றுகின்றன. கலி பரி என்பன ஆடலோடு கூடிய இசையமைந்த குழுப்பாடல் வகையின. வரிப்பாடல் வள்ளைப் பாட்டு, துணங்கைப்பாட்டுக்கள் போல, அவை மக்களால் பாடப்பட்ட காலம் முந்தையது. அவற்றுக்கு இலக்கிய வடிவம் தர முயன்றதன் பயனே இன்று கிடைத்திருப்பவை எனலாம்.

ஐங்குறுநூறும் பதிற்றுப்பத்தும் பத்துப்பத்துக்களாகப் பாடப்பெற்று, சேரநாட்டில் அரங்கேற்றப்பட்டவை போலத் தோற்றுகின்றன. குறுந்தொகையில் மதுரைக்காஞ்சிப்புலவன் மாங்குடி மருதன் *(164)* என்றும் மதுரைக் காஞ்சிப்புலவன் *(173)* என்றும் இரண்டு பாடல்களில் குறிக்கப் பெற்றிருப்பது கொண்டு, பத்துப்பாட்டும் எட்டுத்தொகை தொகுக்கப்பட்ட போதே உடன் தொகுக்கப்பட்டதென நம்ப இடமுளது.

இவைபற்றித் தொகுத்தார், தொகுப்பித்தாரென பலவற்றுக்கு ஓரளவுபெயர் குறிக்கப்பெற்றிருப்பினும் ஒரு குழுவினரின் (Academy) முயற்சியாகத் தோற்றுகின்றன. இவை யாவும் காப்புணர்ச்சியோடு கூடிய திட்டமிடல் மூலம் ஒருவழித் தொகுக்கப்பட்டன என்பது புலனாகாமற் போகாது. அதற்குக் கடல்கோள்களும் இயற்கைச் சீரழிவுகளுமே தூண்டுகோலாக இருந்திருக்க வேண்டும்.

குறுந்தொகை முதலிற் தொகுக்கப்பட்டதென்பர். அதைவிட அனைத்தையும் தொகுத்தகாலை, முதலில் வரையறைப் படுத்தப்பட்டதென்பது மேலும் பொருந்தும். பிற்காலத்தில் கூடுதலாக எடுத்தாளப்பட்டதும் குறுந்தொகையே எனப் புள்ளி விவரம் தந்துள்ளார் உ.வே.சா. அவர்கள். அதற்கு அதன் சிறிய வடிவமும் செறிவும் இனிமையும் எளிமையுமே காரணம் எனலாம். இதன் கடவுள் வாழ்த்து, பாரதம் பாடிய பெருந்தேவனார் முருகனைப் பற்றிப் பாடியதாகும். அதைத் தவிர்த்து 401 பாடல்கள் உள்ளன. குறுந்தொகை நானூறு என்பதற்கு மாறாக, ஒரு பாடல் கூடுதலாகக் காணப்படுகிறது. மேலும் 307, 391 ஆம் பாடல்கள் இரண்டும் ஒன்பதடிப் பாடல்களாக உள்ளன. காலமாற்றங்களால், ஏடு பெயர்த் தெழுதுவோரால் இவை நேர்ந்திருக்கக் கூடும்.

குறுந்தொகைக்கு முதன்முதலில் உரையெழுதிப் பதிப்பித்தவர் திருக்கண்ணபுரம் சௌரிப் பெருமாள் அரங்கன் என்பவராவார் *(1915)*. அதற்கு மிகச் சிறந்த முறையில் விரிவான உரையெழுதிப்

பதிப்பித்த பெருமை தமிழ்த் தாத்தா உ.வே. சாமினாதையர் அவர்களையே சாரும் (1937). இந்நூலில் பெயர் தெரியாதவர் பாடல்கள் பத்து; பெயர் அறியப்படாததால் அவர்கள் பாடிய பாடல்களில் வரும் உவமைகளாலும் அரிய தொடர்களாலும் பெயர் சூட்டப்பெற்றவர்கள் பதினெண்மர். சிறப்பு அடைமொழி பெற்ற புலவர்கள் நால்வர். தொல்காப்பியத்திற்குப் பாயிரம் பாடிய பனம்பாரனார் பெயராலும் ஒரு பாடல் உளது (52). மேலும் ஔவையார் வெள்ளிவீதியார் ஆதிமந்தியார் பாடல்கள் சில அவர்களின் சொந்த வாழ்வை எதிரொலிப்பன போல் காணப்படினும், பாடலுள் பெயர் சுட்டாமையால் அகத்திணையில் சேர்க்கப் பட்டுள்ளன.

## பாடல்களின் கட்டமைப்பு

சங்கப் பாடல்கள் காப்பியக் கட்டமைப்புப் போலச் சிறந்த செறிவான கட்டமைப்புடையன.

1) சங்கப் பாடல்களில், ஒவ்வொன்றிலும் நூற்றுக் கணக்கான அரும்பொருட் தொடர்கள், அடைமொழித் தொடர்கள், அணிநலத் தொடர்கள் உள்ளன. இத் தொடர்கள் தம்மளவில் நிறைபொருளுடையன. இவற்றை ஒருங்கிணைத்துக் கட்டிய மாலைபோல, பாடலமைப்பு இருக்கும். பெரிதும் வேற்றுமை உருபுகள் முதலானவை மறைந்திருக்கும். நாம்தான் அவற்றை விரித்துக்கொள்ள வேண்டும். சிறுபாடல் முதல் பெரும்பாடல் வரை இவ் அமைப்பு உண்டு.

   இத்தகைய தொடர்கள் பலகாலமாகப் பாடிவந்த மரபில் உருவானவை. இவை நாட்டுப் பாடல் மரபின; வாய்மொழி இலக்கியக் காலத்தவை என்பதை க.கைலாசபதி நிறுவியுள்ளார் (தமிழ் வீரநிலைக் கவிதை).

2) சில பாடல்களில் ஓரடியிலேயே பொருள் சிறந்திருக்கும். அத்தகைய பல அடிகளின் கூட்டாகப் பாடல் அமையும்.

3) சில பாடல்களில் முதலடி, ஒரு நாடகத் தொடக்கம்போல் காணப்படும்.

4) சில பாடல்களில் முதலடியையும் இறுதியடியையும் சேர்த்தால், சொல்லவந்த செய்தியின் கரு முடிந்துவிடும்.

5) சில பாடல்களில் இடையிடையே இரண்டுஅடி, மூன்று அடிகளைப் பிரித்துப் படித்தால், அவற்றுள்ளும் நிறைவான பொருள் சிறந்திருக்கும்.

6) சில பாடல்கள் நம் இன்றைய பேச்சுநடை போலிருக்கும்.

## தன்னிறைவுத் தொடர்களின் இணைப்பு

**சிறுவெண் காக்கைச் செவ்வாய்ப் பெருந்தோடு**
**எறிதிரைத் திவலை ஈர்ம்புறம் நனைப்பப்**
**பனிபுலந்து உறையும் பல்பூங் கானல்**
**இருநீர்ச் சேர்ப்பன் நீப்பின் ஒருநம்**
**இன்னுயிர் அல்லது பிறிதொன்று**
**எவனோ தோழி நாம்இழப் பதுவே? *(334)***

சிறு வெள்ளைக் காக்கைகள் சிவந்த வாயுடன் கடற்பகுதிகளில் காணப்படும். அவற்றின்மீது அலைகொண்டு வந்து வீசும் நீர்த் துளிகள் பட்டு, அவற்றின் ஈரமுதுகை மேலும் நனைக்கவே, அவை அக்குளிரை வெறுத்து அங்கேயே தங்கியிருக்கும். அவ்வாறான பலவகைப் பூக்கள் நிறைந்த சோலைகளையுடைய, கடற்கரைத் தலைவன் நம்மை மணந்து, வரைவுக்கான பொருள்தேடி வருவதாகப் போனவன் ஒரேயடியாக வந்திலன். அவன் நம்மைக் கைவிடுவானாயின் நாம் இழக்கப்போவது நம்முடைய ஒரே ஒரு இன்னுயிர்தானே; வேறு எது நம்மிடம் இனி இழப்பதற்கு இருக்கிறது?-இவ்வாறு தலைவி தன் ஆற்றாமையைத் தோழியிடம் கூறுகிறாள். (தோடு - தொகுதி, கூட்டம். திரை - அலை. புறம் - முதுகு. கானல் - கடற்கரைச் சோலை. சேர்ப்பன் - கடற்கரைத் தலைவன். இருநீர் - கரியகடல்.)

**சிறுவெண்காக்கை, செவ்வாய்ப் பெருந்தோடு, எறிதிரைத் திவலை, பல்பூங்கானல், இருநீர்ச் சேர்ப்பன்.** ஐந்து தொடர்களுக்கும் தனித்தும் பொருள் கூறலாம்.

சிறுவெண்காக்கையது, சிவந்த வாயையுடைய பெருந்தோடு, எறியும் திரையது திவலைகள் ஈர்ப்புறத்தை நனைப்ப, அப் பனியைப் புலந்து உறையும் பலபூங்கானலுள்ள இருநீர்க்குரிய சேர்ப்பன், நீப்பானேல், நாம் இழப்பது ஒரு நமது இன்னுயிரல்லது பிறிது ஒன்று எவனோ, தோழி! - இவ்வாறு **உருபுகளை விரித்து**, உரைநடைப்படுத்த வேண்டியுளது. தனித்தனியே பொருள்கொள்ளக் கூடிய தொடர்களையும் விரிக்க வேண்டியுளது, உருபுகளும் தொக்கு நிற்கின்றன. இவ்வாறு பல தொடர்கள் தொகுத்துக் கட்டியதொரு மாலை போலப் பாடல் உளது. இதுவே அதன் கட்டமைப்புக்கும் செறிவுக்கும் காரணம்.

**எழுதரு மதியம் கடற்கண் டாஅங்கு**
**ஒழுகுவெள் ளருவி ஓங்குமலை நாடன்**
**ஞாயிறு அனையன் தோழி!**
**நெருஞ்சி அனையஎன் பெரும்பணைத் தோளே** ***(315)***

இதுவும் காதலன் விரைவில் வந்து திருமணம் செய்து கொள்வதாகச் சென்றவன், காலத் தாழ்வாக, வராத நிலையில் வருந்தும் தலைவி தோழியிடம் கூறியதேயாகும்.

கடலில் முழுமதி எழுகின்றபோது பார்க்க வேண்டும். பாதி கடலின் உள்ளே; பாதி மேலே. இதனால் மதியின் ஒளிவெள்ளம், கடற்கரையில் நீண்டு ஓடிவருவது போலிருக்கும். இப்படி ஒழுகும் வெள்ளைநிற அருவியையுடைய உயர்ந்த மலைநாடன், ஞாயிறு போல்வன்; என் பெரிய பருத்த தோள் அவனையே நோக்கியிருப்பது, அந்த ஞாயிற்றை நோக்கியே இருக்கும் நெருஞ்சிப்பூப் போன்றதாகும். *(சூரியகாந்தியும் அத்தகையது.)*

எழுதருமதியம், ஒழுகுவெள்ளருவி, ஓங்குமலை நாடன், பெரும்பணைத் தோள் என நான்கடிப் பாடலில், நான்கு தன்னிறைவுத் தொடர்கள் உள்ளன. ஞாயிறு, நெருஞ்சி என்ற பொருள் முரணும் கட்டமைப்புக்கு உதவுகிறது. இதிலும் உருபுகளை விரிக்கவேண்டும். எழுதருகின்ற மதியத்தை, கடலின் பரப்பிலே கண்டாங்கு, ஒழுகும் வெள்ளிய அருவி தோன்றும் ஓங்கு மலைநாடன் ஞாயிற்றை அனையன்; என் பெரிய பருத்த தோள்கள் நெருஞ்சியை அனையன.

| | | | |
|---|---|---|---|
| கயலேர் உண்கண் | *(398)* | பொன்செய்புனைஇழை | *(21)* |
| மெய்ம்மலி உவகை | *(398)* | புதுப்பூங்கொன்றை | *(21)* |
| நனைமுதிர் ஞாழல் | *(397)* | பெருங்கை வேழம் | *(37)* |
| சினைமருள் திரள்வீ | *(397)* | அங்குடிச் சீறூர் | *(41)* |
| மணிச்சிறைத் தும்பி | *(392)* | கருவி மாமழை | *(42)* |
| சேயிலை வெள்வேல் | *(15)* | இல்லிறைப் பள்ளி | *(46)* |
| தொகுவளை முன்கை | *(15)* | கருங்கால் வேங்கை | *(47)* |
| செங்காற்பல்லி | *(15)* | சிறு வீஞாழல் | *(50)* |

இவ்வாறு சங்கப்பாடல்கள் 2381-லும் ஆயிரக்கணக்கான தன்னிறைவுத் தொடர்கள் உள. இவற்றுள் திரும்பவரும் தொடர்களைத் திரட்டிக் காட்டி, இவை ஆயிரக்கணக்கான ஆண்டுகள், வாய்மொழி இலக்கிய வளர்ச்சியைக் காட்டுவன என்பார் க.கைலாசபதி.

## தன்னிறைவு அடிகளின் இணைப்பு

கடப்பாட்டாளன் எனப்படும் ஒப்புரவாளன் கையில், செல்வம் தங்காது. இதைக் கூறவந்த நக்கீரனார்,

**'நில்லாமையே நிலையிற்றாகலின்' (143)** என்றார்.

பாலை பாடிய பெருங்கடுங்கோ, தலைவன் பொருள்வயிற் பிரிந்ததன் காரணத்தைத் தலைவிமூலம் விளக்குகின்றார்.

**'உள்ளது சிதைப்போர் உளரெனப்படார்'**
**'இல்லோர் வாழ்க்கை இரவினும் இழிவு'** *(283)*

பொருள்வயிற் பிரிந்த தலைவன் திரும்பி வருவதாகத் தோழி கூறுகிறாள். ஒக்கூர் மாசாத்தியார், அவன் வருவதை,

**'செய்வினை முடித்த செம்மல் உள்ளமொடு'** *(275)*

வருவதாகக் கூறுகிறார்.

தலைவன் பரத்தையிற் பிரிந்து வந்தபோது, தோழி கூறும் கடுமொழி இது. கயத்தூர் கிழான் பாட்டு.

**'நீர் நீடு ஆடின் கண்ணும் சிவக்கும்'**
**'ஆர்ந்தோர் வாயில் தேனும் புளிக்கும்'** *(354)*

பிறவற்றில் 'தெவிட்டலாம்'; காதல் வாழ்விலுமா?

தலைவன் எளிதில் பிரியமாட்டான் என்பது தோழி கருத்து, ஏன்?

**'வினையே ஆடவர்க்கு உயிரே'**
**'வாள்நுதல், மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர்'** *(135)*

ஒரு பாடற் கருத்து, பலவகையில் பலநிலையில் நிழற்பொருள், குறிப்புப் பொருள் எல்லாம் தருமாறும் பாடுவர். இறையனார் என்ற புலவர் பாடியது இது.

**'கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி'** *(2)*

இலக்கிய இன்பம் தேடி நுகர்வோர்க்கும் இது பொருந்துமே.

**'காமம் செப்பாது கண்டது மொழிமே'** *(2)*

நடுவுநிலையாளர் அனைவருக்கும் பொருந்தும் இது. அண்மையில் ஒரு குழுமத்தின் முழக்க வாசகமாக வெளியிடப்

பட்டது. சங்கப்பாடல்கள் தொடர்களின் கூட்டமைப்பு அடிகள்; அடிகளின் கூட்டமைப்பு பாட்டு என்பது போலும் கட்டமைப்பு விளங்கவில்லையா?

## நாடகத் தொடக்கம் போல்வன

'நோற்றோர் மன்ற தோழி!'-அவர்கள் தவம் செய்தவர்கள். யார்? பொருள் தேடப்போன கணவன் உரியகாலத்தில் வரப் பெற்றவர் என முடிப்பது இது *(344)*. 'அமிழ்தம் உண்கநம் அயலாலாட்டி', ஏன்? காதலன் திருமண ஏற்பாட்டோடு வருவதாக முன்கூட்டிச் சொன்ன, அயல்வீட்டுப் பெண்மணி *(201)*. இவற்றை மாட்டு, கொண்டுகூட்டு, பொருள்கோள், வண்ணம் என்றெல்லாம் அடக்குமாறு, பல பாவடிவங்கள் உள. என்றாலும் பாடியவர், ஓர் ஆர்வநிலையைத் தோற்றுவித்து முடிப்பது காண்க

## முதலடிகளும் இறுதியடிகளும்

ஒரு குறும்பாடலில்கூட, முதலடிகளிலேயே சொல்ல வந்த செய்திக்கரு முற்றுப்பெற்று விடுகிறது. வேறுசிலவற்றில் இறுதியடிகளில், பாட்டுக்கரு இடம்பெறுகிறது. நெடும்பாடல்கள், காப்பியங்களில் தலைமைக் கருத்து அல்லது அடிக்கருத்து, பிற துணைக் கருத்து எனப் பகுத்துக் கூறுவர் (Theme and motif). இவ் அமைப்பு குறுகிய சிறு பாடல்களிலும் அழகுற அமைந்திருப்பது, அதன் அழகை மேம்படுத்துகிறது.

இளவேனில் வந்தும் தலைவன் வந்திலன். இதுவே தலைவியது பிரிவுத் துன்பம்.

**கருங்கால் வேம்பின் ஒண்பூ யாணர்**
**என்ஐ இன்றியும் கழிவது கொல்லோ** *(24)*

- - இளவேனில் வரின் (சித்திரை, வைகாசி) வேம்பு தழைக்கும்; பூத்துக் குலுங்கும். அந்த இன்பத்தைத் தலைவனுடன் கூடிமகிழ்ந்து கொண்டாடாமலே, அது கழிந்துபோகக் கூடுமாம். (யாணர் - புதுவருவாய், புதிய பூக்கள்). இது பரணர் பாட்டு.

வரைவு நீட்டித்த தலைவன் திரும்பி வருவதாகவே தெரியவில்லை.

**யாரும் இல்லை; தானே கள்வன்**
**தான்'அது' பொய்ப்பின் யான்எவன் செய்கோ? *(26)***

அது - நெஞ்சறிசுட்டு என்பர்; அதுதான் இருவரும் கூடி மகிழ்ந்தது. இது கபிலர் பாட்டு.

தலைவனுடன் கொண்ட நட்பைத் தோழி பழித்துரைக்கத் தலைவி அதை மறுப்பது.

**யாத்தேம் யாத்தன்று நட்பே**
**அவிழ்த்தற்கு அரிதது முடிந்தமைந் தன்றே *(313)***

இவ் இறுதியடிகள், ஒருமுறை ஒருவனைக் காதலித்துவிட்டால் அது அவிழ்க்கவே முடியாத முடிச்சுப்போல, நன்கு இறுகக் கட்டப்பட்டது ஆகும் என்று, தலைவியின் மனக்கருத்தை வெளிப்படுத்துகின்றன.

புறத்தொழுக்கம் போனவன் திரும்பிவந்தான்; சிறு ஊடலுக்குப் பிறகு தலைவியும் அவனை ஏற்றுக் கொண்டாள். இப்போது பஞ்சணையில், அவன் தன் புதல்வனைத் தழுவிக் கொண்டான்; அவளோ அவன் முதுகைத் தழுவிக் கொண்டாள். குடும்பக் காட்சி இவ்வாறு இறுதியடிகளில் முடிவடைகிறது.

**புதல்வன் தழீஇயினன் விறலவன்**
**புதல்வன் தாய்அவன் புறம்கவைஇ யினளே *(359)***

'ஒருவர் பொறை, இருவர் நட்பு' என்ற நாலடியார் போலவேதான் குடும்பங்கள் நடந்துள்ளன.

## இடையிடையே வருவனவும் தனித்து நோக்கத் தக்கனவாதல்

**பொன்செய் புனைஇழை கட்டிய மகளிர்**
**கதுப்பில் தோன்றும் புதுப்பூங் கொன்றை *(21)***

**பொழுதிடை தெரியில் பொய்யே காமம் *(32)***

**நரந்தம் நாறும் குவைஇரும் கூந்தல் *(52)***

**உரவுஉரும் உரறும் அரைஇருள் நடுநாள் *(190)***

இவை முறையே கொன்றை, காமம், கூந்தல், நள்ளிரவு பற்றியவை என்றால், முழுவதுமாக அவற்றை உணர்த்துவனவாகும்.

## பேச்சுநடை

சங்கப் பாடல்கள் பல இன்று நாம் உரையாடுவது போலவே, அமைந்துள்ளன. அவற்றின் பாநடை, நம் அன்றாடப் பேச்சு நடையைப் போலிருப்பது, அவற்றின் முன்னைய வாய்மொழி இலக்கியவழியாக இருக்கலாம்.

## சீற்றத்தில் வரும்பேச்சு

ஒருவர் தற்பெருமை பேசும் ஆணவக்காரராக இருந்தால், 'அவர் தம்மைப் பெருஞ்செல்வர் என்று நினைத்தால் அப்படியே இருந்து போகட்டும்; நாம் ஏழையாகவே இருந்துவிட்டுப் போவோம். இதிலென்ன வந்தது' என்பதுண்டு அல்லவா?

**அருளும் அன்பும் நீக்கித் துணை துறந்து**
**பொருள்வயின் பிரிவோர் உரவோ ராயின்**
**உரவோர் உரவோ ராக!**
**மடவம் ஆக மடந்தை நாமே *(20)***

அருள் அன்பையெல்லாம் கைவிட்டு, அவருக்குத் துணையாகிய என்னையும் பிரிந்து, பொருள்தேடப் பிரிபவர், மிக்க அறிவுடையவராம். அஃது சரியெனின் அறிவுமிக்க அவர் அறிவு

மிக்கவராகவே இருந்து போகட்டும்! நாம் அறிவற்ற மடவராகவே இருந்து போவோம்!

பிரிவை விரும்பாத தலைவி தோழிக்குக் கூறியது இது.

## வேற்றுமை இல்லாத மனவேற்றுமை

எனக்கும் அவருக்கும் எந்த மனவேற்றுமையும் இல்லை. சண்டையோ, சச்சரவோ எதுவுமே இல்லை. இப்பவும் நான் அவருடன் ஒற்றுமையா இருக்கத்தான் செய்கிறேன். இவ்வளவு பழகிய அவரு, நான் அவருக்குக் கொடுத்த கடனைப் பற்றிப் பேசவேமாட்டேன் என்கிறார். அந்த ஒன்றிலேதாங்க எங்களுக்குள் மனவேற்றுமை. இவ்வாறு உலகில் பேசுவோர் பலர்.

**ஒன்றேன் அல்லேன் ஒன்றுவென், குன்றத்துப்**
**பொருகளிறு மிதித்த நெரிதாள் வேங்கை**
**குறவர் மகளிர் கூந்தற் பெய்ம்மார்**
**நின்றுகொய மலரும் நாடனொடு**
**ஒன்றேன் தோழி ஒன்றி னானே** *(208)*

உனக்கும் அவருக்கும் என்ன 'தகராறு' என்று கேட்டாள் தோழி. அப்படி ஒன்றும் இல்லை என்றாள் தலைவி.

அப்படியானால் அவர்மீது ஏன் வருத்தப்படுகிறாய் - என்றாள் தோழி. ஒரே ஒரு விசயத்தில் மட்டும்தான் அவருக்கும் எனக்கும் ஒத்துவரவில்லை. அவர் திருமணம் செய்துகொள்ளாமல் காலம் தாழ்த்துகிறார். அதனால் மட்டுமே எங்களுக்குள் மனவேற்றுமை என்றாள் தலைவி.

ஒன்றேன் அல்லேன் ஒன்றுவல் - நான் அவருடன் ஒற்றுமைப் படாதவள் அல்லள். ஒன்றுபடக் கூடியவளே. ஆனால்

'ஒன்றேன் தோழி ஒன்றினானே' - ஆனால் ஒரே ஒரு விசயத்தில் மட்டும் நாங்கள் ஒற்றுமைப்படவில்லை.'

அது என்ன அந்த ஒன்று.

அதுதான் பாடலில் வெளிப்படையாகக் கூறப்படவில்லை. ''போர்செய்யும் களிறு மிதித்த, நெரிந்து முரிந்து விழுந்த வேங்கை மரத்தில் பூக்கள் பூத்து, மலைக்குறப் பெண்கள், தங்கள் கூந்தலில் சூடிக்கொள்ள, எளிதில் நின்றபடி கொய்துகொள்ள வசதியாக மாறிய அம்மலை நாடனொடு, இந்த ஒன்றில் மட்டுமே எம்முள் மனவேற்றுமை உளது.''

வேங்கை மரம் பூத்துக் குலுங்கும்போது, வேங்கைப் புலிபோல இருக்கும். முன்பு எங்கோ வேங்கையொடு பொருது வந்த யானை, இப்போது தவறாக இம் மரத்தை அப்புலி என நினைத்து, கொம்பால் குத்திச் சாய்த்துவிட்டது. குறமகளிர் முன்பு வேங்கைமரங்களின் கீழேயிருந்து 'புலிபுலி' என்று கத்தி, உதிர்கின்ற வேங்கைப் பூக்களைச் சூடிக்கொள்வர். இப்போது அது சாய்ந்து கிடந்ததால் நின்றபடி அலர் கொய்ய வசதியாயிற்று.

தலைவி ஏதும் குற்றம் செய்யவில்லை. தலைவன்தான் தான் வந்து காதலித்துக் கூடி, இப்போது பொருள்தேடிவரப் போனவன் திரும்பாமல் ஊர் மகளிர் எளிதில் அலர் தூற்றவைத்து விட்டான் என்ற கருத்து உள்ளுறை உவமையாக - குறிப்புப் பொருளாக உளது.

யானை - தலைவன். வேங்கை - தலைவி. குறமகளிர் அலர் பறித்தல் - இங்கு முன்பு அலர்தூற்ற இயலாத அவர்கள் இப்போது எளிதில் அலர்தூற்ற வாய்ப்பாயிற்று.

உள்ளுறை உவமைக்குச் சிறந்த காட்டு இது.

ஒன்றேனல்லேன் ஒன்றுவன், ஒன்றேன் தோழி ஒன்றினானே - என்பது அப்படியே பேச்சுநடையை ஒட்டியது.

பாடல்கள் எல்லாமே கூற்றுமுறையாதலின், நூற்றுக் கணக்கில் இன்றைய பேச்சுநடையையும், அன்றைய பாடல்களில் காண்கின்றோம்.

## சொல்லழகு படுத்தல்

வைகா வைகல் வைகவும் வாரார்
எல்லா எல்லை எல்லவும் தோன்றார் (285)

நிலைநில்லாத 'பகல்கள்' வந்துவந்து போய்க்கொண்டே இருக்கவும் வாரார். எல்லா இரவுகளும் வந்துவந்து செல்லவும் நம்முன் தோன்றார்.

இவ்வாறு தலைவனை எதிர்பார்க்கும் தலைவி தோழியிடம் வருந்திக் கூறுகிறாள். இதைப் பாடிய பூதத் தேவனுக்குச் சொல் விளையாட்டில் ஆர்வம் இருந்துளது.

- - - துறைஅணிந் தன்றுஅவர் ஊரே, இறைஇறந்து
இலங்கு வளை நெகிழச் சாஅய்ப்
புலம்பு அணிந்தன்று அவர் மணந்த தோளே (50)

குன்றியனார்க்கும் சொல்லழகுபடப் பாடுதலில் விருப்பம் போலும். அவரது நீர்த்துறை பூக்களை அணிந்தன்று (அழகு பெற்றது). அவரை மணந்த என் தோள்களோ, மணிக்கட்டைக் கடந்து கழன்று வளையல்கள் விழுமாறு உடல்மெலிந்து, புலம்பு (தனிமைத்துயர்) அணிந்தன்று என்று பாடியுள்ளார்.

## உயர்வு நவிற்சி

சங்கப் புலவர்கள் தமிழ் இலக்கிய மரபுப்படி இயற்கை இகந்தவற்றில், நம்பு முடியாதவற்றில் நாட்டங்கொண்டு பாடியதில்லை. நம்பத்தகுந்த அளவு உயர்வுநவிற்சியாகப் பாடுவர்; அதுவும் மெய்ப்பாட்டை விளைக்கும் நோக்கம் கருதியாகும். எம் காதல் வானைவிட உயர்ந்ததென்பர்; நம் அயல் இல் வீட்டினள் நல்லது சொன்னதால் மேலுலக இன்பம் பெற்று, அமிழ்தமும் உண்க என்பர்; தமக்கு வேண்டாதவரை வெளிவர முடியாத நரகத்திற்குப் போகட்டும் என்பர். இவை பலவும் அவ் உணர்வை மேம்படுத்திக் காட்டுபவை. அவ்வளவே.

அழுதழுது, என் கண்ணீர் குளமாயிற்று என்கின்றாள் ஒரு தலைவி. நன்னாகையார் என்ற பெண்பாற் புலவர் பாடியது அப்பாட்டு. தலைவன் பிரியப்போவதாகச் சொல்லி, விளையாட்டாக ஏமாற்றியதால், அவளும் கோபப்பட்டவள் போல், 'ஏன் அச்சுறுத்துகிறீர்! ஒரேயடியாக எம்மைவிட்டுப் போய்த் தொலையும்!' என்று கூறவே, இதனால் அழுதழுது, நாரைகள் மேயும் குளம்போல் தன் மார்பிடையே கண்ணீர் பெருகிவிட்டதாக அவள் கூறுகிறாள்.

**சேறும் சேறும் என்றலின், பண்டைத்தம்**
**மாயச் செலவாச் செத்து, 'மருங்குஅற்று**
**மன்னிக் கழிக'என் றேனே; அன்னோ!**
**ஆசாகு எந்தை யாண்டுளன் கொல்லோ?**
**கருங்கால் வெண்குருகு மேயும்**
**பெருங்குளம் ஆயிற்றுஎன் இடைமுலை நனைந்தே (325)**

சேறும் சேறும் - செல்லுதும், பிரிய நினைக்கிறேன் எனப் பலமுறை கூறுதல். மாயச் செலவு - பொய்யாகக் கூறிய பிரிவு. செத்து - கருதி. மருங்கு அற்று மன்னிக் கழிக - எம் பக்கத்தை விட்டு, நிலையாகப் போய்த் தொலைக. ஆசாகு எந்தை - எமக்குப் பற்றுக்கோடான தலைவன். மார்பிடையே நாரை மேயும் குளமாகுமளவு கண்ணீர் பெருக்கெடுத்து விட்டதாம். பெருங்குளம் ஆனது என்பது உயர்வு நவிற்சி. கருங்கால் வெண்குருகு மேயும் என்றதில், காமநோயால் படும் துன்பம் மேனியை வாட்டுவதைக் குறிக்கும் குறிப்புளது போலும்.

## மிகச் சிறந்த உவமைகள்

கிரேக்க இலக்கியம் அடைமொழித் தொடர்களிலும் உவமைகளிலும் தன்னிகரற்று விளங்குவதென, ஆய்வாளர் பலர் கூறியுள்ளனர். அவர்களுக்குத் தமிழ் இலக்கியத்தை இதுகாறும் அறிமுகப் படுத்தினோமில்லை.

சங்கப்பாடல்கள் உவமைக் களஞ்சியம் எனலாம். நாட்டை, நகரை, ஆற்றை, போரை, ஊரை உவமை சொல்லும் புதுமை தமிழ் இலக்கியத்திற்கேயுரிய தனிச்சிறப்பு. குறுந்தொகையில் வரும் உவமைகள் சிறிய இனிய அரிய பொருளுடையன. அவற்றுள் மூன்றை மட்டும் காண்போம்.

## ஊற்றுணர்ச்சிக்கோர் உருவகக்காட்சி

தலைவி தழுவிக் கொள்வதற்கு ஏற்ற இனிமையும் மென்மையும் மணமும் உடைய தளிர் மேனியள். அவள் ஒரு மாலை போன்றவள் என்று புனைகிறார், சிறைக்குடி ஆந்தையார்.

**கோடல் எதிர்முகைப் பசுவீ முல்லை**
**நாறிதழ்க் குவளையொடு இடையிடுபு விரைஇ**
**ஐதுதொடை மாண்ட கோதை போல**
**நறிய நல்லோள் மேனி**
**முறியினும் வாய்வது முயங்கற்கும் இனிதே** **(62)**

காந்தளின் தோன்றிமுளைக்கும் மொட்டு, பசிய செவ்வி மிகுந்த முல்லைப்பூ, மணக்கும் இதழுள்ள குவளை இவற்றை இடையிடையே வைத்துத் தொடுத்த, அழகிய மாட்சிமைப்பட்ட மாலை போன்றது, தலைவியாம் நறுமணமிக்கவளின் மேனி. அது தளிரைவிட நிறமும் மென்மையுமுடையது. தழுவிக் கொள்ளுதற்கு மிகவும் இனியது. (கோடல் - காந்தள். ஐது தொடை - அழகு பெறத் தொடுத்த. முறி - தளிர்.)

இது தழுவி இன்பம்துய்த்த தலைவன் நலம் பாராட்டியது. முதலில் கூடி மகிழ்ந்தவன், மீண்டும் கூட விரும்பும் நெஞ்சிற்குச் சொல்லியது என்பார் அடிக்குறிப்பாளர்.

கண்ணாற் கண்டதை, காதாற் கேட்டதையெல்லாம் உருக்காட்சிப் படுத்தி, ஐம்புல நுகர்ச்சிபோல் உணர்த்துவது எளிது. தொடுதல் என்னும் ஊற்றுணர்ச்சியை, அவ்வாறே பாடலின்மூலம் நெஞ்சிற்கு உணர்த்தி, 'உரு'ப்படுத்திக் காட்டுவது

கடினம் என்பர் மேனாட்டார். இப்பாடல் தொடுதலால் வரும் இன்பத்தை, படிப்பவர்பால் உணரவைக்கிறது.

## பழிஓரிடம் பாவம் ஓரிடம்

சிலபோது ஒருவர் தம் மகிழுந்தை நெறிப்படி ஓட்டிச் செல்வார்; எதிரே வருபவர் தவறால் இவருக்கு விபத்து நேரிடலாம். தாம் செய்யாத தவற்றுக்கு பல ஆயிரம் செலவழிக்க நேரும். ஒருவர் புலர்காலையில் தெருவோரமாகப் பயிற்சிநடை போய்க் கொண்டிருந்தார். இருசக்கர வண்டியில் வந்தவன், தாறுமாறாக ஓட்டி, ஓரமாய்ப் போனவர்மேல் மோதி வீழ்த்தி விட்டான். தாம் செய்யாத தவற்றுக்கு, எலும்புமுறிவு ஏற்பட்டு அவர் பல திங்கள் மருத்துவமனையில் அல்லற்பட நேர்ந்தது.

இதுபோல உலகில் நடப்பன பல. இரவுநேரம் தலைவியைப் பார்க்க வந்தவன், தவறுதலாக அடையாளப் படுத்தவே, தலைவி வந்து பார்த்தபோது அவனைக் காணோம். இதனால் தலைவிக்கு ஏமாற்றம் ஏற்பட்டு, அவள் வருந்த நேர்ந்தது. இதனைத் தலைவி தோழியிடம் கூறுவதாகக் கபிலர் பாடிய அகப்பாட்டில், உவமைதான் மிகுசிறப்புடன் திகழ்கிறது.

**மெய்யோ வாழி தோழி! சாரல்**
**மைபட்டன்ன மாமுக முசுக்கலை**
**ஆற்றப் பாயாத் தப்பல், ஏற்ற**
**கோட்டொடு போகி யாங்கு நாடன்**
**தான்குறி வாயாத் தப்பற்குத்**
**தாம்பசந் தனஎன் தடமென் தோளே** *(121)*

மலைச்சாரலில், கரிய மையைப் பூசினாற்போன்ற கருமுகத்தை யுடைய ஆண்குரங்கு, வலுவுடன் தாவாத அதன் தப்பினால், அதை எதிரே தாங்கிய கொம்பில் மோதி அது முறிந்துபோனது போல, தலைவன் செய்த அடையாளமாம் குறி தப்பிப் போனதற்கு, என் அகன்ற மெல்லிய தோள்கள் பசப்புற்றன. அவன் மீண்டும் வந்தனன் என்று சொல்கிறாயே, தோழி! நீ

சொல்வது உண்மையா? (மாமுகம் - கருநிற முகம். முசுக்கலை - ஆண் குரங்கு. குறி - அடையாளம். வாயாத் தப்பல் - குறி வாய்க்காது தப்பிப் போயினமை.)

அகத்திணைப் பாடல் என்பது, அன்றைய மன்னாயச் சூழலைப் பற்றியது. ஆனால் அதைப் பொதுமைப்படுத்தி, இத்தகைய உவமைகளால், இன்றும் பெரிதும் பொருந்துமாறு பாடியுள்ள புலவர்தம் திறனே போற்றுதற்குரியது.

## கையாலாகாத நிலைமை

முற்காலத்தில் ஒரு தலைவன் ஒரு பெண்ணைப் பார்த்துக் காதல்கொண்டான். அதே நினைவாக வருந்தி வாடி வதங்கினான். இதை அவன் பாங்கன் நகையாடிக் கேலிசெய்தான்! அதற்கு அத் தலைவன் தன்னால் தடுக்கமுடியாத அளவு இக் காமநோய் தன் உள்ளத்தையும் உடம்பையும் பாதித்துவிட்டதாகக் கூறி வருந்தினான். தன் எல்லையை மீறி அது தன்னைத் தாக்கியதற்கு அவன் சொன்ன உவமைதான், இன்றும் பொருந்துவதாக உளது. வெள்ளிவீதியார் என்ற பெண்பாற் புலவர் பாடல் அது.

**இடிக்கும் கேளிர்! நும்குறை யாக**
**நிறுக்கல் ஆற்றினோ நன்றுமன் தில்ல;**
**ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கில்**
**கையில் ஊமன் கண்ணிற் காக்கும்**
**வெண்ணெய் உணங்கல் போலப்**
**பரந்தன்று இந்நோய், நோன்றுகொளற்கு அரிதே (58)**

என்னை இடித்துரைக்கும் பாங்கனே! நீர் வேண்டுவதற்கேற்ப, என்னால் இந்நோயை நிறுத்தமுடிந்தால் நல்லதுதான். அது என்னால் முடியவில்லையே! சூரியன் காயும் வெப்பம் மிகுந்த பாறையின்மேலே, வெண்ணெய்த்திரள் உருகுவதை, கையில்லாத ஊமை கண்ணாற்கண்டும் அதை எவ்விதத்தும் தடுக்க இயலாமை போல, இக்காமநோய் என்னுடலில் பரவுகின்றது. இது தாங்குதற்கரிய துன்பமாக இருக்கிறது.

ஞாயிறு காயும் குன்றின்மேல் கையில்லாத ஊமன், கண்ணிற்கண்டும் காக்கவழியில்லாத உருகும் வெண்ணெய் போல-என்ற உவமை இன்றும் கையாலாகாத, துன்பம் துடைக்க முடியாத, செயலற்ற எவருக்கும் பொருந்தும்தானே?

## முடவனும் கொம்புத்தேனும்

'முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டாற்போல' என்பது பழமொழி. பழமொழியையும் விடுகதையையும் இலக்கிய வகைப்படுத்துவார் தொல்காப்பியர். இன்றும் இவை ஏட்டில் எழுதப்பட்டாலும் வாய்மொழி இலக்கியங்களே. பரணர் இப் பழமொழியை உவமையாக்குகின்றார். தலைவன் பிரிவில் வருந்தினான்; வீட்டிற்கு வந்தும் பாராமுகமாகத் திரிந்தான். 'போனால் போகட்டும். அவரைப் பலமுறை கண்ணாற் காண்பதே நம் மனத்துக்கு இனிதாயிருக்கிறது' என்று தோழியிடம் கூறித் தலைவி ஆறுதல் பெறுகிறாள்.

**குறுந்தாட் கூதளி ஆடிய நெடுவரைப்**
**பெருந்தேன் கண்ட இருங்கால் முடவன்**
**உட்கைச் சிறுகுடைக் கோலிக் கீழிருந்து**
**சுட்டுபு நக்கியாங்கு, காதலர்**
**நல்கார் நயவாராயினும்**
**பல்காற் காண்டலும் உள்ளத்துக்கு இனிதே** **(60)**

தோழி! குறிய தண்டையுடைய கூதளஞ்செடி அசைந்தாடும் உயர்ந்த மலைமீது, பெரிய தேனடை இருக்கக் கண்ட, பெரிய காலையுடைய முடவன், கீழே இருந்தபடி, உள்ளங்கையைச் சிறு குடைபோலக் குவித்து, மேலேயிருக்கும் தேனடையைச் சுட்டிக் காட்டி, நக்கி இன்புற்றாற்போல, நம் காதலர் நமக்கு அருளார், நம்மை விரும்பாராயினும், அவரைப் பலமுறை கண்ணாற் கண்டால் கூடப் போதும். அதுவே நம் உள்ளத்திற்கு இன்பம் தருகின்றது.

## மரபுத் தொடர்கள்

நகுதல் என்பதும் நகைவிளையாட்டு என்பதும் காதலர் கூடி மகிழ்தலைக் குறிக்கிறது (320, 394). கதவு திறப்பல் என்பது இரகசியத்தை, மறைபொருளை வெளிப்படுத்துவதைக் குறிக்கிறது. (321). அமைதல் என்பது மனம்பொருந்தி வாழ்தலைக் குறிக்கிறது (4). விழவு என்பது மகிழ்ந்து கொண்டாடும் வாழ்வையும் குறிக்கிறது (295). கருவி மாமழை என்பதில் கருவி என்பது இடி, மின்னல் முதலானவற்றைக் குறிக்கிறது (42).

## அரிய செய்திகள்

### 1. சேமச் செப்பு

முற்காலத்தில் அறிவர் என்பவர் பருவ வரவு முதலியவற்றை முன்னறிந்து சொல்லும் வானியல் வல்லுநராக விளங்கினர். அத்தகைய அறிவரைக் கண்டு தோழி, கூதிர்காலம் எப்பொழுது வரும் என வினவும்போது, குளிர்காலத்தில் வெப்பத்தைக் காத்துத் தரும் சேமச் செப்பில் வெந்நீரைப் பெறுவாயாக என வாழ்த்துகின்றாள். முன்பு பெரிய மூங்கில் குழாய்களில் இருபுறமும் கணுவுள்ளதில் துளையிட்டுத் தூய்மைப்படுத்தி, வெந்நீரை ஊற்றிவைத்தால், அது சூடு குறையாமல் இருந்துளது. இன்று 'பிளாஸ்க்' (Flask) என்பதை இது நினைவூட்டுகிறது. (குறு. 277)

### 2. கணந்துள் பறவை

கணந்துள் பறவை, ஆறலை கள்வர்கள் வழியிடையே மறைந்திருப்பதை முன்கூட்டி, ஓசை எழுப்பி அறிவிக்குமாம். அக் குறிப்பறிந்து, 'சாத்து' எனும் வணிகர் கூட்டம், வழியை மாற்றிக் கொண்டு வேறுவழியாகச் செல்லுமாம். 'இருங் கோட்டு, அம் சிறை, நெடுங்கால் கணந்துள் ஆள்அறிவுறீஇ' அவ்வழியில் செல்வோரை எச்சரிக்குமாம் (குறு. 350). கரிய கொம்பையும் அழகிய சிறகையும் நீண்ட கால்களையும் உடையது கணந்துள் பறவை.

### 3. ஞெகிழி

ஞெகிழி - தீக்கடைகோல் மூலம் பற்றவைக்கப்பட்ட நெருப்புக் கொள்ளிகள். தினைப்புனத்துப் பரணில், இரவில், ஆங்காங்கு தினைப்புனந் தோறும் ஒளி உமிழ்வது, வானத்தில் விண்மீன்கள் ஒளிவீசுவது போல இருக்கிறது (குறு. 150).

### 4. கொல்லிப்பாவை

கொல்லிமலையில், குடைந்து செதுக்கப்பட்ட பாவை ஒன்று மிகுந்த அழகுடையதாக இருந்தது. அது கண்டாரைக் கொல்லும் படியான பேரழகுடைய சிலையாம். மகளிரின் அழகு, மென்மை, பொலிவிற்குக் கொல்லிப் பாவை உவமை கூறப்படும் (குறு. 100, 89).

### 5. பொற் காசு

வேப்பம் பழம் மஞ்சள்நிறப் பொன்போல நீள் உருண்டை வடிவாக இருக்கும். பொன்கம்பியில் அப் பொற்காசுகளைக் கோத்து, காசுமாலை செய்வது இன்றும் உளது. பொற்கொல்லர், தம் நீண்ட கூரிய நகத்தால் பொற்காசைக் கோப்பது, கிளி தன் நீண்ட அலகில் வேப்பம்பழத்தைக் கொத்திவைத்திருப்பது போல உளதாம் (குறு.67).

### 6. வேள்வியில் விருப்பம்

தமிழக வேந்தர்கள் இமயம்வரை வென்றனர். அங்கிருந்த அந்தணர்களை அழைத்து வந்து, அவர்கள் சொற்கேட்டு, நாள்தோறும் வேள்வி செய்யும் ஆசையிலேயே மூழ்கிப் போயினர். தலைவனைத் தலைவி வரவேற்க, எதிர்கொள்வதைக் கபிலர், 'நெய் பெய்தீயின் எதிர்கொண்டு' (106) என்று உவமை கூறுகிறார். வேள்வியில் நெய்யை ஊற்றும்போது, நெருப்பு மேலே கூவி எரிவது உவமையாகிறது.

### 7. விருந்தினரைக் கூவி அழைத்தல்

முற்காலத்தில் வெளி ஊரிலிருந்து வருபவர்கள் தங்குவதற்கும் உண்பதற்கும் விடுதி வசதிகள் எதுவும் இரா. இந்

நிலையில், வள மனைகளில், வெளியே திண்ணை வைத்துக் கட்டும் பழக்கம் ஏற்பட்டது. பலரும் வந்துபோகுமாறு அமைந்த, வெளிவாயிற் கதவை அடைக்குமுன், வீட்டார், வெளியே வந்து, 'பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர், வருவீர் உளரோ' எனக் கூவுவார்களாம். யாரும் வரின் உணவு தந்து, உறையுளும் தருவராம். *(118)*.

**8. மதியம் - மாதம்**

வளர்பிறை பதினான்கு நாட்களை வெள்ளுவா என்றனர். தேய்பிறை பதினான்கு நாட்களைக் காருவா என்றனர். இவை வடவரால் முறையே சுக்கிலபட்சம், கிருஷ்ண பட்சம் என மொழியாக்கம் செய்துகொள்ளப்பட்டன. நிறைநிலவு பௌர்ணமி, மறைநிலவு அமாவாசை. 'உவா பதினான்கு' என்பது நிகண்டு. மறைநிலா அமாவாசைக்குப் பின் முதல் பிறையும், இரண்டாம் பிறையும் கட்புலனாவதில்லை. மூன்றாம் பிறையை, மகளிர் காத்திருந்து காண்பர். இன்றும் சிற்றூர்களில் இவ்வழக்கம் உளது. முன்பு நாள்காட்டியும் மாதங்காட்டியும் வானமேயாகும். மூன்றாம் பிறை அடுத்த மாதப் பிறப்பை உணர்த்துவதால், ஆண்டுப் பிறப்பைக் கொண்டாடுவதுபோல், மாதப்பிறப்பைக் கொண்டாடினர். மூன்றாம் பிறையைக் காத்திருந்து பார்க்க முயலும்போது, முகில் இடைவந்து மறைத்தல் கூடும். எனவே இது அரியதாகக் கருதப்பட்டது. 'தொழுது காண் பிறை' எனப்பட்டது இது *(178)*. ஒரு தலைவி மூன்றாம் பிறை சிறிதுநேரம் தோன்றி உடனே மறைவதாகலின், அதைக் கண்டதும், 'ஐயோ, அடுத்த திங்களும் வந்துவிட்டதே, இன்னம் அவர் வரவில்லையே' என ஏங்குகின்றாள். 'வளையுடைத் தனையது ஆகிப் பலர்தொழச் செவ்வாய் வானத்து ஐ எனத் தோன்றி, இன்னம் பிறந்தன்று பிறையே, அன்னோ, மறந்தனர் கொல்லோ தாமே' என அழுகின்றாள் *(307)*. 'இன்னம் பிறந்தன்று பிறையே' என்றால், அடுத்த மதியமும் (மாதமும்) வந்துவிட்டதே என்பது பொருள்.

பெண்ணின் நெற்றி அழகைப் பாடவந்த கோப்பெருஞ் சோழன், 'மாக்கடல் நடுவண் எண்ணாள் பக்கத்து, பசுவெண் திங்கள் தோன்றியாங்கு' - தலைவியின் அடர்த்த கூந்தலிடையே அவள் நெற்றி விளங்குவதாகத் தலைவன் கூற்றில் வைத்துப் புனைகின்றார் *(129)*. எண் நாள் பக்கம் என்பதை அவர்கள் 'அஷ்டமி' என்றனர். பக்கம் என்பதைப் 'பக்ஷம்' என்றனர். இவ்வாறு தமிழர்களின் வான நூலறிவு, இடைப்பட்ட ஐந்தாறு நூற்றாண்டுகளில் முழுவதும் கொள்ளை கொள்ளப்பட்டுப் பறிபோயிற்று. 'பெட்டி பறிபோனால் என்ன, திறவுகோல் என்னிடம்தானே இருக்கிறது' என, அடிமைத் தமிழன் அமைதி தேடுகின்றான். இன்று தமிழ்ச்சொற்களை ஆங்கிலம் விழுங்குகிறது.

### 9. பொன் செய்திறன்

பொன் - உலோகம், பொதுப்பெயர். வெண்பொன் - வெள்ளி. பைம் பொன் - தங்கம். செம்பொன் - செம்பு. இரும்பொன் - இரும்பு. மெழுகினால் கரு அமைத்து, 'வார்ப்பு' வேண்டியவாறு செய்து, கொல்லனது ஊதுலையில் இவ் உலோகங்களை உருக்கி, அவ் வார்ப்பில் ஊற்றினால் வேண்டிய அணிகலனோ, பிற கருவியோ கிடைத்துவிடும். முன்பு தேரில் பூட்டப்படும் மணிகளை ஒரே மாதிரியாக, இவ்வாறு செய்துள்ளனர். 'மெழுகு ஆன்று, ஊதுலைப் பெய்த, பகுவாய்த் தெண்மணி' ஆர்ப்பத் தேர்வரும் ஓசைகேட்பது பற்றிக் கூறப்படுவதால் இவற்றை அறியலாம் *(155)*.

### 10. புணை - தெப்பம்

கட்டுமரம் முதல் பாய்மரக் கப்பல், வங்கம் எனும் பெருங்கப்பல் வரை பலவகையான, நீரில் பயணிக்கும் மிதவைகள் பற்றிச் சங்கப் பாடல்கள் குறிப்பிடுகின்றன. மகளிர் புணை எனப்படும் இத் தெப்பத்திலேறி விளையாடுவது பற்றிய குறிப்புளது *(222)*.

### 11. சிறுவர் விளையாடும் நடைவண்டி

'தச்சன் செய்த சிறுமா வையம்' - சிறிய குதிரை வடிவிற்பூட்டிய நடைவண்டி. (வையம் - வண்டி, மா - குதிரை). சிறுவர்கள் அதன்மேல் ஏறி ஓட்டி இன்புறாவிட்டாலும், கையால் இழுத்து ஓட்டி இன்புறுவராம் *(61)*.

### 12. நிமித்தம் பார்க்கும் வழக்கம்

தமிழர்களுக்கு முழுநல்ல நாள் பார்த்து எதையும் தொடங்கும் வழக்கம் இருந்தது. சிலம்பு இதை 'முழுத்தம்' என்னும், அதையும் 'முகூர்த்தம்' ஆக்கினர். பல்லி முதல் பறவை வரை நிமித்தம் பார்க்கும் முறைகளும் விரிச்சி என நற்சொல் (அசரீரி) கேட்கும் பழக்கமும் இருந்தன. 'வேதின வெரிநின் ஓதி முதுபோத்து, ஆறுசெல்மாக்கள் புட்கொளப் பொருந்தும் சுரன்' *(140)* என வருகிறது. கரிக்கரிவாள் போன்ற முதுகையுடைய முதிய ஆண் ஓந்தி, சுர வழியிற் செல்லும் மக்கள் நிமித்தம் பார்க்க உதவுமாம்.

சில சமயம் இந் நிமித்தம் என்பது இயல்பாக அமைவதே. ஒரு நன்மை வருமுன் அதற்கான அறிகுறிகள் தென்படும். 'என்றன் இடதுதோளும் கண்ணும் துடிப்பதென்ன, இன்பம் வருகுதென்று சொல் சொல் கிளியே' எனப் பாடுவர். 'கண்ணகி கருங்கணும் மாதவி செங்கணும், - - - எண்ணுமுறை இடத்தினும் வலத்தினும் துடித்தன' (காதை 5). கண்ணகியைத் தேடி கோவலன் திரும்பப் போவதையும் அவன் மாதவியைப் பிரியப்போவதையும் இவை முன்னறிவித்தனவாம். மழைவருமுன் காற்றடிக்கும் திசையையும் மண் வாசனையையும் ஈ மொய்த்தலையும் பறவைகள் கூடுகள் நோக்கிப் பறத்தலையும் முன்னறிவிப்பு எனக் கருதுவதுண்டல்லவா?

தோழி தலைவியிடம் அவர் வருவார் என்பதற்கு அடையாளமாக, சில நல்ல அறிகுறிகள் தோன்றுகின்றன என்று கூறுகிறாள். "பறவைகள் வானில் மேல்நோக்கிப் பறக்கின்றன. அடர்ந்த புதர்களிலுள்ள பூமொட்டுக்கள், வண்டுகள் ரீங்காரமிடுமாறு,

வாய்நெகிழ்ந்து மலர்கின்றன; வளையல்களால் பொலிந்த தோளும், சற்றுப் பெருத்து, வளைகள் செறிகின்றன. அதனால் அவர் விரைவில் வருவார் போலும்'' என்று கூறுகின்றாள். இதில் ஓர் இயற்கையியலும் உளவியலும் உள்ளன போலும் என எண்ணத் தோன்றுகிறது *(260)*.

## 13. மகளிர் விளையாட்டு

அக்காலச் சூழலுக்கேற்ப மகளிர் விளையாட்டு மிக எளிமையாய் உள்ளன. ஆயத்தாருடன் பந்தடித்து விளையாடுகின்றனர். *(396)*. ஓரை விளையாட்டு என்பது ஒன்று. பூக்களால் செய்த சிறு பாவையைக் குழந்தைபோல் வைத்து விளையாடுவதுண்டு *(28)*. மண்ணைக் கொண்டு சிறுவீடு கட்டிச் சிறு சோறு சமைத்து விளையாடுவதை 'வண்டல்' என்று குறிக்கின்றனர் *(238)*. இவ்வாறு ஓரை - எனும் விளையாட்டைக் கூட்டமாக ஆடும் மகளிர், கடற்கரையிலே திரியும் அலவன் எனும் நண்டினைப் பிடித்து ஆட்டி விளையாடுவர். இவ்வாறு மகளிரிடம் அகப்பட்டு வருந்தும் நண்டினை, பெரியதொரு அலை வந்து இழுத்துப்போய் விட அதன் துன்பம் நீங்கியதாம் *(316)*.

## நாழிகைக் கணக்கு

இரவு முழுவதும் விழித்து காலக் கணக்கை ஆய்வர், நாழிகைக்கணக்கர் எனப்பட்டனர். அவர்களைப் போல் தானும் இரவெல்லாம் உறக்கமின்றி வருந்தியதாகத் தலைவி தோழியிடம் சொல்கிறாள்*(261)*.

## 15. நெல்லி மரம் வளர்க்கும் ஓர் அறம்

தண்ணீர்ப் பந்தல் வைத்து, வேட்கை தீர்ப்பதை அறம் என்று இன்று கருதுகின்றோம், அன்று காட்டுவழியில், குறிப்பாகப் பாலை என்னும் வறண்ட வழிகளில் குடிக்க நீர்கூடக் கிட்டாதபோது, மக்கள் நெல்லிக்காய்களைத் தின்று தாகத்தை - நீர்வேட்கையைத் தணித்துக்கொண்டுள்ளனர். அவை கோடைக் காலத்தில் தழைத்துக் காய்க்கும் என்பதும் குறிப்பிடற்பாலது. இதனால் நெல்லி மரங்களைப் பாதை ஓரங்களிலும் காடுகளிலும்

மிகுதியாக வளர்ப்பதை, ஒரு தருமம் - அறம் எனப் போற்றி யுள்ளனர். இது பல பாடல்களில் வருகிறது. 'அறம் தலைப்பட்ட நெல்லியம் பசுங்காய், மறப்புலிக் கோள் இடம் கறங்கும் இறப்பருங்குன்றம்' *(209)*. வழிப்போவார் உயிரைக் காத்தலால், அறத்தைக் கொண்டு திகழும் நெல்லியின் பசுங் காய்கள், புலிக்குட்டிகள், எளிதில் கொள்ளக்கூடிய இடங்களில் விழுந்து உருளும் கடத்தற்கரிய குன்றம்'. நெல்லிக்காய் நீராகவும் உணவாகவும் பயன்பட்டு, அடுத்த ஊர் சேரும்வரை உயிரைக் காத்ததால் அறம்தலைப்பட்டதாயிற்று.

## 16. முறை மன்றம்

அக் காலத்தில் ஊர் நடுவே மன்றங்கள் இருந்தன.அவை பொதியில், அம்பலம் என்றும் அழைக்கப்பட்டன. அங்குதான் ஊராட்சி, நீதி கூறும்(பஞ்சாயத்து) முறைமன்றம், வழிபாடு மூன்றும் இருந்தன. தலைவன் பிரியேன் என வஞ்சினம் கூறி, சூள் உரைத்தவன், இப்போது வேற்றவர் மணம் பேச வரும்போது பேசாதிருப்பது முறையோ என்பது தலைவியின் கேள்வி. ஏனெனில், பிழையா வஞ்சினம் செய்த கள்வனும் கடவனும் புணைவனும்தானே*(318)*. சொன்ன சொற் பிழைத்த கள்வனும், அதனை வினவித் தீர்ப்புக்கூறவேண்டியவனும், அதற்குச் சான்றாகக் கூடியவனும் அவன் ஒருவனே. அதனால் யாரிடம் போய் முறையிடுவேன்?

## 17. ஆடுகளம்

முன்பு நாற்சந்திகளில், தெருக்களில் கூத்துக்கள் நடந்துள. இவற்றுக்கென ஆடுகளங்களும் அமைக்கப்பெற்று, அரங்கம் ஏறி ஆடியுள்ளனர். துணங்கை *(31)*, வள்ளை *(89)*, மேலும் பல மள்ளர் ஆடல்பாடல் எனப் பலவும் நிகழ்ந்துள.விளரி எனப்படும் இரங்கற்குரிய நெய்தற்பண் குறிக்கப்படுகிறது*(336)*. பாணர் பாடும், உச்சத்தைத் தொடும் (ஸ்தாயி) படுமலைப் பாலைப்பண் பற்றிய குறிப்புளது *(323)*.

## 18. கொல்லர் தொழில்

இரும்பு முதலியன நெருப்பில் காய்ச்சி உருக்கப்பட, கொல்லர்கள் ஊதுலை ஒன்றை வைத்திருப்பர். அதன் தோலை மிதிக்குந்தோறும், காற்று பாய்ந்து, நெருப்பு எரிந்து, இரும்பு உருகும், நெகிழும். அதற்காக அந்தத் தோலை மிதித்தபடி இருப்பர். ஒரு தலைவி தன் நெஞ்சம் அம் மிதி தோல் போல் வருந்துவதாகக் கூறுகிறாள். அதுவும் சுற்றியுள்ள ஏழூர்க்கு, ஒரே ஒரு கொல்லர் ஊதுலை என்றால் என்ன ஆகும்? ஏழூர்ப் பொது வினைக்கு யாத்த, உலைவாங்கு மிதிதோல் போல என்ற உவமையால் இதை அறியலாம் (172).

## 19. கழலும் சிலம்பும்

ஆண்கள் காலடியில் அணிவது கழல், பெண்கள் அணிவது சிலம்பு. திருமணமாகுமுன் இளம் பருவத்தில் அணிவிக்கும் கழலும் சிலம்பும் வேறு அமைப்புடையவை. வளர்ந்த பிற்பாடு, திருமணமானபின் அணியும் வீரக்கழலும் நடனச்சிலம்பும் வேறுவிதமானவை. இங்கே உடன்போக்கில் காதலர் இருவர் இடைச்சுரத்தில் வரக்கண்டோர், ''வில்லோன் காலன கழலே தொடியோள் மெல்லடி மேலவும் சிலம்பே, நல்லோர் யார்கொல் அளியர்தாமே'' என இரக்கப்படுகின்றனர் (7). எனவே திருமணமாகாத காதலர் என எண்ணுகின்றனர். திருமணத்திற்கு முன் சிலம்பு கழிநோன்பு எனும் சடங்கொன்று உண்டு. அது இளமைக் காலத்துச் சிலம்பை நீக்கிவிடுவதாகும்.

## 20. ஆரிய அரசனின் தமிழ்ப்பாட்டு

ஆரிய அரசன் யாழ்ப்பிரமதத்தன் என்பவன் பெயரால் ஒரு நெய்தல் திணைப்பாடல் காணப்படுகிறது(184). கபிலர் ஆரியவரசன் பிரகத்தனை தமிழறிவித்தற்குக் கபிலர் பாடிய குறிஞ்சிப் பாட்டு, என்பது பத்துப் பாட்டுள் ஒன்று. இவர்கள் இருவரும் ஒருவரா, வேறா என்று தெரியவில்லை.

## 21. பாடலி புத்திரநகரம்

வடக்கே பாடலிபுத்திரநகரம் கங்கையாற்றில், சோணை யாறு கலக்குமிடத்தில், வடகரையில் நிறுவப்பட்டு ஆயிரம் ஆண்டுகள் சிறப்புற்று விளங்கிய,புகழ்மிக்க செல்வ நகரம். இன்றைய பாட்னா என்பது, அந் நகரம் இருந்ததை நினைப்பூட்டுவது. மோரிய அரசன் அஜாத சத்ரு அதை நிறுவ, நந்தர் காலத்தில், கி.பி.5ஆம் நுற்றாண்டளவில் அது தென்னாட்டிலும் அறியப்பட்டு புகழ்மிகுந்து திகழ்ந்தது. நந்தர் காலத்துப் பாடலிபுத்திரம் பற்றி, சங்கப்பாடல்களில் வருவது குறிப்பிடற்பாலது.வெண்கோட்டு யானை சோணை படியும் பொன்மலி பாடலி(75) என்று,படுமரத்து மோசிகீரனார் பாடுகிறார். சோணை என்பது ஸ்வர்ணா, சொருணா, சொருணை சோணை என ஆன சொல் என்றும் பொன்னி என்பதே அதன் பொருளுமாகும் என்றும் சோ. ந. கந்தசாமி கருதுகிறார்.

## 22. புள் வாய்த்தூது

பழங்காலத்தில் பறவைகளைப் பழக்கி, அவற்றின் கால்களில் செய்தியை ஓலை முதலியவற்றில் எழுதி, குறிப்பிட்ட இடத்திற்கு அனுப்பும் முறை இருந்தது. அதுவே பிறகு பறவைகளைத் தூதுவிடுவதாகக் கற்பன செய்யப்பட்டது. நளன் கதையில் அன்னம் தூதுவிடப்படுகிறது. புள் வாய்த்தூது - பறவை வாயிலாக விடக்கூடிய தூது(266).

## 23. ஆரியக்கூத்து

ஆரியக்கூத்தாடினாலும் காரியத்திலே கண்ணாய் இருக்க வேண்டும் என்பதொரு பழமொழி. ஆரியர் கயிறாடு பறையில் கால்பொரக் கலங்கி, வாகை வெண்ணெற்று ஒலிக்கும் (7) என்று வருகிறது. கழைக்கூத்தாடிகள் மூங்கில் நட்டு, கயிறு கட்டி, அதன்மேல் நின்று ஆடும்போது, கொட்டும் பறை ஓசைபோல, முற்றிய வாகைமரக் காய்களின் உள்ளேயுள்ள, பரல்கள் காற்றடிக்குந்தோறும் அசைந்து ஒலிக்கும். இக் கழைக்கூத்தாடிகள்

நாடோடிகள் எங்கிருந்தோ வருவார்கள். இவர்களை ஆரியர் என்பது அயலவர் என்ற கருத்திற்போலும். கழை-மூங்கில். இவர்கள் ஆரிய நாட்டிலுள்ள ஒருவகைக் கூத்தர் என்பார் உ.வே.சா.

### 24. பார்ப்பனர்

தமிழகத்தில் தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே, பார்ப்பனர் குடியேறி, தமிழரோடு தமிழராய் வாழ்ந்தனர். அவ்வாறு வாழ்ந்தாலும் தமது வாழ்வு நெறிகளையும் வேள்வி செய்தலையும் கைவிட்டிலர். தமிழகத்தில் பாணர், பொருநர் இருந்த இடத்தையும் அறிவர், கணியர் விளங்கிய இடத்தையும் எவ்வாறோ கைப்பற்றிக்கொண்டனர். பார்ப்பான் தலைவனுக்கு பாங்கனாக, தூதுவனாக எல்லாம் ஒத்துழைத்துள்ளான். பாண்டியன் ஏனாதி திருக்கண்ணன் அவனைப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

**பார்ப்பன மகனே! பார்ப்பன மகனே!**
**செம்பூ முருக்கின் நல்நார் களைந்து**
**தண்டொடு பிடித்த தாழ்கமண் டலத்துப்**
**படிவ உண்டிப் பார்ப்பன மகனே!**
**எழுதாக்கிளவி நின்சொல் லுள்ளும்**
**பிரிந்தோர்ப் புணர்க்கும் பண்பின்**
**மருந்தும் உண்டோ, மயலோ இதுவே (156)**

இது கழறிய (இடித்துக்கூறிய) பார்ப்பனப் பாங்கனுக்குத் தலைவன் வருந்திக்கூறியது.

செந்நிறப் பூவையுடைய புரச மரத்தின் பட்டையை நீக்கிவிட்டு, அதன் தண்டினைப் பிடித்துக்கொண்டு, கமண்டலம் என்னும் செம்பினை அதில் கட்டித் தொங்கவிட்டிருக்கும் பார்ப்பனனே! விரதமிருந்து உணவுண்ணுபவனே! எழுதாக் கிளவி - சுருதி - எனப்படும் உன் வேதத்தில் பிரிந்தவரைச் சேர்த்து வைக்கும் மருந்தும் உண்டோ? கூறுவாயாக! உனது வார்த்தைகள் மயக்கம் தருவன போல உள்ளனவே!

## 25. புலைத்தி

அன்றைய மக்கள் உடைகளைச் சலவைசெய்து, உடுத்திக் கொண்டனர். சலவை செய்பவள் புலைத்தி எனப்பட்டாள். மண்ணுதல் - சலவை செய்தல். மண்ணத்தி வண்ணத்தியாகி வண்ணாத்தி ஆனாள். இன்றும் கஞ்சிப்பசை தோய்த்துத் துவைப்பதுண்டு. நல்லியல்புள்ள புலைத்தி, கஞ்சிப்பசை தோய்த்து எடுத்து, குளத்து நீரினுள் வீசிய ஆடை முறுக்குண்டு, நீரிலிட்ட பருத்த திரிபோலக் கிடக்கும்! இதுபோலப் பகன்றயின் முறுக்கவிழ்ந்த பெரிய, வெள்ளிய பூ உளதாம்.

**நலத்தகைப் புலைத்தி பசைதோய்ந்து எடுத்துத்**
**தலைப்புடைப் போக்கித் தண்கயத்து இட்ட**
**நீரின் பிரியாப் பரூஉத்திரி கடுக்கும்**
**பேரிலைப் பகன்றைப் பொதியவிழ் வான்பூ ---** *(330)*

*(தலைப்புடைப் போக்கி - தலைப்பக்கத்தைத் தண்ணீரில் வீசினாள். கயம் - குளம். பரூஉத்திரி - பருத்ததிரி. கடுக்கும் - போலும். பொதியவிழ் வான்பூ - முறுக்கவிழ்ந்த வெள்ளிய பூ.)*

இவை போன்று நூற்றுக்கணக்கான அரிய செய்திகள் அகப் பாடல்களில் நிரம்பிக் கிடக்கின்றன.

## சிற்றுயிர்களின் வாழ்வு

தாய்க் குரங்கு, இன்னமும் தாவப் பழகாத குட்டியைத் தன் மார்போடணைத்தபடி, தாவித் திரிவதைப் பார்த்திருக்கிறோம். இதை ஔவையார் 'மகவுடை மந்திபோல' என்பார் *(29)*.

ஊர்க்குருவி (சிட்டுக் குருவி) வீட்டில் இறப்பில் கூடுகட்டிக் குடும்பமாக வாழும். இதை இரண்டு பாடல்கள் மிகச் சிறப்பாகக் குறிப்பிடுகின்றன *(46, 85)*.

புறாக்கள் ஆணும் பெடையுமாய் உறவுகொண்டு வாழும் இயல்பின. ஓமை மரத்தின் உலர்ந்த கிளையில் ஏறி,

'ஒய்'யென்ற ஓசையுடன் தனிமையை யுணர்த்தும் குரலுடன் தன் பெண்புறாவை இணைவிழைச்சுடன் ஆண்புறா கூப்பிடும் (பயிர்தல் - இணைவிழைச்சுடன் அழைத்தல்.) *(79)*.

கொக்கு கெண்டைமீனைக் கொத்தப் பார்த்ததும் அது குளத்துள் மூழ்கித் தப்பியது. கொக்கு போனபிறகு, மேலே வந்த கெண்டைமீன், பக்கத்தில் நின்ற வெண்தாமரை மொட்டினைப் பார்த்து, கொக்கோ என அஞ்சியது *(127)*. இது உண்மையாய் இருக்குமா, கற்பனையா? தொல்காப்பிய உரையாசிரியர்கள் ஐயறிவுயிர்களுக்கு மனம் உண்டு என்றும் இல்லை என்றும் விவாதித்துளது நினைவு வருகிறது.

தலைவி தலைவனைத் தலையைச் சாய்த்து, ஒருக்கணித்துப் பார்க்கிறாள். ஈன்றணிமையுடைய தாய்ப் பசுவை, நடுங்கும் தலையையுடைய இளங்கன்று, விருப்பத்துடன் பார்ப்பதுபோல உளதாம், தலைவியின் பார்வை. 'குழவி (கன்று) தாய்காண் விருப்பின் அன்ன சாஅய் நோக்கினளே, மாஅயோளே'. சிறைக்குடி ஆந்தையார் கன்றின் பார்வையைக் கவனித்துப் பார்த்துள்ளார். *(132)*

பாலைநில வழியில் நீர் இராது. யா மரங்கள் அங்கு உயரமாய் வளர்ந்து நிற்கும். அவற்றின் மேல் பட்டையில் ஈரப்பசை இருக்கும். அவ் வழியாகப் போன ஆண்யானை - களிறு தன் பெண்யானை - பிடியின் பசியைக் களைதற்பொருட்டு, மெல்லிய கிளையையுடைய யா மரத்தின் தோலை-ஈரப்பட்டையை உரித்துக் கொடுக்கின்றது.

**நசைபெரிது உடையர்! நல்கலும் நல்குவர்**
**பிடிபசி களைஇய பெருங்கை வேழம்**
**மென்சினை யாஅம் பொளிக்கும்**
**அன்பின தோழி! அவர்சென்ற ஆறே** *(27)*

அவர் சென்ற பாலைவழியில், வேழம் பிடியின் பசியைக் களைவதற்காக, யா மரப் பட்டையை உரித்துத் தரும் அன்புக் காட்சியை உடையது. எனவே அவர் 'நல்கலும் நல்குவர்' - உறுதியாகத் தண்ணளிசெய்து திரும்புவார். இது இறைச்சி என்ற கோட்பாடாகும்.

## இயற்கை உணர்த்தும் பருவ வேறுபாடுகள்

அன்று சிறுபொழுதுகளை மலர்களை வைத்தும் பெரும் பொழுதுகளை (பருவங்களை) பயிரினங்களை வைத்தும் மக்கள் அறிந்து கொண்டனர். சில சான்றுகள் காண்போம்.

**வேம்பு தழைத்துப் பூக்கும் காலம் இளவேனில் (24)**

**பொரிந்த அடியையுடைய கள்ளியின் காய்கள் முதிர்ந்து வெடிக்கும் காலம் முதுவேனில் (கோடை) (154)**

மாரிப் பித்திகம் என்று பிச்சிப்பூ மலரும். 'மாரிப் பீரத்து அலர்' என்று பீர்க்கு பூத்துக்குலுங்கும். (98). மழையாற் செழித்த முல்லைப் பூக்கள் சிரித்துக் குலுங்குவதுபோல இருக்கும் (126). இவை கார்காலம்.

கரும்பு அரும்பிப் பூக்க, அதில் மழைத்துளி விழுந்து மலர்விக்கும் வாடைக்காலம் (35). மீனைத் தேடும் நாரை துன்பப்படுமாறு நீர்த்துளிகளைத் தூவும் 'துயர் கூர் வாடை' வீசும் காலம் (103). இவை கூதிர்காலம்.

'உழுந்தின் ஊழ்ப்படு முதுகாயை, மானினம் கவர்ந்துண்ணும் அரும்பனி அற்சிரம்' (68). 'கொழுங் கொடி அவரை பூக்கும் அச்சிரம்' (82). இவை முன்பனிக் காலம். இது முன்னதாக வரும் பனிக் காலம் என்பது மட்டுமன்றி, முன்னிரவில் பனிபெய்யும் காலமுமாம் என்பர். பயற்றம் பருப்பு முலியவை முதிர்ந்து காய்த்திருக்கும் காலம் பின்பனிக் காலம் (338).

செருமனியில் 'மலர்க் கடிகாரம்' எனப் பெரிய பூக்களில் வைத்து, அவை மலருங் காலத்தைவைத்து, மணியை அறியுமாறு செய்துள்ளனராம். அமெரிக்காவிலும் மிகப் பெரிய பூங்காக்களில் இம் முயற்சி உளது. பூங்காக்களை உருவாக்கும் முயற்சி குறைந்த நம் நாட்டில், கபிலர் பாடியுள்ள 99 மலர்களையும் ஓரிடத்தில் தொகுத்துவைத்து, உலகிற்குக் காட்டுவது நடைபெறுமா?

## கற்பகம் பல்கலைக் கழகம்

ஈச்சநாரி அஞ்சல், கோயம்புத்தூர் 641 021

•

செவ்விலக்கியக் களப் பயிற்சித் தொடர்
Training in Classical Thamizh Literature

சான்றிதழ் வகுப்பு
Certificate Course

•

*பைந்தமிழ் இலக்கியச் சிறப்பெலாம் பயில்வோம்*
*நற்றமிழர் நாமெனும் சிறப்பினைப் பெறுவோம் !*

*நல்ல குறுந்தொகை தமிழ்தந்த பெருந்தொகை*
*உலகிற் சிறந்த குறும்பாட்டுப் புகழ்த்தொகை*
*ஆங்கிலரும் போற்ற அமைந்த நறுந்தொகை*
*பாடல்களின் கட்டமைப்பு, பாடுபொருளின் தனிச்சிறப்பு,*
*உயரிய காதலின் உயிர்த்துடிப்பு, உள்ளுணர்வின் வடிவமைப்பு*
*அனைத்திற்கும் ஓர் அறிமுகம், இதுவே இந்நூலின் தனிச்சிறப்பு!*
*ஊரார் இலக்கியமெல்லாம் கற்கின்றோம் இப்போது!*
*நாமே நம் இலக்கியத்தையும் கற்பது எப்போது?*

தொடர்பு கொள்க

*தமிழ்த்துறைத் தலைவர்*
**கற்பகம் பல்கலைக் கழகம்**
கோயம்புத்தூர் 641 021

**தமிழண்ணல்**
ஏரகம், சதாசிவநகர்
முதன்மைச் சாலை
மதுரை 625 020